www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka


பக்கம் 20

03 - 09 .10 .1993 ரூபா 8/50

දිනමුරසු වාරමලර්

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 19



## போரின்றி வாழ்வது கனவானது
## சாவின்றி பொழுது விடிவதும் பொய்யானது

-எக்ஸ்ரே ரிப்போர்ட்-



தையல்
சமையல்
லேடீஸ் ஸ்பெசல்

சிறுகதைகள்
கவிதைகள்

சித்திரத் தொடர்

புதுமைத் தொடர்

யாசீர் அரபாத் என்ன சொல்கிறார்?

உலக ரவுண்டப்

அகோரமாகியது அழகுராணியின்

-படத்தோடு ஒரு திடுக்கிடும் செய்தி

மனித இறைச்சி உண்ட மருத்துவர்

வியப்பு -வித்தியாசமான செய்திகள்

விறுவிறுப்பான தகவல்கள்!

அசத்தலான வர்ணப்படங்களோடு

சினிவிசிட்

ஆடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வெறும் பெருமை பேசும்
விசயம் அல்ல இது.
நெஞ்சையள்ளும் நேசங்களால்
நெருக்கமாகி விட்டவர்களை-
பல்லாயிரம் வாசக நெஞ்சங்களைப்
பெற்றிருப்பதைவிட
வேறு பேறு என்ன இருக்கிறது!

இப்போதெல்லாம்-
முரசின் வசீகரத்தை மட்டுமே
நாம் கவனித்துக் கொள்கிறோம்.
முரசின் வளர்ச்சியை
வாசக நெஞ்சங்களே கவனித்துக்
கொள்கிறார்கள்.

எங்கு முரசு வரவில்லை,
எங்கு விலையை அதிகமாக்கி விற்கின்றனர்
அக்கறையற்ற முகவர்கள் யார்-இப்படி-
அனைத்து விபரங்களும்
அடுத்த நொடியே கிடைக்குமளவுக்கு
வாசக நெஞ்சங்கள்
தங்களை முரசோடு பிணைத்துக் கொண்டனர்.

நேசித்தல்-நேசிக்கப்படுதல்
சுவையான சுகமே.
எனினும்-
அளவற்ற நேசம்
வெறியாக மாறிவிடக்கூடாது.

கரம் பற்றி நேசம் வெளிப்படுத்தலாம்.
ஆதரவாய் அணைத்து பாசம் பதியவைக்கலாம்.
ஆனால்- வெறி கூடாது.
ஒரு சில வாசகர்கள்
முரசு மீது கொண்டுள்ள நேசத்தால்
நேரில் காட்டிய தீவிரம் கண்டு
அன்போடு அவர்கள் தவறை
சுட்டிக்காட்டவே இதனைச் சொன்னேன்.
கடுமையோடு அல்ல-
உரிமையோடு சொல்லும் விசயம்.

■

வாசகர் வட்டங்கள் அமைத்தல்
விடயத்தில்
சற்றுப் பொறுத்துச் சிந்திக்கலாம்
என்று நினைத்திருந்தோம்.
எனினும்-
தினமும் வந்து சேரும் கோரிக்கைகள்
விரைவுபடுத்துமாறு சொல்லுகின்றன.
மனப்பூர்வமான அன்புக்கு
மறுப்புச் சொல்ல முடியுமா?
விரைவில் அது பற்றிய
முடிவு உங்களைத் தேடி வரும்.

வாசகர் வட்டங்கள் குறித்து
உங்கள்-
உண்மையான அபிப்பிராயங்களை
எமக்கு எழுதுங்கள்.
அரசியல் கலப்பு வேண்டாம்.
அறிவு பூர்வ முயற்சிகள் வேண்டும்.

துரதிஷ்டவசமாக
அரசியலுக்கும்-அறிவுக்கும்
அகண்ட இடைவெளி தோன்றி
அது மேலும் அதிகமாகிக் கொண்டிருப்பதே
இங்கு வரலாறாகிக் கொண்டிருக்கிறது.
எனவேதான்-
அரசியலையும்-அறிவையும்
பிரித்துப் பேச வேண்டியிருக்கிறது.

■

பாராளுமன்றத் தெரிவுக்குழு
ஏமாற்றவில்லை.
எதிர்பார்ப்புப் பொய்க்கவில்லை.
வடக்கு-கிழக்கைப் பிரிப்பதில்
வரிந்து கட்டி முடிவு செய்திருக்கிறது.

நாடு பிரியக் கூடாது
தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகள்
பிரியவேண்டும் என்பது
பிழையான வாதம் மட்டுமல்ல
பிரிவினைக்கு சாதகமானதும் கூட.

பெரிய மனதோடு சிந்திப்பதை
வாக்கு தேடும் சிறிய வட்டங்களுக்குள்
உள்ளவர்களிடம் எதிர்பார்ப்பது மடமை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவால்
எதுவும் முடியாது என்பது
எதிர்பார்க்கப்பட்டதே!
அதனைத்தான்
வெளிவரப் போகும் முடிவுகளும்
வெளிப்படுத்தப் போகின்றன.
ஆக, எதிர்பார்ப்பு பொய்க்கவில்லை.
கணிப்புக்கள் தவறவில்லை.

■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

அன்புடன்
—ஆசிரியர்—

## அட... கமரா உலா! நீங்கள் ரெடியா?

உங்களிடம் கமரா இருக்கிறதா? இருந்தால் இப்போதே புறப்படுங்கள். உங்கள் சூழலில் கண்ணில்படும் வியப்பான - வித்தியாசமான காட்சிகளை கமராச் சிறைக்குள் மடக்குங்கள். பத்திரமாய் எமக்கு அனுப்புங்கள். சிறந்தவை பின் அட்டையில் 'அட.... கமரா உலா' பகுதியில் இடம்பெறும். கலர் படங்களே விரும்பப்படுகின்றன. முகவரி-

அட...கமரா உலா!
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-5.

தினமுரசு
போன்:
820265

-கண்டியில்-
"தினமுரசு"
உங்கள் பிரதிகளுக்குத்
தொடர்பு கொள்ளவும்
தினமுரசு விநியோகஸ்தர்
சென்றல் குரோசரிஸ்
120, யட்டிநுவர வீதி
கண்டி.
(கச்சேரி முன்பாக)

## கவிதைப்போட்டி இல-16

விதைக்கப்பட்டவற்றில் வெற்றி பெற்றவைகள்!

### பரிசுக்குரிய கவிதை

இது என்ன
இன்னொரு வெலிக்கடையா?
இல்லை-
வட்டுலத்து வதைச் சிறையா?

ஆர். ரகுராமன்
மட்டக்களப்பு.

### பாராட்டுக்குரிய கவிதைகள்

பலம் உள்ளவரை
நசுக்கு.
ஜனநாயகம்
உனக்கெதற்கு?

கே. சந்திரபாலன்
கண்டி.

**மரணித்து விட்டன**

மனித நேயம்
மரணித்துவிட்ட
இம்மண்ணில்
மனங்களும் மரணித்து விட்டன.

ஆனந்தன் ரவிச்சந்திரன்
கொழும்பு-14.

**இது ஒன்றுதான்**

அராஜகத்தின்
ஆரம்பமும்
இனப்பூசலின்
இறுதியும்
இது ஒன்றுதான்.

க. தேவராஜா
மட்-புதுக்குடியிருப்பு.

**நெஞ்சுரம்**

பிஞ்சினை
வதைத்திட
எத்தனை
நெஞ்சுரம்
உனக்கு?

திருமதி விஜயகுமார்
மட்டக்களப்பு.

**தீனி**

பயங்கரவாதத்திற்கு
சிறப்புத் தீனியோ?

-காரைதீவு இலக்கியன்-

**வேட்டை**

மிருக வேட்டை-
தளர்ச்சியுற்று வரும்
இந்த யுகத்தில்
மனித வேட்டை
மலர்ச்சி பெறுகின்றது.

கலைச்செல்வன்
புலத்துறை.

**அதர்ம(ன்)ம்**

தாங்கியுள் மறைந்தாலும்
உன்னை ஏந்தி
தலையைத்தறிக்கும்
அதர்ம ராஜனடா நான்.

இர்ஷாத் மொஹமட்
தளுவகொட்டுவ

## கவிதைப் போட்டி இல-19



மேலே உள்ள படத்தைப் பாருங்கள். உங்கள் உள்ளத்தில் உருவாகும் எண்ணங்களைத் தபால் அட்டையில் வடிவம் கொடுத்து அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 9.10.93.

-முகவரி-
கவிதைப் போட்டி இல:19
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

**ஓலம்**

மரணித்துவிட்ட
மனிதத்துவம்
மலர்கின்றவரைக்கும்
மண்ணில்
ஒலிக்க வேண்டும் என்
மரண ஓலம்

எல். கே. நாதன்

கொல்வதே வீரம்
என்று
ஆன பின்னர்
இது என்ன
ஆச்சரியம்?

சா. தேவமனோகரி
கண்டி.

அறிவுக்கு
வேலை இல்லாத் திண்டாட்டம்.
அழிவுக்கு
வேலை வாய்ப்பு
நிரந்தரம்.

மா. சுகந்தினி
வவுனியா.

**பகுத்தறிவு**

தன்னினத்தைத்
தானழிப்பதற்கு
ஐந்தறிவே போதுமே
எதற்காக பகுத்தறிவு?

க. நளினி
திருகோணமலை.

**சொட்டு ஜனநாயகமும்...!**

சர்வாதிகார
தாண்டவக் கரங்களில்,
மிச்ச மிருந்த
சொட்டு
ஜனநாயகமும்.....

செல்வி எஸ். சிவசங்கரி
மண்டூர்.



**இது எதுவோ?**

பங்கரினில் தஞ்சமிட
பிஞ்சினது மறுதலிப்போ?
அன்றி
வஞ்சகரின் கடத்தலினை
மிஞ்சிவிடும் உயிர்த்துடிப்போ?

ஜீ. ராஜ்
கொழும்பு.

**புதைபடும் உண்மை**

போர்முகப் போர்வையில்
புதைபடும் உண்மைகள்
வதைமுகாம் ஒன்றில்
மனிதம்?

திருமதி மணிமேகலை
வரதராஜன்
கல்குடா.

**மீறுவது எதுவோ?**

மனிதாபிமானம் குறைய! குறைய
மனிதம் நசுக்கப்படுகின்றது..
ஆயுதம் வளர்க்கப்படுகிறது
வானும் மண்ணும் தான் மிச்சமோ?

து. கலைவாணி
எந்தளை, வத்தளை.

**சிறகொடிப்பு**

சின்னச் சிட்டுவின்
சிறகை ஒடிக்கும்
வல்லூறு.

ச. கண்ணன்
பேராதனை.

**களங்கம்**

வன்முறைக்கு
இங்கொரு சிலையா?
வாரமுரசே!
இதென்ன நிலையோ?

வே. ராஜன்
கலஹா.

# வாசக(ர்)சாலை

அன்பின் முரசிற்கு,

உங்கள் நகர ரவுண்டப் நிருபர் பலே பேர்வழிதான் போங்கள். அந்த ஒரே சமாச்சாரத்தை (நான் ஒரு கண்ணை சிமிட்டுகிறேன் என்பதைக் கவனத்திற் கொள்க) உடும்புப் பிடியாக பிடித்துக் கொண்டு விடுகிறார் இல்லையே.

ஆனாலும் ஒரு மாற்றம். அகதிகள் பிரச்சனையை ஆராயத் தலைப்பட்டிருக்கிறார் என்றாலும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவேன் என்பதை முதல் பந்தியிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறாரே.

**வேலு பத்மநாதன்-புப்புரஸ்ஸ.**

**சமகாலச் சித்திரம்**

12.18.93 அன்றைய "தினமுரசு" வாரமலரின் "மக்கள் பிரதிநிதி" எனும் சிறுகதை மனதை நெகிழ்த்தி விட்டது. கதாசிரியர் அவர்கள் சமகால நிகழ்வினை கருவாய்க் கொண்டு சமைத்த கதை- சமுதாய மரத்தின், ஒற்றுமை வேரை அரிக்கும் கொடிய கறையான்களை இனம் காட்டியது. தி/ இளையவனுக்குப் பாராட்டுக்கள் பல.

**ஷர்மிளா இஸ்மாயில்-கண்டி.**

வியக்க வைக்கும் விந்தைமிகு செய்திகளை வித்தியாசமான பாணியில் தருவதால் முரசின் குரல் இன்று எட்டுத் திக்கும் ஒலிக்கிறது.

யார் கையைப் பார்த்தாலும் முரசு. யார் வாயிலும் முரசின் பேச்சு. இது முரசின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

**செல்வி மஸாஹினா ஆதம்பாவா
கல்முனை-03.**

**இவனின் வாழ்த்துக்கள்....**

வாரமொரு வண்ணமலராய்,
வந்துதிக்கும் தினமுரசே,
முத்தான உன் ஆக்கமெல்லாம்,
சத்தாகும் எமக்கு இங்கு,
விந்தை மிகு விஞ்ஞான உலகினிலே,
வியப்பூட்டும் சம்பவங்களை,
வாரந்தோறும் அள்ளிவந்து,
வாரி வழங்குவதில் நீ தனி நிகரே,
இனிதே தொடரும் உன் இலக்கியப்பணி,
இன்புற்ற இவனின் வாழ்த்துக்கள்!

**கருப்பையா இரவீந்திரன்
வெதமுல்ல.**

செல்வி என். ஜீனியா- புத்தளம், ரலினா ஜெப்பார்- மகொட- பேருவளை, தெ. பிரபானந்தம்-களுவாஞ்சிக்குடி, செல்வி நஸ்லிஹா பறக்கத்துல்லாஹ்-குருநாகல், எம். ஆர். எம். பாயிஸ்-ரம்புக்கனை, சிவநேசன், ஜெயசீலன், கிருஸான், புஷ்பநாதன், ஜெகநாதன், பாஸ்கரன், கேசவன், செல்வின் இராஜேந்திரன், ஆனந்தன், சுபேந்திரன், மோகன்-இரத்தினபுரி, எஸ். ஜெயசுதாகரன்- கோட்டைக்கல்லாறு, செல்வி நிஸ்வா ஸலாம்-தர்கா நகர், செல்வி றொசானா பெரியநாயகம்-அக்கரப்பத்தனை, கு. சுகன்யா- வெள்ளவத்தை, கே. கனகராஜா-நுவரெலியா, இ. லிங்கேஸ்வரன்- ஹாலி-எல, எஸ். சிவகுமார்-புப்புரஸ்ஸ, செல்வன் எஸ். றோமன்- இறக்குவானை, ஏ.எஸ். ஸாஹிர்-கல்பிட்டி, செல்வி றஞ்சினி முருகுப்பிள்ளை-வாழைச்சேனை, செல்வி நிர்மலா தங்கவேல்- அப்புத்தளை, பி. பாலகிருஷ்ணன்-புசல்லாவ, துரை. சுப்பிரமணியம்- புத்தளம், எம்.எஸ். துரையப்பன்-அக்கரைப்பற்று-8, செல்விகள்: ரமீஸா ஹனீபா, ரிஸ்னா காதர்-கொழும்பு-5, பி.ஜெ. தேவமனோகரன்- ஹட்டன், கு. நவகலா- அக்கரைப்பற்று, ஆர். ராஜ்மோகன்- குண்டசாலை, க. சிவா- வத்தளை, மர்லியா நஸீர்- கண்டி, சி. ஜெயசீலன்- கொழும்பு-14, நோனா, பேபி, குட்டி, சப்னா- அக்குறணை, க. சகாதேவன்- வெதமுள்ள, றம்பொடை, என்.எம். அப்துல் முனாப்- சமீரகம, முந்தல், எஸ். சண்முகராஜன்- நாவலப்பிட்டி, மனோஜ் திவாகர் மூர்த்தி- கந்தசேனை எஸ்டேட், நமுனுகல, எஸ். எம். நிஸாம்- கெக்கிராவை, ஏ.சீ.எம். முஸம்மில்-மாவனல்லை, மா. யோகராஜன்- அக்கரைப்பற்று-8, ஏக்கூப் ஏ. நஸ்புள்ளா- பெரிய கிண்ணியா, க.புண்ணியமூர்த்தி-கொம்மாதுறை (தீவு), ஏ.பி. சதாசிவம்-கொழும்பு-2, சரவணேஸ் டெயிசி- கலவானை, க. இராமச்சந்திரன்-ரோஷன்- கொழும்பு-15, மொஹமட் பர்ஸான்- பொலநறுவை, யோகராஜா சுதர்சினி-புத்தளம், லாபீர் எம். ரஷீத்- காலி, அ. அஸ்லம்- திருகோணமலை, ஏ.எஸ்.எம்.பாயிஸ்-மூதூர்-02, எம்.எச். முகம்மது றியாஸ்ஹான்-ஏறாவூர்-03, யாமினி ஸ்ரீதரன்- திருகோணமலை, வினோ-மட்டக்களப்பு, அ. சிவஞானம்- அக்கரப்பத்தனை, செல்வி எஸ்.ஏ. லக்ஷ்மி-நாரங்கலை, ஹாலி-எல, சாமிளா ஏ. ஆர்-நிலாவெளி-01, டீ.எம். அன்சாரி-மூதூர்-5, கலையுள்ளம் மசூத் அஹமத்-காத்தான்குடி-3, செல்வி பெ. தவமணி-நேபட, ஆர். சந்துரு-தெமட்டகொட, நல்லரெட்ணம் ஆனந்தன்- ஆரையம்பதி-1.

**சூப்பர் ரஜனி!**

முரசின் அனைத்து அம்சங்களும் படு சூப்பர். அதிலும், சூப்பர் ஸ்டாரின் நடு (சினிவிசிட்) பக்க அட்டகாசமான படம் வெரி வெரி சூப்பர். முரசுக்கு எனது வாழ்த்துக்கள்.

**ரஜனி பிரியன்-கஹவத்த.**

**களம் தரும் போட்டி**

சிந்தனை ஆற்றலைத் தூண்டி அறிவுக்கு விருந்தூட்டும் தினமுரசின் கவிதைப் போட்டி அனைவரையும் கவிஞர்களாக மாற்றி விடும் சக்தி படைத்தது. ஒளிந்திருக்கும் கவிதை ஆற்றலுக்கு களம் கொடுக்கும் தினமுரசே நீ நீடூழி காலம் வாழ்க. வளர்க என என் நெஞ்சார வாழ்த்துகின்றேன்.

**எம்.எஸ்.வதூத்- மூதூர்-02.**

**ஏ.வன்**

அதிசயம்+ ஆச்சரியம்+வியப்பு= தகவல் பெட்டி பக்கம் அட்டகாசப்படுத்துகிறது! பல்சுவை கவிதை தேன்கிண்ணங்களில், கௌரிதாசன் தந்த கவிதை வித்தியாசமாக, அருமையாக இருந்தது. முகில் வண்ணன் பொழிந்த கதை வண்ணம், ஏ.வன்! சிறந்த படிப்பினையாக கதை அமைந்திருந்தது! வழக்கம் போலவே ரசிகன் மதுமிதா மயக்கம் இனிமையாய் சுவைக்கிறது! மொத்தத்தில் தித்திக்கிறது, தினமுரசு.

**முத்து மணி-மட்டுநகர்.**

வாரம் ஒரு முறை வலம் வரும் முரசே. நீ வாரி வழங்கும் அத்தனையும் நல் முத்து. தேன் கிண்ணம் தெவிட்டாமல் இனிக்கிறது. வாலிபர் முதல் வயோதிபர் வரை உன்வரவுக்காக காத்திருப்பது தான் என்ன மர்மமோ?

**எஸ்.கலாதாசன்-நானுஓயா.**

# பிரிட்டிஷ் பிரதமருக்கு புலிகள் கடிதம்!

## "ஐரோப்பிய நாடுகள் நிதி உதவியை நிறுத்தவேண்டும்"

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜருக்குப் புலிகள் அமைப்பினரால் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழர் இயக்க ஜெர்மன் கிளையின் சார்பாக அக்கடிதம் எழுதப் பட்டுள்ளது.

உலகத்தமிழர் இயக்கம் புலிகள் இயக்கத்தின் அமைப்புக்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

15 இலட்சம் தமிழ் மக்கள் தமது வீடுவாசல்களை இழந்துள்ளனர்.

அரசினதும் இராணுவத்தினதும் நடவடிக்கைகளால் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற் பாடுகள் பாதிப்படைந்துள்ளன என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்வரும் கோரிக்கைகளும் கடிதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் இடம்பெற்று வரும் சிங்களக் குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

பொருளாதாரத் தடையை நீக்க பிரிட்டிஷ் அரசு உதவ வேண்டும்.

உலக வங்கி, யப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அபிவிருத்திப் பணிகளுக்காக உதவப்படும் நிதியை தமிழர் மீது எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படுவதால் இந் நாடுகள் இலங்கைக்கு வழங்கும் நிதி உதவிகளை நிறுத்திவிட வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**ஸ்பொட் ரிப்போர்ட்**

## விழித்துக்கொண்டதால் வழிப்பறியிலிருந்து தப்பிக் கொண்டார்!

கொழும்பில் இருந்து நீர்கொழும்பு சென்ற தமிழர் ஒருவரை இருவர் வழிமறித்தனர்.

தலைமயிர் கட்டையாக வெட்டப்பட்டு, பார்ப்பதற்கு இராணுவத்தினர் போன்ற தோற்றத்தோடு இருந்தனர்.

"உம்மை எங்கோ பார்த்திருக்கிறோம்" என்று அவர்கள் இருவரும் பேச்சை ஆரம்பித்தனர்.

அவர்கள் மறித்த தோரணையும் பேச்சும் சந்தேகத்தை ஏற்படுத்தவே சம்பந்தப்பட்ட தமிழர் விழித்துக் கொண்டார்.

"நான் 8 வருடமாக நீர்கொழும்பில் வேலை செய்கிறேன்."

என்று சொல்லியதோடு உரத்த சத்தத்தில் அவர்கள் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசிக் கொண்டிருந்தார்.

ஓட்டோ ஒன்று வந்து தூரத்தில் நின்றது.

ஏற்றிச் செல்ல வழி பார்க்கிறார்கள் எனப் புரிந்து கொண்டு அவர் மேலும் உஷாரானார்.

"நீங்கள் யார்? அடையாள அட்டை காட்டுங்கள்" என்று சத்தம்போட்டு பேசி முந்திக்கொள்ள வழிமறித்த இருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

மறு நிமிடமே இருவரும் மாயமாய் மறைந்தனர்.

மொழி தெரிகிறதோ இல்லையோ சமயோசித புத்தியும், சத்தம் போட்டு நூறு பேரின் கவனத்தை ஈர்ப்பதும் முக்கியம்.

கொழும்பில் உள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த தமிழர்கள் மேற்படி அனுபவத்தைப் பயன்படுத்திப் பயன் பெறுவார்களாக.

## குடிவரவு ஆவண மோசடி! கனடாவில் மாட்டிய இலங்கைத் தமிழர்!!

கனடியக் குடிவரவு ஆவணங்கள் ஒன்பதினையும் அவை தொடர்பான அடையாள அட்டைகளையும் மறைத்து வைத்திருந்த இலங்கைத் தமிழர் ஒருவரைக் கனடிய நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்டுள்ளது. இவருக்கான தண்டனை விபரங்கள் எதிர்வரும் ஒக்டோபர் 18ம் திகதி அறிவிக்கப்பட இருக்கிறது.

37 வயதான ஞானச்சந்திரன் ஜெயச் சந்திரன் என்பவர் 1992ம் ஆண்டு ஜுலை மாதம் 6ம் திகதி பியாசன் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இலங்கைக் குச் செல்லவிருந்த அவர், தோல் பையில் ஒரு புகைப்பட அல்பத்திற்குள் 9 கனடிய குடிவரவு, பிரயாண ஆவணங்களும் அடையாள அட்டைகளும் ஒளித்து வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த வாரம் பிராம்டன் நீதிமன்றத்தில் கனடாவில் இருக்கும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்ட இந்த ஆவணங்களை வேறு இலங்கையர் பாவித்துக் கனடாவுக்கு வந்து, அகதி நிலை அந்தஸ்து கோருவர் என்று தெரிவிக்கப்பட்டது. கனடா இமிக்ரேஷன் அதிகாரி ஒருவர் சாட்சியமளிக்கையில் இப்படியான முகவர்களுக்குச் சிலர் சுமார் பத்தாயிரம் டொலருக்கு மேல் தருவதாகவும் இந்த முகவர்கள் எப்படியாவது இவர்களைக் கனடா சேர்த்து விடுவதாக வாக்குறுதி அளிப்பதாகவும் கூறினார்.

உண்மையான பிரயாண, குடிவரவு ஆவணங்களைப் பாவித்து இலங்கையர்களை இந்த முகவர்கள் விமானத்தில் ஏற்றி விட்டுப் பின் அதே ஆவணங்களைப் பாவித்து மேலும் பல இலங்கையர்களைத் தொடர்ந்தும் விமானத்தில் ஏற்றுவதாக சிந்தியா கார்சியா என்ற அதிகாரி சாட்சியமளித்தார்.

நீதிபதி திரு.வில்லியம் எஃப்.பி. ரோஜெர்ஸ், திரு. ஜெயச்சந்திரன் தவறான நோக்கத்துக்காக உத்தியோகபூர்வ ஆவணங் களை மறைத்தார் என்றும் சோஷல் இன்சுரன்ஸ், ஹெல்த், ஹொஸ்பிடல், பாங்க் அடையாள அட்டைகளைத் தவறான நோக்கத்துடன் பதுக்கினார் என்றும் ஒன்பது குற்றச் சாட்டுக்களிலும் குற்றவாளியாகக் கண்டார்.

"பல்வேறு மனிதர்களை இந்த நாட்டுக்குள் கொண்டுவர இந்த ஆவணங்கள் பதுக்கி மறைக்கப்பட்டன," என்று நீதிபதி கூறினார்.

## மட்டக்களப்பில் மற்றொரு சோகம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 வீதமான சிறுவர்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப் படுகிறது.

சிறுவர்கள் மட்டுமல்லாமல் வயது வந்தவர்களும் போசாக்கின்மையால் பாதிப்படைந்துள்ளனர்.

வன்செயல்களால் மக்கள் இடம் பெயர்ந்து வாழ்வதும், வேலை வாய்ப்புக்கள் இன்மை, அகதி வாழ்க்கை போன்றவையும் போசாக் கின்மைக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

## அகதி முகாம்களில் சுகாதாரக் குழுக்கள்

யாழ் மாவட்டத்தில் தற்போது 22 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன.

இட நெருக்கடிகளும், சுகாதாரச் சீர்கேடுகளும் அங்கு தொற்று நோய்களை உருவாக்கி வருகின்றன.

தற்போது புலிகள் அமைப்பினரின் மருத்துவப் பிரிவினர் அகதி முகாம்களில் சுகாதாரக் குழுக்களை அமைத்துள்ளனர்.

சுற்றுப்புற சுகாதாரம் குறித்த கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

## "இடைக்கால நிர்வாக சபை ஏற்பட வேண்டும்"

(காரைதீவு நிருபர்)

"வட- கிழக்குப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டமொன்றை வகுக்காமல் இலங்கையின் அரசியலமைப்பை எத்தனை தரம் மாற்றியும் பிரயோசன மில்லை. தமிழர் அமைப்புக்களால் கோரப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபையை நான் பூரணமாக வரவேற்கின்றேன். அது மூவினத்தையும் சேர்ந்த தரமான படித்த பிரதிநிதிகளால் பிரதிநிதித்துவம் செய்தால் தற்போதுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவை விட சிறப்பாக இயங்கும். இதனால் வட-கிழக்கில் தேர்தலை நடாத்தவும், பிரச்சனையை முடிவுக்குக் கொண்டு வரவும் முடியும்."

இவ்வாறு பழம்பெரும் அரசியல் வாதியும், முன்னாள் பதில் நிதியமைச்சருமான சட்டத்தரணி எம்.எம்.முஸ்தபா முரசுக்கு தெரிவித்தார்.

## மோசமாகிவரும் மீனவர் வாழ்க்கை தடையைச் சற்று தளர்த்துமாறு கோரிக்கை!

(திருகோணமலை நிருபர்)

கடல் பாதுகாப்பு வலயம் காரணமாக கடலை மட்டுமே நம்பி வாழும் ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பட்டினி வாழ்க்கையில் சிக்கியுள்ளன. அன்றாட உழைப் பாளிகளின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது.

இயந்திரப் படகுகள் உபயோகிக் காத சிறு தொழிலாளர்களுக்காவது பகலில் மட்டுமேனும் குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு மட்டுப் படுத்தப்பட்ட கரையோரத் தொழிலுக்கு அனுமதி வழங்கும்படி பிரபல கவிஞரும் தில்லை நகர் கிராமோதய சபைத் தலைவருமான செ.நவசோதிராசா மீன்பிடித் துறை அமைச்சர், வடகிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர், கடற்படைத் தளக் கமாண்டர் ஆகியோருக்கும் மீனவர் நிலைமையை விளக்கிக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## புதிய உலக சாதனை



**பூதம் போல் ஒரு பூசணி!**

நோம் கிரவன் (வயது 34) கனடாவில் உள்ள ஒன்றாரியோ மாகாணத்தின் எப்டோப்வலி என்னும் பகுதியில் வாழ்ந்து வருபவர். அவரது தோட்டத்தில் விளைந்த பூசணிக்காய் அவர் புகழையும் பெருக்கி விட்டது. இதன் நிறை 842 பவுண்ட். இதுமட்டுமல்ல. இன்னும் நிறை அதிகமாகும் என்கிறார் கிரவன்.

## இந்தியா காந்தீய நாடல்ல!

"இந்தியா சமூக விரோதக் கும்பல்கள் மூலம் போராட்டத்தை ஒடுக்க முனைந்தது.

"எமது போராட்டத்தின் உன்னதத்தை எடுத்துக்காட்ட திலீபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

"அதன்மூலம் இந்தியா காந்தீய நாடல்ல, அது தமிழர்களை அழிக்கவே இலங்கைக்கு வந்தது என்பதை திலீபன் எடுத்துக் காட்டினார்."

இவ்வாறு புலிகள் அமைப்பின் பிரமுகர் பரராஜசிங்கம் யாழ்ப் பாணம் நல்லூரில் நடைபெற்ற திலீபன் நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

## இரண்டாயிரத்துக்கு மேற்பட்டோருக்கு கனடா உதவியோடு கண்டியில் கண் சிகிச்சைப் பிரிவு

(கண்டி நிருபர்)

கண்டி பெரியாஸ்பத்திரியில் இயங்கும் கண் சிகிச்சைப்பிரிவு மூலமாக மூன்றாண்டுகளாக 2172 பேருக்குப் பார்வை பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளது.

அங்கு இயங்கும் அரச சார்பற்ற கண் சிகிச்சை நிறுவனத்தின் ஊடாக இயக்கப்படும் சபை மூலம் ஆஸ்பத்திரி வளவுக்குள் 2700 சதுர அடி உள்ளகத்தைக் கொண்ட மூன்று கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் ஒக்டோபர் 2ஆம் திகதி ஜனாதிபதி திரு.டி.பி.விஜேதுங்கா வினால் திறந்து வைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கண் சிகிச்சை நிலையம் அரசு சார்பற்றதாக தொடர்ந்து இயக்கப் படும். இந்த சிகிச்சை நிலையம், இதற்குப் பொறுப்பான பிரபல கண் வைத்திய நிபுணர் டாக்டர் ரெஜி சீமன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கும்.

140 படுக்கைகளையும் 4 சத்திர சிகிச்சை அறைகளையும் 9 சத்திர சிகிச்சை படுக்கையறையும் கொண்ட இந்த நவீன கண் சிகிச்சை நிலையம் இலங்கையில் முதலிடம் வகிப்பதாகும்.

டாக்டர் சீமன் தலைமையில் இயங்கும் இந்த வைத்திய நிலைய சபை இதன் பின்னர் தனித்துவமாக இயங்கும். இந்த நிலையத்தினை நிர்மாணிக்க தென்னாசிய கண் வைத்திய கூட்டகமும், கனடா கண் சத்திர சிகிச்சைப் பிரிவும் தாராளமாக நிதி உதவி வழங்கியுள்ளன. இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து 60 இலட்சமும், அரசாங்கத்தின் சார்பில் சுகாதார அமைச்சு 40 இலட்சம் ரூபாவும், ஜனாதிபதியின் பணிப்புரையின் மேலும் 25 இலட்சம் ரூபாவும், மற்றும் பொது அமைப்புக்கள் மூலமாக கிடைக்கப் பெற்ற எல்லாமுமாக 240 இலட்சம் ரூபா செலவில் இந்த அமைப்பு நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

கண்களில் வெள்ளைப்பூ படர்ந்து பார்வை குறைந்தவர்களுக்கும் மற்றும் பலதரப்பட்ட விபத்துக்கள், நோய்கள் தொடர்பாக பார்வை இழந்து கண்பார்வை குன்றியோருக்கும் இந்த நிலையம் கைகொடுத்து உதவும் என இந்த அமைப்பின் ஸ்தாபகர் டாக்டர் சீமன் தினமுரசுக்குத் தெரிவித்தார். இந்த நிலையத்தின் ஊடாக நாடு எங்கிலும் இருந்து பாதிக்கப்பட்ட கண் நோயாளர்கள் நன்கு பயன் பெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யூரியாக் கடத்தலுக்கு உடந்தையா? யாழ் அரசாங்க அதிபர் மீதும் விசாரணை?

கொழும்பில் இருந்து புலிகள் அமைப்பினருக்காக யூரியா கடத்த முயன்ற வர்த்தகருக்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் தொடர்பிருப்பதாக சந்தேகம் நிலவுகிறது.

யாழ் அரச அதிபர் திரு.மாணிக்கவாசகர் விடுதலைப் புலிகள் அமைப்பினரோடு நெருங்கிய தொடர்புடையவர் என்று யாழ்ப்பாணத்தில் கருதப்பட்டு வருகிறார்.

யூரியா கடத்தல் விவகாரத்தில் யாழ் அரச அதிபரிடமும் இரகசியப் பொலிசாரால் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டதாக யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## அடையாள அட்டை கேட்டார்கள் பதிவு இல்லை என்று பதில் வருகிறது!

(இராகலை நிருபர்)


நானுஓயா பகுதியிலுள்ள தோட்டங்கள் பலவற்றில் 1970ம் ஆண்டுக்கும் 1979ம் ஆண்டுக்கும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெறுவதற்கு நுவரெலியா மாவட்டப் பதிவாளருக்கு விண்ணப்பித்தனர். ஆனால் இக்காலக் கட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பிறப்பு விபரங்கள் பதியப்படவில்லையென அங்கு பதில் கிடைக்கின்றது.

இதன் விளைவாக, நேர்முகப் பரீட்சைகள், க.பொ.த (சாதாரண,உயர்தர) பரீட்சைகளுக்கு தோற்ற முடியாதிருக்கின்றது. தொழில் வாய்ப்புகள் பெற முடியாதிருக்கின்றது. தேசிய அடையாள அட்டைகள் பெற விண்ணப்பிக்க முடியாதுள்ளது. தோட்டங்களில் பெயர் பதிய இயலாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக இப்பகுதி மக்களால் மத்திய மாகாண சபை அமைச்சர் திரு.எஸ். சதாசிவத்திற்கு புகார்கள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இ.தொ.கா. நுவரெலியா மாநில தொழில் உறவு அதிகாரி திரு.எஸ்.இராஜகோபால், நுவரெலியா மாவட்ட பதிவாளரிடமிருந்து கடிதம் மூலம் விளக்கம் கோரியுள்ளார்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்


## சிறு விளம்பரப் பகுதி



ஏ.எஸ்.எம். நவாஸ் எழுதிய

"சுகமான சிந்தனைகள்"

(கட்டுரை நூல்)

இந்நூலில் கணவன்-மனைவி வாழ்க்கை முறைமையும், காதலில் தோல்வி கண்ட இதயங்களையும், அகதிகள் பிரச்சனையையும், ஆடம்பர மனிதர்களையும் எழுத்தாளர் ஏ.எஸ்.எம். நவாஸ் தொட்டுக்காட்டுகிறார். ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது.

விலை ரூ.13/-மட்டுமே.

1 ரூபாய் முத்திரைகள் 14 அனுப்பி இந்நூலைப் பெறலாம்.

பிரதிகளுக்கு முந்துங்கள்

CENILAND (சினிலேன்ட்)

N0-13, ST. JOSEPH'S STREET, COLOMBO-14.

SARIKA TEX

Ladies Tailoring

உங்கள் எண்ணப்படி-

சாறி பிளவுஸ், சல்வார் கமீஸ், சாகரா சோளி, ஃபுறக்ஸ் மற்றும் ஸ்கேட் அன் பிளவுஸ் நிறைவாக வடிவமைத்துத் தரப்படும்.

சாறி பிளவுஸ் தைக்க வேண்டுமா? உங்கள் மனதுக்கு நிறைந்தளவில் குறைந்த நேரத்தில் தைத்துத் தருகிறோம்.

*Hewa Building*
*No. 69/5-1/1, Galle Road*
*Dehiwela.*

தேவை


கொஸ்லாந்தை பகுதி முரசு விற்பனைக்கு முகவர்கள் விண்ணப்பிக்கவும்.

வைப்புப்பணம் செலுத்தக் கூடியவர்கள் விரும்பப்படுகிறார்கள்.

தினமுரசு விற்பனைக்கு நேரிலோ, தபால் மூலமோ விண்ணப்பிக்கவும்.

Thina Murasu
88/14, Somadevi Place,
Kirillapone, Colombo-5.


## 8ஆம் ஆண்டு நினைவாஞ்சலி



க. சுப்பிரமணியம்


தோற்றம்: 02.10.37 மறைவு: 03.10.85

திதி: 05.10.93

கண்ணீரால் அஞ்சலி
செலுத்தினால் காய்ந்துவிடும்.
மலர்களால் அஞ்சலி
செலுத்தினால் வாடிவிடும்.
எங்களைப் பெற்றவரின் ஆத்மா
சாந்தியடைய நாங்கள்
இதயத்தால் நினைவாஞ்சலியைச்
செலுத்துகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தங்கள் நினைவால் வாடும்-
மனைவி-சு. செல்வமணி
மகன்கள்-கலீ,கமல், விமல்
மகள்கள்- கமலினி, செந்தினி
மல்லாகம்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல—18



### இடமிருந்து வலம்

1. வானம் இதற்கொரு வீதி.
3. அடிமைகளுக்கு இது வழங்கப்பட்டதுண்டு.
4. வெய்யில் நிவாரணங்களில் ஒன்று.
7. தேவையானவற்றில் ஒன்று. (திரும்பியிருக்கிறது)
8. ஆண்பாலுக்கு எதிர்ப்பால்.
9. எதிராளிக்கு எதிராகச் செய்வது.
10. உழைப்பிற்குக் கிடைக்கும்.

### மேலிருந்து கீழ்

1. கப்பலோடு சம்பந்தப் பட்டது.
2. இதை அறியக் கருவிகளும் இருக்கின்றன.
3. பாடங்களில் ஒன்று.
4. குடிக்க முடியாத ரசம்.
5. நிலத்திற்குப் பொறிக்கலாம்.
6. இவர்கள் உள்ளேயும் இருப்பார்கள் வெளியேயும் இருப்பார்கள்.
8. இதை வாழவிடுமாறு அரசும் சொல்கிறது.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 09.10.93க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். (அஞ்சலட்டைகளை மாத்திரம் உபயோகிக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல.-18
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு-05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## காணி நிலம் வேண்டும்!

(கம்பஹா நிருபர்)

"கம் உதாவ" கொண்டாட்டத்தை முன்னிட்டு கம்பஹா மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற - நிலமற்ற வறியோருக்கு உதவ முன்வந்துள்ள அரசாங்கம் இம்மாவட்டத்திலுள்ள திஹாரிய கிராமத்திலுள்ள வறிய முஸ்லிம்களுக்கும் வீடு-காணி வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு திஹாரிய வாழ் வறியமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

16வது கிராம எழுச்சி (கம் உதாவ)யை முன்னிட்டு கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 தொகுதிகளிலும் மொத்தம் 10,500 குடும்பங்களுக்கு வீடும்-காணியும் வழங்க ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக சொந்த வீடின்றி-நிலமின்றி அவதியுறும் திஹாரிய முஸ்லிம் வறியோர்களின் தேவையும் பூர்த்தி செய்யப்படவேண்டியது மிக அவசியமாகும். இது விடயத்தில் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உடன் ஆவன செய்ய முன்வரவேண்டுமெனக் கோரப்படுகிறது.

## சுற்றம் திருத்தி வாழ்!

(அட்டாளைச்சேனை நிருபர்)



அண்மையில், அட்டாளைச்சேனை ஆலம்குளம் பகுதியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடாத்தப்பட்ட "இளைஞர் சிரமாபிமான முகாம்-93"ல் பங்கு பற்றிய இளைஞர்கள், வீதியொன்றினை அமைக்கும் முகமாக சிர்மதானத்தில் ஈடுபட்ட போது பிடிக்கப்பட்ட படம் இதுவாகும்.

## புகார் பெட்டி

### 46 வருட சேவையிலும் தொலைபேசி வசதி இல்லை!

வவுனியா மாவட்டத்தில் உள்ள உப தபால் அலுவலகங்களில் தரமான சேவையாற்றி வரும் நேரியகுளம் உப-தபால் அலுவலகத்திற்கு இன்னும் தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. சுமார் நாற்பத்தி ஆறு வருடங்களாக இயங்கிவரும் இத்தபால் அலுவலகத்திலிருந்து சுமார் இருபத்தைந்து கிராமங்களுக்கு தபால் பட்டுவாடா செய்யப்படுகிறது, இதில் பதினைந்து பாடசாலைகள், இராணுவ முகாம், உப பொலிஸ் நிலையங்கள், வைத்தியசாலை, நான்கு மதங்களுக்குமான வழிபாட்டுஸ்தலங்கள், வியாபார நிலையங்கள், விளையாட்டு இளைஞர் கழகங்கள் என்று எண்ணிலடங்காத முக்கிய அலுவலகங்களை தன்னகத்தே கொண்டுள்ள இத்தபால் அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி கிடைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன புரிவார்களா என மக்கள் ஏங்குகிறார்கள்?

டீ.சந்திரன்
நேரியகுளம்.

### தயவு செய்து தபால் பெட்டி!

அக்கரைப்பற்று பகுதியில் கடிதங்களைத் தபாலி சேர்ப்பதானால் தபாலகத்திற்கு மட்டுமே சென்று தபாலில் சேர்க்க வேண்டிய நிலை.

இடையில் எங்கும் உப தபால் பெட்டிகள் கிடையாது. இது தொடர்பாக உரிய அதிகாரிகள் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

க. முரசொலிமாறன்-அக்கரைப்பற்று.

### மின்சாரம் கிடைக்குமா?

மூதூர் தொகுதியிலே பாரதிபுரம் என்னும் கிராமத்திலே நான் வசிக்கிறேன். இந்தக் கிராமத்திற்கு அயல் கிராமமாகிய தங்க நகர் எனும் கிராமம் வரை மின் கம்பங்கள் நடப்பட்டு கவனிப்பார் இன்றி இடை நிறுத்தப்பட்டு கிடக்கின்றது. எனவே தொடர்ந்து எங்கள் கிராமம் இருள் சூழாது மின்சாரம் பெற உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரி.கே.ராஜா-மூதூர்.

### நடமாடும் சேவையோடு சரி!

ஜனாதிபதி நடமாடும் சேவையின் பயனால் வாகரை உபதபாலகத்தினூடாகத் தொலைபேசி இணைப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.


ஆனால்; தொலைபேசிகள் சில தினங்களுக்குமேல் இயங்குவதில்லை. இது தொடர்பாக பல்வேறு தரப்பினர்களும் வேண்டுகோள் விடுத்த போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே; தயவு கூர்ந்து வாகரை வாழ் மக்கள் நலன் கருதிச் சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனமெடுப்பதன் மூலம் தொலைபேசி இணைப்பினைச் சீர் செய்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தி. லிங்கேஸ்வரன்
வாகரை.

இலங்கையில் தமிழ்மொழி அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வருடங்கள் பல. இன்னும் தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை என்பது உண்மை. அரசு தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து கொடுக்கின்றதோ இல்லையோ அறிவிப்புப் பலகைகளில் தமிழ்க் கொலை நிகழாமல் பார்த்து கொண்டால் அதுவே போதும். அண்மையில் அப்புத்தளை சென்றிருந்தேன். பிளக்வூட் தோட்டத்திற்கு அருகில் கொழும்பு பிரதான பாதையில் மண் சரிவு ஏற்படும் அபாயம் பற்றிய அறிவிப்புப் பலகையில் தமிழ் மொழி மிகக் கொடூரமாக குதறப்பட்டிருப்பதைக் கண்டேன். பிளக்வூட் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியை ஒருவர் இது பற்றி தினமுரசிற்கு எழுதும்படி கேட்டுக் கொண்டார். நான் பார்த்ததை தினமுரசு வாசகர்களான நீங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பார்க்கவேண்டாமா?

செ. ஆனந்தராஜா-கொழும்பு-11




## குறுக்கெழுத்துப் போட்டி இல-16க்கான சரியான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மோ | ப் | 2 ப | ம் | | 3 சி | 4 கை |
| ச | 5 ல | ந் | | 6 வெ | ற் | றி |
| டி | 7 ச | த | ம் | | பி | த் |
| | ஞ் | ய | | 8 ப | | த |
| 9 அ | ம் | ம் | 10 பு | த் | தி | |
| றி | | | 11 ம | தி | யூ | 12 கி |
| வு | ரி | 13 ப | | னி | | யூ |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.16இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ். வேந்தன் கண்டி.
2. கே. ஜமால்தீன் பண்டாரவளை.
3. ஆர்.என். இஸ்மாயில் காத்தான்குடி.
4. வி. சந்துரு வவுனியா.
5. அ. தவமலர் மட்டக்களப்பு.
6. அப்துல் கபார் முகது யூசுப் கிண்ணியா-3.
7. கே.எம். உவைஸ் கிண்ணியா.
8. பி.எம்.எஸ். குமார் லிந்துலை.
9. எஸ். வைஜெந்தி நீர்கொழும்பு.
10. ஐஸ்வர்யா வின்சன் கொழும்பு-9.

இந்த அதிஷ்டசாலிகளுக்கு பரிசுப்பணம் ரூபா 500/= பகிர்ந்தளிக்கப்படும்.

## மட்டுநகர் ஆடைத் தொழிற்சாலையில் அடக்கு முறை?

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கமைய தற்போதைய ஜனாதிபதியின் தொடர்ச்சியான வழிநடத்தலுக்கு ஏற்ப ஆரம்பிக்கப்பட்டது மட்டுநகர் ஆஞ்சநேயர் ஆடைத் தொழிற்சாலையாகும்.

ஆனால் இங்கு அடிமை ஊழியம் செய்வது போன்ற உணர்வு இங்கு வேலை செய்பவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது. இங்கு வேலை பெற்றவர்கள் ஜனசவிய உள்ளவர்களும், அத்தோடு தாய், தந்தை, உறவினர்கள் இழந்தவர்களுமேயாகும்.

இவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள் என்பதை ஜனசவிய பெற்றதில் இருந்து உறுதிப்படுத்தப்படுகிறார்கள்.

இவர்களுக்கு முழு ஊதியம் வழங்கப்படுவதில்லை. சில்லறை செலவுக்கு என சிறு தொகை இவர்களுக்கு வழங்கப்படுகிறது. இத்தொகை இவர்கள் தனி உணவுக்கே காணாததாகும். இவர்கள் குடும்பப் பொறுப்பை தலையில் சுமப்பவர்கள்.

ஆனால் இவர்களுக்கு வேலை நேரம் (12) மணித்தியாலம் வழங்குகிறார்கள். காலை 7மணிக்கு வேலைக்கு செல்லும் யுவதிகளும் ஆண்களும் மாலை 6.30 மணி வரை தொடர்ச்சியாக ஊழியத்தை வழங்குகிறார்கள். அதற்கு பின் அவர்கள் வீடு செல்வது மிகவும் சிரமமாக காணப்படுகிறது. வீதிகளில் 6.30 மணிக்கு பின் ஆடைத் தொழிற்சாலை யுவதிகள் ஓட்டமும் நடையுமாக வீடு செல்வது கவலைக்குரிய விடயமாகும்.

எனவே ஆடைத்தொழிற்சாலையின் உயர் பதவிகளில் இருப்பவர்கள் உடனடியாக தலையிட்டு ஊழியர்கள் வாழ்வு சிறக்க ஆவன செய்ய வேண்டும்.

க. ரகு-மட்டக்களப்பு.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்
-நாரதர்-

# போரின்றி வாழ்வது கனவானது!
# சாவின்றிப் பொழுது விடிவதும் பொய்யானது!!

கடந்த வாரம் நமது பாராளுமன்றத்தில் புரளி ஒன்று கிளம்பித் திரிந்தது.

'புலிகள் அமைப்பினரின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கத்தின் துணைவியார் பாராளுமன்றம் வந்தார். உணவருந்திச் சென்றார்.'

யாரோ ஒரு அரசியல் குறும்பர் கிளப்பி விட்ட புரளி அது.

நமது நாட்டின் பாதுகாப்பு அமைப்புக்கள் மீது நம்பிக்கை குறைந்து வரும் நிலையில் பலர் புரளிகளை எல்லாம் சுலபமாக நம்பிவிடுகிறார்கள்.

திரு.பிரபாகரன் கொழும்பு வந்து கோல்பேஸ் கடற்கரையில் நிற்பதாகச் சொன்னாலும் நம்புவதற்கு ஆட்கள் இருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தில் அது பற்றிக் கேள்வி எழுப்பவும் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்.

பாதுகாப்புப் படையினரின் கண்களில் புலிகள் சுலபமாக மண்ணைத் தூவி விடுவார்கள் என்று சிங்கள அரசியல் தலைவர்களே நம்புகிறார்கள்.

தற்போதைய யுத்தம் பாதுகாப்புப் படையினரின் திறமை மீது அவநம்பிக்கைகளையும், புலிகளின் சாகசங்கள் மீது நம்பிக்கைகளையும் தோற்றுவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா உயிரோடு இருந்திருந்தால் திருமதி அடேல் பாலசிங்கம் அவரைச் சந்திக்கவே வந்திருந்தார் என்று கூறியிருப்பார்கள்.

அதனை வைத்து பெரிய அரசியல் நாடகம் ஒன்றே அரங்கேற்றப்பட்டிருக்கும்.

இனப்பிரச்சனையும் இல்லை. ஒன்றும் இல்லை என்று சொல்லியதால் தற்போதைய ஜனாதிபதி தப்பிக் கொண்டார். புலியோடு அவரை இணைத்து எப்படி முடிச்சு போடுவது?

எல்லாம் இருக்க, வதந்திக்கு என்ன காரணம் என்று அறிந்த போது சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

வெளிநாட்டு அமைப்பொன்றின் பெண் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றம் வந்திருக்கிறார். திரு.ஸ்ரீனிவாசன் என்னும் பாராளுமன்ற உறுப்பினரே அவரை அழைத்து வந்து விருந்து கொடுத்து கலந்துரையாடியும் இருக்கிறார். இதனைக் கவனித்த யாரோ ஒரு குறும்பர் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் வதந்தியால் முடிச்சுப் போட்டுவிட்டார்.

ஸ்ரீனிவாசனின் தரம் என்ன? தமிழர் அரசியலில் அவருக்குள்ள மதிப்பு என்ன என்பதையெல்லாம் புரிந்து கொண்டிருந்தால் புலிகளோடு அவரை சம்பந்தப்படுத்தியிருக்க மாட்டார்கள்.

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு முதலில் பச்சைக் கொடி காட்டிய இலண்டன் வாசனையுள்ள தமிழர்தான் ஸ்ரீனிவாசன்.

இலங்கைத் தமிழர்களின் அரசியலின் தரம் தாழ்ந்து போனதின் அப்பட்டமான வெளிப்பாடுதான் ஸ்ரீனிவாசன்.

இயக்கங்கள் சில தமது அரசியல் தெளிவின்மையை பூர்த்தி செய்து கொள்ள எங்கிருந்தோ சிலரைப் பிடித்து வந்து தலைவர்களாகச் சுட்டிக்காட்டி அரசியலை கேலிக்கூத்தாக்கின.

தமிழ் பேசும் மக்களின் போராட்டம், அதற்காகச் செய்யப்பட்ட தியாகங்கள், செலுத்தப்பட்ட உழைப்புக்கள் என்பவற்றோடு எவ்வித தொடர்பும் அற்றவர்கள் தூக்கி நிறுத்தப்பட்டார்கள்.

இயக்கத் தலைவருக்குப் பிடித்தவராக இருந்தால் போதும். அவர் கியூ வரிசையில் நிற்காமல் பின்வழியாக சென்று ரிக்கற் பெற்றுக் கொள்ளலாம். ஆங்கிலம் தெரிந்திருந்தால் இன்னும் வசதி.

அரசியல் என்பதை சாக்கடையாக மாற்றிவிட்டு முன்பிருந்த தலைவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆயுதம் கையில் இருக்கிறது என்பதைத் தவிர முன்னாள் தலைவர்களோடு தங்களை ஒப்பிடும் துளியளவு தகுதி கூட இல்லாதவர்கள் எல்லாவற்றையும் கேலிக்கூத்தாக்கி விட்டார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் பதவியா? விடாதே பிடி. யாரையாவது ஒருவரைப் போடு. ஒரு எம்.பி. எமக்கும் உண்டு என்று காட்டினால் போதும்.

எம்.பி. பதவிக்கு ஆள் இல்லையா? தலைவர் யோசிப்பார். தனக்குத் தெரிந்தவர்களில் அடங்கி நடக்கக் கூடிய ஆங்கிலம் தெரிந்தவர், அழகாகப் பேசத் தெரிந்தவர் யார் என்று யோசித்து ஒருவரைத் தெரிவு செய்வார்.

அவர் அவுஸ்திரேலியாவில் இருந்தால் என்ன, அயல் நாட்டில் கடத்தல் தொழில் செய்து கொண்டிருந்தால் என்ன? தரம் முக்கியமல்ல. காலம் போற போக்கில் ஓடி இயக்கம் நடத்துவதே முக்கியம்.

இவ்வாறான அசிங்கமான போக்கின் வழியாக உருவானவரே ஸ்ரீனிவாசன்.

இந்த ஸ்ரீனிவாசன் புலிகளை சமரச வழிக்கு கொண்டுவரப் போவதாக முன்னர் கூறியிருந்தார்.

புலிகள் ஸ்ரீனிவாசனை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

இந்த விடயத்தில் ஏனைய இயக்கங்களில் இருந்து மாறுபட்டு எப்போதும் ஒரு உறுதியான போக்கை பிரபாகரன் கடைப்பிடித்து வருவதை மறுக்க முடியாது.

தவறான நபர்களை, போராட்டத்தில் சம்பந்தமற்ற - மரம் பழுத்தால் தேடி வரும் வெளவால்களை பிரபாகரன் வளர்த்து விடவில்லை.

சிலரைப் புலிகள் பயன்படுத்தும் போதும் அவர்கள் தம் இஷ்டப்படி ஆட அனுமதிப்பதில்லை.

யாரை எப்படி, எவ்வாறு பயன்படுத்துவது; எந்தத் தூரத்தில் வைத்திருப்பது என்கின்ற விசயத்தில் பிரபாகரன் காட்டி வந்த கவனமே இன்றைய அவரது பலத்தின் காரணம். அதனை மறுக்க முடியாது.

அமுதர் கொலையை புலிகள் இப்போது பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறார்கள்.

நீண்டகால அனுபவம் உள்ள, அரசியல் சாணக்கியம் வாய்ந்த தலைவரை புலிகள் பலி கொண்டனர்.

அமுதர் கொலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத ஒன்றேயாகும்.

ஆனால், மறுபுறத்தில் மிக மோசமான நபர்களை புலிகள் இயக்கம் வளர்த்து விடவில்லை என்பதையும் மறந்துவிட முடியாது.

ஏனைய இயக்கங்களைப் பொறுத்த வரை பெரும்பாலானவை கூட்டணித் தலைமையை தூற்றியபடியே தரம் தாழ்ந்த அரசியலுக்கு கதவு திறந்து விட்டன.

ஸ்ரீனிவாசனும் அவ்வாறு வந்த ஒவருவர்தான். அவர் புலிகளை பேச அழைத்தது மாபெரும் கோமாளித்தனம். தன்னையறிந்தவன் புத்திசாலி. ஸ்ரீனிவாசன் புத்திசாலியல்ல.

அவரைச் சந்திக்க அடெல் பாலசிங்கம் வந்திருப்பார் என்று நம்பியவர்களை நினைத்தால் பரிதாபம் வருகிறது.

■

சமீபத்தில் சிங்களப் பத்திரிகை ஒன்றில் செய்தி ஒன்று கண்ணில் பட்டது.

யாழ்ப்பாணத்தில் கதிரைகள் மேசைகள் செய்வதற்கு புலிகள் கட்டுப்பாடு விதித்துள்ளார்கள்.

கட்டுப்பாட்டுக்கு என்ன காரணம் என்பதையும் அந்தப் பத்திரிகை கூறியிருக்கிறது.

சவப்பெட்டிகள் செய்வதற்கு மரப் பற்றாக்குறை ஏற்படாமல் தடுக்கவே அத்தகைய கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளதாம்.

மேற்கண்ட செய்தியில் எந்தளவுக்கு உண்மை உண்டென்று விசாரித்தறிய முடியவில்லை. விபரம் கிடைக்கவில்லை.

எனினும் சவப் பெட்டிகளோடு பாரிய தாக்குதல்களுக்கு செல்வதை புலிகள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

91ம் ஆண்டில் நடைபெற்ற ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலில் புலிகள் இயக்க உறுப்பினர்களோடு சவப்பெட்டிகளும் அனுப்பப்பட்டன.

அப்போதிருந்துதான் சவப் பெட்டிகளோடு தாக்குதல்களுக்கு செல்லும் பழக்கம் அறிமுகமானது. இப்போது அதுவே பிரபலமாகிவிட்டது.

கழுத்திலே சயனைட்; தோளிலை சவப்பெட்டி.

தாக்குதல் நடவடிக்கைகளுக்காக வாகனங்களில் உறுப்பினர்கள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கும் போது மறுபுறத்தில் வேறு சில வாகனங்களில் சவப்பெட்டிகள் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கும்.

சாவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது.

திரும்பி வருவதை விட போரில் மடிந்து போவதற்கே மதிப்புண்டு என்ற மனநிலை வளர்க்கப்படுகிறது.

வெற்றி-அல்லது வீரமரணம், போரிலே அந்த உணர்ச்சியே பிரதானம் என்பதுதான் பிரபாகரனின் சித்தாந்தம் - கருத்து.

■

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா இவ்வருட இறுதிக்குள் கிழக்கை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வடக்கை அடுத்த வருட முற்பகுதியில் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடப்போவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இதற்கு முன்னரும் இவ்வாறான கால வரையறைகள் கூறப்பட்டிருக்கின்றன.

எனினும் - ஒரு தீவிரமான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை பாதுகாப்புப் படைத் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

சிங்கள மக்கள் மத்தியிலும் இராணுவம் குறித்து நம்பிக்கையீனங்கள் ஏற்பட்டு வருகின்றன.

புலிகளை வெற்றி கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதாக எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

எனவே - ஏதோ ஒரு வகையில் இராணுவம் தன் பலத்தை நிரூபித்துக்காட்ட முற்படக்கூடும்.

யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற பேச்சுகள் இப்போது காணாமல் போய்விட்டன.

அரசாங்கத் தலைவர்கள் இப்போதெல்லாம் புலிகள் அடக்கப்பட வேண்டும் என்ற தோரணையில் மட்டுமே பேசிவருகின்றனர்.

புலிகள் யுத்தம் ஒன்றை வடக்கில் எதிர்பார்த்துத் தயாராகி வருகின்றனர்.

வடக்கே யுத்த விமானங்கள் வட்டமிட்டு வருகின்றன. சாதாரண மக்களும் பலியாகி வருகின்றனர். இடைக்கிடையே புலிகளும் பலியாவதுண்டு. அப்படிப் பலியாவது ஆச்சரியமான நிகழ்வாகவே கருதப்பட வேண்டும்.

போர் தொடர்வது நிச்சயம் என்ற நிலையில் அந்தப் போரின் விளைவுகள் எப்படியிருக்கும் என்ற அச்சமே எங்கும் பரவியிருக்கிறது.

போர் நிறுத்தம் கனவுதான். சமீப காலத்தில் போர் ஓய்வதற்கான அறிகுறிகள் இல்லை.

விடியும் போது யாருடைய வீட்டில் மரண ஓலம் வரும் என்பது தெரியாது.

எப்போதும் எதுவும் நடக்கலாம். அரசும் - புலிகளும் தம் பலத்தை நிரூபிக்கத் தயாராகின்றன. இடையில் பலிக்கடாய்கள் பொழுது விடியும் போது தாம் இருப்போமோ என்பது நிச்சயமற்ற நிலையில் தூங்கச் செல்கின்றன.

போரின்றி வாழ்வது அழகான கற்பனை. அப்படித்தான் யாழ்ப்பாண மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

■



## அதிரடி அய்யாத்துரை



ஐம்பதுக்கு ஐம்பது புகழ் தந்தையின் பெயரை அவர் மைந்தர் கெடுத்துவருகிறார் பாருங்கோ. பெண் அமைச்சர் கிழித்த கிழியல் பிரமாதம். பூ ஒன்று புயலானது. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி.

கொழும்பில் அமிர்தலிங்கத்தாரின் நினைவுக்குழு கருத்தரங்கம் நடத்தினவை. தலைவர் சிவா வழக்கம் போல உணர்ச்சி வசப்பட்டு பேசினவர். இனப்பிரச்சனை ஏன் இல்லை எண்டு கேட்டு நல்ல கிழியல். ஆனாலும் ஒரு இடத்தில சறுக்கிப்போனார். இனப்பிரச்சனை இல்லையெண்டா அமுதர் ஏன் கொல்லப்பட்டவர் எண்டு கேட்ட இடம்தான் சறுக்கினது. இலங்கையில் எந்தவொரு தமிழ் தலைவரும் இனப்பிரச்சனையாலோ அல்லது அரச படைகளாலோ கொல்லப்படவில்லை. சொந்தக் கைகள்தான் கொன்றன. யானைக்கும் அடி சறுக்கினமாதிரி உணர்ச்சியிலை ஒரு சறுக்கலாக்கும்!

திருமலையிலை சில பெண் புரசுகளை நைற்றியோட பிடிச்சுக்கொண்டு போனதாக் கேள்வி. பிறகு என்ன நடந்ததெண்டு கேட்டா எல்லாரும் கைவிரிக்கினம். சுமுகமான நிலை நிலவுகிறதாம். நம்பலாமோ?

வடக்கு-கிழக்கு சபையிலை உள்ள முக்கியமான சபலக்காரர்கள் பற்றிய விசயங்கள் கசியத் தொடங்கியிருக்கிறது. எக்கச்சக்கமான ஊழல்களும் சபையை நாறவைக்குது பாருங்கோ. இன்னொரு செய்தி- இடைக்கால நிர்வாகம் வந்தா நாட்டை விட்டு ஓடவும் சிலர் ரெடியா இருந்தவையாம். ஊழல் விசயம் மாட்டினா என்ன செய்யிறது? தப்பி ஓடினாப் பிரச்சனையில்லையல்லோ.

மூதூரில் ஒரு பவர் உள்ள தமிழ் பெண் மக்களை மிரட்டி உருட்டி அட்டகாசம் செய்யுதாம். இரண்டெழுத்துக்காரர்கள் மத்தியிலும் அவவுக்கு வேண்டப்பட்ட ஆக்கள். கேள்வி கேட்க வேண்டிய பவர் உள்ள இடத்திலையும் சபலக் கேசுகள். பிறகென்ன அவபாடு கொண்டாட்டம்தானே.

மறைந்த முன்னாள் உயர் தலைவருக்கு ஆலோசகராய் இருந்தவர் இப்ப மனவருத்தத்தில் இருப்பதாக ஒரு செய்தி. வெளிநாட்டு ராஜதந்திரிகள் போன் மேலே போன் போட்டு பிரச்சனை இல்லை என்பது சரியோ முறையோ எண்டு கேட்கினமாம். என்னத்தைச் சொல்லுறது. நியாயமான மனுசன். கவலைப்படுறதைவிட வேறை வழி?

முன்னாள் இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் தேசிய உடை தவிர வேறு உடை தொடுவது கிடையாது. அவரது மகன் சர்வபள்ளி கோபால் கொழும்புக்கு வந்தவர். அமுதர் நினைவுக் கூட்டத்திலை பேசினவர். உடை விசயத்திலை சுதேசத்தனம் சுத்தமாகக் கிடையாது. வெளிநாட்டு உடைதான். உடை என்பது அவரவர் சௌகரியத்திற்கு அணியிற விசயம். அதிலையும் போய் வரட்டுத்தனம் காட்டுறது பிழை. புதிய தலைமுறை அதை உணர்ந்து கொள்ளுவது நல்ல விசயம்தான்.

பெறுமதியான சில பொருட்கள் வரிசையில் பாக்கும் சேர்ந்திருக்குது. விலை அப்படி. அலங்காரத்திற்கும், அரசியல் கூட்டங்களுக்கும் பாக்குமரம் வெட்டி விலையை எட்டாத உயரத்திற்கு கொண்டு போட்டினம். சிங்களப் பேப்பர் ஒண்டிலை கார்ட்டூனும் வந்திருந்தது. வைரம், வைடூரியம், மாணிக்கம் வரிசையில் பாக்கும் வந்தாச்சாம்.

பாம்பாட்டிச் சித்தர் விசய ஞானமுள்ள மனுசன். அனுபவிக்க வேண்டியதை எல்லாம் அனுபவிச்சுப்போட்டு ஆசையை விடச் சொல்லிப் புத்தி சொன்ன புத்திசாலி.

ஆசையென்னும் செருப்பின் மேல் அடியை வைத்தே
ஆங்கார முட் காட்டை அறவே மிதித்தே
காசையெனுந் தூர்க்குணத்தில் கனலைக்கொளுத்திக்
காலா காலங் கடந்தோம் என்று ஆடு பாம்பே.

(பாம்பாட்டிச் சித்தர்)

என்ன நீங்களும் கடக்கத் தயார்தானோ?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

உலக நடப்பு

**பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் அமெரிக்க 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி இது.**

**இனப் பிரச்சனையின் தீர்வு தேடி நிற்கும் நமக்கும் அரபாத்தின் அனுபவமும் கண்ணோட்டமும் உதவும்- பயன்படும். இனி பேட்டிக்குள் செல்வோம்.**

# "பாலஸ்தீன அதிகாரம் உருவாகும்"

## யாசீர் அரபாத் நம்பிக்கை



**கேள்வி:** இஸ்ரேலுடனான சமாதான உடன்படிக்கையில் ஒப்பமிட்டுவிட்டீர்கள். அடுத்து என்ன?

பதில்: நாங்கள் பல சிக்கலான பிரச்சனைகளை எதிர்நோக்குகிறோம். சைபரிலிருந்து தான் தொடங்க வேண்டியுள்ளது. காஸாவின் உள்ளமைப்பு நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது. எங்களுக்கு உதவி தேவை. எமது சகோதரர்கள், நண்பர்கள் ஆகியோரிடத்திலிருந்து மட்டுமல்ல, இந்தப் பிராந்தியத்தில் உண்மையான அமைதி நிலைபெற வேண்டுமென்று எண்ணம் கொண்ட அனைவரது உதவியும் எங்களுக்குத் தேவைப்படுகிறது. பாலஸ்தீனத்துக்கு அமைதி தேவை. அதே போன்று இஸ்ரேலியன், அமெரிக்கன், ரஷ்யன் ஆகியோருக்கும் ஒரு அராபியனுக்கும் கூட அதுவே இன்றுள்ள தேவை. உலகிலுள்ள எல்லா சக்திகளுக்கும் இந்தக் கேந்திரத் தானத்தில் கரிசினையுண்டு. ஏனெனில் இங்கு ஏராளமான எண்ணை வளமுண்டு.

எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது. கிளின்ரனின் அன்பும் பெருந்தன்மையும் என்னை ஆட்கொண்டு விட்டன. அதே போன்று வாஷிங்ரன் வாசிகளின் நட்புறவும் என்னைக் கவர்ந்து விட்டன. காகிதத்திலுள்ள அமைதித் திட்டத்தை உண்மையான நடைமுறைக்கு மாற்றுவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் பங்களிப்பு எங்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

**கே:** பாலஸ்தீன மக்களின் மனநிலை பற்றி எவ்வாறு கணிக்கிறீர்கள்?

ப: எங்கும் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. சில கண்டனங்களும் தலைகாட்டுகின்றன. இருப்பினும் இந்த நூற்றாண்டிலேயே காஸா மற்றும் ஜெரிக்கோ சுதந்திரமான தேசிய பாலஸ்தீன அதிகாரம் உருவாகும் என்ற நம்பிக்கை பெரும்பான்மையானோரிடம் காணப்படுகிறது. இந்தப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியர்கள் பின்வாங்கவுள்ளனர். பலருக்குக் கவலையாக இருக்கலாம். ஆனால் இது இயல்பானதே.

**கே:** ஹாமாஸ் போன்ற எதிர்ப்பாளிகளிடத்திலிருந்து தொல்லைகள் தொடராதா?

ப: இல்லை. அவ்வாறு நான் கருதவில்லை. இப்பொழுது நடைபெறும் சம்பவங்களை உள்ளிருப்போரிலும் வெளியே உள்ளவர்களிலும் கணிசமானவர்கள் ஆதரிக்கவே செய்கின்றனர்.

**கே:** எதிர்ப்பாளிகளுடன் எவ்வாறு சம்பந்தம் வைத்துக் கொள்ளுகின்றீர்கள்?

ப: அவர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். ஹாமாஸ் குழுவினருடன் அவசரச் சந்திப்புக்கு வேண்டுகோள் விடுத்தேன். ஏமெனில் சந்திக்க ஒப்புதலளித்துள்ளனர். ஹாமாஸ் இயக்கத்தை உருவாக்கிய ஷேக் அகமட் யஸ்ஸின் விடுதலையினை வலியுறுத்தியுள்ளேன். இத்தகைய தியாகங்களை மறுதலித்த பாலஸ்தீனர்கள் இந்த வெற்றியை எதிர்க்கமாட்டார்கள்.

**கே:** ஏனைய அரபு நாடுகள் இஸ்ரேலுடன் அமைதியினை ஏற்படுத்திக் கொள்ள உங்களுடைய ஒப்பந்தம் தூண்டுகோலாக இருக்குமா?

ப: ஜோர்தானியர்கள் எங்களைத் தொடர்ந்து நேரடியாகவே ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ளனர். சிரியாவும் லெபனானும் இதனைப் பின்பற்றும் என்று நம்புகிறேன்.

**கே:** விரைவில் நடந்தேறுமா?

ப: ஆமாம். அவ்வாறுதான் கருதுகிறேன். ஆனால் ஜோர்தானுடன் இணைந்த சுதந்திர பாலஸ்தீனத்துக்கான ஒரு முன்னெடுப்பாகவே எமது உடன்பாடு உள்ளது. இரு பகுதி மக்களின் தேர்வினைப் பொறுத்தே இது அமையும். அதுவே எமது பொறுப்பாகவிருக்கிறது.

**கே:** வளைகுடாப் போரில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு, சதாம் ஹுசைனை ஆதரித்தமைக்காக அப்பிராந்திய நாடுகள் மிகவும் கோபமுற்றுள்ளனவே. இதில் தற்போது ஏதாவது முன்னேற்றங்கள் தென்படுகின்றனவா?

ப: இதில் ஒரு புதிய அத்தியாயம் ஏற்படும் என்றே நாம் நம்புகிறோம். அவ்வாறு அமைந்தேயாக வேண்டும். உடன்பாட்டின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய பிரதிகளை அரசர் ஃபஹ்துக்கு அனுப்பி வைத்துள்ளேன். வளைகுடா நாடுகளின் ஆதரவுக்கான ஒரு வரைவினை உருவாக்க அரசர் ஃபஹ்த் முயற்சித்து வருவதாக ஓமானின் சுல்தான் குபூஸ் பின் செய்ட் எனக்குத் தெரிவித்திருக்கிறார்.

**கே:** பல வருடங்களாக அரசியலுக்கப்பால் வாழ்ந்து பழக்கப்பட்டுள்ளீர்கள். புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கேற்ற ஆயத்தத்துடனுள்ளீர்களா?

ப: கவலை வேண்டாம். பல அரபு நாடுகளை உருவாக்கும் பணியில் பாலஸ்தீனர்கள் பங்கேற்றிருந்துள்ளனர்.

**கே:** ரியூனிசிலுள்ள பா.வி. அமைப்புத் தலைவர்களுடன் பாலஸ்தீனப் பிரதேசத்திலுள்ள தலைவர்கள் ஒத்துழைப்பது கடினமாகவிருக்கக்கூடும் என்று பலர் நினைக்கின்றனர்.

ப: எங்கள் உறவுகள் பற்றித் தெரியாதவர்கள் அவர்கள். பாலஸ்தீன மக்களின் அடையாளமே பா.வி. அமைப்பாகும். உள்ளேயும் வெளியேயும் உள்ள உறுப்பினர்கள் இதனை நன்கு அறிவர். மட்றிட்டில் நடந்த பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றுவதற்கான பிரதிநிதிகளை நானே தெரிவு செய்து ஒப்புதலும் அளித்தேன். ஆனால் அக்காலகட்டத்தில் இதனை இரகசியமாகவே வைத்திருந்தேன். இப்பொழுது தொடரும் பணிகளில் எல்லோரும் இணைந்தே ஈடுபடுகிறோம். இனிமேல் முற்றிலும் மாறுபட்ட கடுமையான பொறுப்புகள் எங்கள் முன் உள்ளன. ஆகவே சகலருடைய ஒத்துழைப்புகளையும் நாங்கள் இணைத்தெடுக்கிறோம். அவற்றைப் பலப்படுத்துவதுடன் எதிர்காலத்துக்கேற்றவாறு தயார்ப்படுத்தவும் வேண்டியிருக்கிறது.

**கே:** பல்லாண்டுகாலமாக இஸ்ரேலியர்களும் பாலஸ்தீனர்களும் எதிரிகளாகவே இருந்துள்ளனர். நீங்களும் எப்போதும் இஸ்ரேலியர்களுடன் உங்கள் வாழ் நாளில் பெரும் பகுதியைப் பொருதியே செலவிட்டுள்ளீர்கள். இன்றைய மாற்றத்துக்கான காரணம்?

ப: பல வருடங்களாக சமாதானத்துக்காகவே நான் இஸ்ரேலியர்களிடம் கோரி வந்துள்ளேன். அமைதி காண துணிவுள்ள மனிதர் தேவை. இப்பொழுது அரபாத்தும் ராபினும் முன்வந்துள்ளனர். யுத்தத்தைத் தொடங்குவது பலருக்கும் இலகுவானது. ஆனால் அமைதியை உருவாக்குவதுதான் மிகக் கடினமானது. இப்பொழுது உலகம் புதியதோர் வழிமுறைக்குத் திரும்புகிறது. நாங்கள் பாலஸ்தீனர்கள் அந்தப் புதிய உலகுடன் இணைய விரும்புகிறோம். அராபியர்களாகவே இணைய விரும்புகிறோம்.

**கே:** ஒஸ்லோவில் நடைபெற்ற இரகசியப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் என்று எந்தக் கால கட்டத்தில் நம்பினீர்கள்?

ப: பேச்சுவார்த்தைகள் அரைவாசி முடிந்துள்ள காலகட்டத்தில்- ராபினும் பெரசும் இணைந்து ஏற்றுக் கொண்டபோது.

**கே:** உங்கள் வாழ்க்கையில் இத்தகைய காலகட்டம் ஒன்று வந்து விடும் என்று நீங்கள் உண்மையில் கருதியதுண்டா?

ப: நான் ஒரு வலுவான நம்பிக்கையாளன். கடந்தவருடம் சுடானில் நான் பயணம் செய்த விமானம் விபத்துக்குள்ளான போது எனக்கு இரு காட்சிகள் தென்பட்டன. என்னுடைய சகோதரர்களான அபு ஜிஹாட் மற்றும் அபுலியாட் ஆகிய இருவரும் விபத்தில் இறந்த காட்சி முதலில் என்முன் தோன்றியது. உயிர்தப்பியவர்கள், "எனக்காகக் காத்திருங்கள். நானும் வருகிறேன்" என்று நான் கூறியதைச் செவிமடுத்தனர். உடனடியாக ஜெருசலத்திலுள்ள அல் அக்சா பள்ளியினை நேரடியாகக் கண்டேன். அந்தப் பள்ளியில் நான் மீண்டும் தொழும் சந்தர்ப்பம் பெறுவேன் என்பதையே அக்காட்சி எனக்கு உணர்த்தியது.

# "பலஸ்தீன ஆட்சியை எதிர்க்கிறேன்"

## இஸ்ரேல் பிரதமர் பேட்டி

இஸ்ரேலியப் பிரதமர் இற்சாக் ராபின் 'ரைம்' சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி இது.

இஸ்ரேலிய மனோபாவம், ஒப்பந்தத்தின் எதிர்காலம் குறித்து ராபினின் பேட்டியில் இருந்து அறிந்து கொள்ள முயல்வோம்.

**கே: இப்பொழுது உடன் படிக்கையில் ஒப்பமிட்டுவிட்டீர்கள், அடுத்து என்ன?**

ப: என்னைப் பொறுத்தவரை, இதனை நடைமுறைப்படுத்துவதில்தான் பிரதானமான நிலை தங்கியுள்ளது. முக்கியமாக காஸாவில் பல சிக்கல்கள் தோன்றலாம்.

இங்கு ஏழரை இலட்சம் பாலஸ்தீனர்கள் வசிக்கின்றனர். வறுமை, பொருளாதாரம் மற்றும் சமுகவியல் பிரச்சனைகள் அங்குள்ளன. பாலஸ்"ன விடுதலை அணியினர் இத்தகைய பிரச்சனைகளை எவ்வாறு சமாளிக்கப் போகின்றனர் என்பதுதான் சிக்கலானதாகும். ஒரு பெரிய சமுதாயத்தை வைத்து பொறுப்புடன் வழி நடத்தக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. சட்ட ஒழுங்குகளைக் கண்காணிக்க; பயங்கரவாதத்தை முறியடிக்க; பொருளாதாரத்தை வளமுறச் செய்ய; கட்டடங்களை அமைக்க; பாடசாலைகளை இயக்க, தொழில் வளங்களைப் பெருக்க அவர்களிடம் ஆற்றல் இருப்பதாகத் தெரியவில்லை. காஸா- ஜெரிக்கோவில் எத்தகைய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவிருக்கின்றன என்பதில் தான் எதிர்காலம் தங்கியுள்ளது.

**கே: பாலஸ்தீனர்கள் தங்களைத் தாங்களே எவ்வாறு ஆளப்போகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?**

ப: அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதற்கான நல்ல சந்தப்பம் இருக்கிறதென்றே நான் நம்புகிறேன். மிகப் பெருந்தொகையான பணம் வெளியிலிருந்து வந்து சேராவிட்டால் காஸாப் பிராந்தியத்தையே அவர்களால் நிர்வகிக்க முடியாமற் போய்விடும் என்றே நம்ப வேண்டியிருக்கிறது.

**கே: இஸ்ரேலின் பாதுகாப்புக்கான அபாயத்தை எவ்வாறு கணக்கிடுகிறீர்கள்?**

ப: பாலஸ்தீனர்கள் இராணுவ ரீதியில் இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போவதில்லை. குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரேலியர் சிலருக்கு தனிப்பட்ட வகையில் அபாயம் நேரிடலாம்.

**கே: இஸ்ரேலியர்களுக்கான தனிப்பட்ட பாதுகாப்புக்குரிய அபாயம் அதிகரிக்குமானால்?**

ப: பயங்கரவாதம் தொடருமானால், தாங்கள் ஒப்பந்தத்தின் மூலம் அளித்த வாக்குறுதிகளை பாலஸ்தீனர்கள் காப்பாற்றவில்லை என்றாகிறது. அவ்வாறானால் ஒப்பந்தத்துக்கு என்ன அர்த்தம்?

**கே: அவ்வாறானால் உடன் படிக்கையை ஒரு புறம் சுருட்டி வைத்து விடவேண்டியது தானா?**

ப: அவ்வாறு நான் கூறவில்லை. நீங்களே அவ்வாறு கூறுகிறீர்கள்.

**கே: இஸ்ரேல் வலதுசாரிகள் ஒப்பந்தத்துக்கு எதிராகக் கிளம்புவார்களேயானால், உங்கள் அரசாங்கம் எவ்வாறு நடந்து கொள்ளும்?**



அமைதிக்குப் பின் பணியிலீடுபட பயிற்சியிலீடுபடும் பலஸ்தீனப் வாலிபர்

## ஒப்பந்தத்தை சுருட்டி வைப்பது நடக்குமா?

ப: ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்படும் என்று நான் கருதவில்லை. இஸ்ரேல் ஒரு சனநாயக நாடு. எதிர்க்கட்சியினரின் எதிர்ப்புக்கள் தலையெடுக்கலாம். ஆனால் அரசாங்கமும் மக்கள் சபையும் எடுக்கும் தீர்மானத்தை ஒட்டியே நடைமுறைகள் செயற்படுத்தப்படும்.

**கே: பாலஸ்தீன அதிகாரிகளுக்கு எதிரான கிளர்ச்சிகள் தோன்றுமானால் என்ன செய்யலாம்?**

ப: அவர்கள் மத்தியில் பலதரப்பட்ட பிரச்சினைகள் தலையெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. முக்கியமாக ஹாமாஸ் குழுவினர் எதிர்த்தெழுவர். இஸ்ரேலியர்களுக்கெதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை அதிகரிக்க அவர்கள் கவனம் செலுத்துவார்கள். உடன்படிக்கைக்கு மாறான முரண்பாடுகளை இஸ்ரேலியர்களிடம் எற்படுத்துவதே சிறந்த மார்க்கம் என்று அவர்கள் நம்புவதால் அதன்படியே செயற்படுவார்கள். தற்கொலைக்கு ஒப்பான நடவடிக்கைகளை அவர்கள் கடைப்பிடிக்கலாம். இதனால் சிக்கல்களே மலியக்கூடும்.

**கே: பலஸ்தீனர்களுக்கான ஆட்சி அமைவதற்கு தொழிற்கட்சி தனது எதிர்ப்புணர்ச்சியைத் தளர்த்துகிறது போலுள்ளது.**

ப: இல்லை. நான் இதனை எதிர்க்கிறேன். இஸ்ரேலுக்கும் ஜோர்தானுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் சுதந்திர பாலஸ்தீன ஆட்சி நிலவுவதை நான் எதிர்க்கிறேன். இது தவிர்ந்த ஏனைய விருப்பத்தேர்வுகளை இந்தச்சந்தர்ப்பத்தில் வெளியிடுவது நல்ல பலனளிக்கும் என்று நான் கருதவில்லை.

**கே: சிரியா, லெபனான் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளுடன் நீங்கள் கொண்டுள்ள தொடர்புகளை உடன்படிக்கை எவ்வாறு பாதிக்கும்?**

ப: பாலஸ்தீனர்களுடன் இணங்கிப் பொருந்தப்பட்டுள்ள உடன்படிக்கையின் அம்சங்களையிட்டு பேசி ஒரு அமைதித் தீர்வினை ஏற்படுத்த முன்வந்த பங்காளிகள், அவற்றை நடைமுறைப்படுத்த உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஜோர்தானுடன் நாளையே நாம் ஒப்பந்தம் செய்து கொள்ள ஆயத்தமாகவிருக்கிறோம். ஆனால், அது ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்கும் மட்டுமுள்ள பிரச்சினைகளை மட்டும் உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். சிரியாவுடனும் உடன்பாடு ஏற்படலாம், ஆனால் அதற்கான காலக்கெடு சற்றுத் தாமதமாகலாம்.

**கே: அரபாத்துடன் வாஷிங்டனில் நீங்கள் கை குலுக்கிக் கொண்டீர்கள், நீங்கள் எப்படியோ சிரித்தீர்கள். அது உண்மையான சிரிப்பா அல்லது போலியாக வரவழைக்கப்பட்டதொன்றா?**

ப: எனக்கு நினைவில்லை, அங்கு ஒரு மணி நேரம் வரை நின்றிருந்தேன். அக்காலகட்டத்தில் என்னிடத்தில் ஏற்பட்ட எல்லா உணர்வுகளையும் நான் நினைவில் வைத்திருப்பேன் என்று எதிர்பார்க்கிறீர்களா?

**கே: அது என்றும் நினைவிலிருக்க வேண்டிய ஒரு நிகழ்ச்சியாகுமே. உங்களுக்கு எப்படி இருந்தது?**

ப: அது அவ்வளவு சுலபமானதல்ல.

**கே: பா.வி. அமைப்புடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளத்தூண்டிய காரணி என்ன?**

ப: உளரீதியாக இதற்கான நடைமுறைத் தடைகளிலிருந்து மீள எனக்கும் ஏனையோருக்கும் நெடுங்காலம் தேவைப்பட்டது. 30 வருடங்களாக பா.வி. அமைப்பு பல பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்துள்ளது. இவற்றில் பலவற்றை அட்டூழியங்கள் என்று கூடச் சொல்லலாம். என்னுடைய தாழ்மையான அபிப்பிராயப்படி - ஒருவரை மற்றவர் ஏற்றுக் கொண்டமை - அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள கடமை மற்றும் பொறுப்புகளுக்கேற்ப நடப்பார்கள் என்ற நம்பிக்கை- பா.வி. அமைப்பு (மு)ன்பிருந்த நிலையிலிருந்து முழுமையாக மாறிவிட்டது என்று நான் தீர்மானித்தமையால் ஆகும்.

**கே: உங்களுக்கு 71 வயதாகிறது. உங்களுடைய அரசியல் வாழ்க்கையில் மிகவும் பிற்பட்டகாலம் இது. இப்போது ஏற்பட்டுள்ள முடிவுக்குவர அதுவே (வயதும் அரசியல் முதிர்ச்சியும்) தூண்டுதலாக இருந்திருக்கலாமா?**

ப: எனது வயது ஒரு முக்கியமானதல்ல. அரசியலில் இன்று நான் இருப்பதுதான் பிரதானமானது. நான். பிரதமர் பதவிக்குப் போட்டியிட முன்வந்தபோது, சர்வதேச அரங்கு, மத்திய கிழக்கு மற்றும் இஸ்ரேல் ஆகிய மூன்று முக்கிய முனைகளிலும் ஒரே நிலை உருவாகியிருப்பதனை அவதானித்தேன். இப்பிராந்தியங்களில் இரு முக்கிய இலக்குகளை எட்டுவதற்கான காலம் கனிந்திருந்தது. அமைதி மற்றும் பாதுகாப்புடன் இஸ்ரேலிய மக்களின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அம்சத்தில் மாற்றம் செய்ய வேண்டிய நிலை இருந்தது. நாட்டின் எல்லைதான் பிரதானமானது என்ற நிலையினைக் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை. 96 சதவிகிதமான யூதர்கள் அவர்களுக்குரிய சுயாதீனமுள்ள நிலப்பரப்பில் ஒன்றிணைக்கப்பட்ட ஜெரூசலம் உட்பட, பச்சைக் கோட்டுள் வசிக்கின்றனர். இஸ்ரேலின் எதிர்காலம், 96 சதவிகிதமான யூதர்கள் மற்றும் 10 இலட்சம் யூதர்களல்லாத இஸ்ரேலியக் குடி மக்கள் ஆகியோர் தங்கள் பொருளாதாரத்தை, சமுதாய மேம்பாட்டை, கலாசார மற்றும் அறிவியல் ரீதியான முன்னேற்றங்களை எவ்வாறு அடைய முயற்சிக்கப் போகின்றனர் என்பதில்தான் தங்கியிருக்கிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இலங்கையின் இன்றைய அரசியல் நிலவரம், ஒரு தாறுமாறான போக்கைக் கொண்டதாகக் காணப் படுகின்றது.

இலங்கையின் முக்கிய பிரச்னையான இனப்பிரச்னைக்கு அரசியல் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

ஆனால் இக்கோரிக்கைகள் இனவாதக் கண்ணோட்டத்துக்குள்ளானதையடுத்தே, இலங்கையில் இன்று இனப்பிரச்னை ஒரு தீராத நோயாக இருந்து வருகின்றது.

சேர்பியர்களும், பொஸ்னிய முஸ்லிம்களும் மூர்க்கத்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டு பரஸ்பரம் இரு தரப்பினரதும் உயிர், உடமைகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

அலசுவது – இராஜதந்திரி

# மனித உரிமைகளை மதிக்கும் நாட்டிலேயே சிறந்த நாகரிகத்தைக் காணமுடியும்!



பரம் குமாரசுவாமி

தீர்வைக் காண்பதில் எதுவித அக்கறையு. மற்றவர்களாகவே ஆட்சியாளர்கள் காணப்படுகின்றனர்.

இந்நிலையில், சர்ச்சைக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இராணுவ ரீதியிலான கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டிருப்பதுடன், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளியே தென்னிலங்கையிலும் தமிழ் பேசும் மக்கள் சந்தேகத்துக்கிடமானவர்களாகவே நோக்கப்படுகின்றனர்.

வயது வேறுபாடின்றியும், ஆண் பெண்கள் என்ற வித்தியாசமின்றியும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்கள் கைதாகி வந்தனர். ஆனால் அண்மைக் காலங்களில் அரசாங்க, மற்றும் தனியார் துறையில் கௌரவமான பதவிகளை வகிக்கும் தமிழ் பேசும் உத்தியோகஸ்தர்கள் கூட பொலிசாரினால் விசாரணைக்குள்ளாகியுள்ள சம்பவங்கள், மிகவும் வேதனையளிப்பனவாகவும் ஒருவரின் தன்மானத்திற்குச் சவால் விடுவனவாகவும் காணப்படுகின்றன.

தலை நகரில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஊடுருவியுள்ளனர் என்று அடிக்கடி கூறியபடி பொலிசாரும், பாதுகாப்புப் படையினரும் தேடுதல்களை மேற் கொண்டு வருகின்றனர்.

தலைநகரின் பாதுகாப்பு, அரசியல் தலைவர்கள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பு என்பன நிச்சயம் தகுந்த வகையில் உறுதி செய்யப்பட வேண்டும்.

ஆயினும் இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் நாகரிகமான முறையிலும், ஒருவரது அடிப்படை மனித உரிமைகளைப் பாதிக்காத விதத்திலும் அமைந்திருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை இனப்பிரச்னை காரணமாக ஏற்பட்ட உயிர், உடமைச் சேதங்கள் ஒரு புறமிருக்க தனிமனித சுதந்திரத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும் பாதிக்கும் நடவடிக்கைகள் பிரதேச வேறுபாடின்றி நாட்டின் அனைத்துப் புறத்திலும் காலத்துக்குக் காலம் இடம் பெற்று வருவதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இன வேறுபாடின்றி அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் உட்பட பல்வேறு தரத்திலும் அப்பாவிப் பொதுமக்கள் கடந்த பத்து வருட காலத்தில் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும், ஆயிரக் கணக்கில் கொலையுண்டுள்ளார்கள்.

அத்துடன் மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் தடுப்புக் காவல் கைதிகளாக தென்னிலங்கையின் சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மற்றும் வடக்கேயும் பலர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், சித்திரவதைகளுக்குமுள்ளாகி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தமது இன, மொழி, மற்றும் பிரதேச ரீதியிலான தனித்துவங்களைப் பேணும் வகையிலேயே தமிழ் பேசும் மக்கள் அரசியல் ரீதியிலான

இலங்கை அரசு இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளாக பேச்சுவார்த்தைகள், வட்டமேசை மகாநாடுகள், மற்றும் ஒப்பந்தங்களைக் கூடச் செய்திருந்தது. ஆனால் இவை அனைத்துமே அரைகுறைத் தீர்வைத் திணிப்பனவாகவும், நீண்டகாலத் தீர்வைக் கருத்தில் கொண்டிராதவையாகவுமே காணப்பட்டன.

பேச்சுவார்த்தைகளையும், ஒப்பந்தங்களையும் மேற்கொண்ட அதே வேளை, இராணுவ நடவடிக்கைகளையும், ஏக காலத்தில் தமிழ் பேசும் பகுதிகளில் இலங்கை அரசு துரிதப்படுத்திவிட்டிருந்தது.

இது தவிர சந்தேக நபர்கள் என்று கைதாகிய தமிழ் இளைஞர்கள் பலர் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்ட நிலையில் விசாரணைகளுக்குட்பட்டிருந்தனர். மேலும் பலர் விசாரணைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் காணாமலும் போயிருந்தனர்.

1977ம் ஆண்டிலிருந்தே யாழ் குடாநாட்டில் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. தொடர்ந்து தமிழ் இளைஞர்களின் தீவிரவாதப் போராட்டமும் விரிவடைந்த நிலையில், மோதல்கள் ஒரு புறமிருக்க, அடிப்படை மனித உரிமை மீறல்களும் ஏட்டிக்குப் போட்டியாகவே அதிகரிக்கலாயின.

இந்த அதிகரிப்பு, இன்று ஓர் உச்ச நிலையை அடைந்த நிலையில், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சகஜமானவையாகவே மாறியிருக்கும் நிலை காணப்படுகின்றது.

தென்னிலங்கையிலும் மனித உரிமை மீறல்கள் படுமோசமான நிலையை அடைந்திருந்தன. ஒரு சில வருடங்

## போலித்தனங்கள்–கபடத்தனங்களின் விளைவே இன்றைய இனக்குரோதம்!

களுக்கு முன்னர் தென்னிலங்கையின் பல பாகங்களிலும் ஜே.வி.பி தீவிரவாதம் தலை காட்டியிருந்தது.

அப்போது இரத்தத்தையே உறைய வைக்கும் வகையில் தனிநபர் கொலைகள் இடம் பெற்றிருந்ததுடன் தென்னிலங்கையில் வகை தொகையின்றி மனித உடல்கள் குண்டுகள் துளைத்த நிலையிலும், கத்தி, கோடரியினால் குதறப்பட்டும் வீதியோரங்கள், வீடு, வாசல்களில் வீழ்ந்திருக்கக் காணப்பட்டன.

இது தவிர ஆறுகளிலும் கொலையுண்ட மனித சடலங்கள் மிதந்து சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததுடன், குவியல்களாக மனித உடல்கள் தீயிடப்பட்டிருந்ததையும், காணக்கூடியதாக இருந்தது.

இதே வேளை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களிலும் கடந்த ஓரிரு வருடங்களில் பெண்கள், குழந்தைகள் முதியோர் உட்பட நூற்றுக் கணக்கான அப்பாவிக் குடிமக்கள் மிருகத் தனமான முறையில் வேட்டையாடப்பட்டிருந்த சம்பவங்களும் இடம் பெற்றிருந்தன.

எனவே இத்தகைய நிகழ்வுகள், இலங்கையில் மனிதாபிமானத்துக்கு மதிப்பளித்த காலங்கள் மலையேறி விட்டதையே சுட்டிக் காட்டுவதாக இருக்கின்றன.

இலங்கையின் பிரதான பிரச்னையாகக் காணப்படும் இனப்பிரச்னையைத் தீர்ப்பதில் முனைப்பான அரசியல் நடவடிக்கைகளை முன்வைக்காதிருக்கும் ஆட்சியாளர்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் இடம் பெறுவதை தடுப்பதிலும் போதியளவு அக்கறை காட்டாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

உலகில் இன்று இரத்த வெறிபிடித்த இனக்குரோதத்துக்கு எடுத்துக் காட்டாக யூகோஸ்லாவியா விளங்குகின்றது. இங்கு பொஸ்னிய முஸ்லிம்கள், மற்றும் சேர்பிய இனங்களுக்கிடையிலான மோதல்கள் படுமோசமான முறையில் இடம் பெற்று வருகின்றன.

ஆனால் இலங்கையின் இனப் பிரச்னை இந்தகைய மூர்க்கத்தனமான போக்கினைக் கொண்டிராத போதிலும், வடக்கு-கிழக்கில் மேற் கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், அப்பகுதிகளில் வாழும் மக்களை பாரதூரமான இழப்புகளுக்கு முகங்கொடுக்கும் நிலையை உருவாக்கி விட்டுள்ளன.

எனவே இந்த வடக்கு-கிழக்கின் யுத்தக் கெடுபிடிகளிலிருந்தும் தப்பி வந்து தென்னிலங்கையில் தஞ்சம் புகுவோருக்கு அபயக்கரம் நீட்டுவதைவிட அவர்களின் கைகளில் கைதிகளாக் விலங்கு மாட்டுவதிலேயே அரச தரப்பினர் அக்கறை காட்டுகின்றனர்.

கடந்த வாரங்களில் கொழும்பு மாநகரில் சட்டத்துறையினரின் சர்வதேசரீதியிலான மாநாடொன்று இடம் பெற்றிருந்தது.


லோ ஏஸியா-93 (LAW ASIA-93) என்று இந்த மகாநாடு அழைக்கப் பட்டிருந்தது.

ஆசியா பசுபிக் பிராந்தியங்களின் பிரபல சட்டத்தரணிகள், நீதியரசர்கள், பிரதம நீதியரசர்கள், சட்டமா அதிபர்கள் உட்பட சட்டக் கல்வித்துறைசார்ந்த கல்விமான்களும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

இம் மகாநாட்டில் கலந்து கொண்டிருந்த உள்நாட்டு, வெளி நாட்டுப் பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியிருந்தது.

இம்மகாநாட்டின் இறுதியில் 'லோ ஏஸியா' (LAW ASIA) அமைப்பின் புதிய தலைவராக மலேஸியா நாட்டைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணி திரு.பரம் குமாரசுவாமி தெரிவாகியிருந்தார்.

திரு. பரம் குமாரசுவாமி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம் பெற்ற பதவியேற்பு வைபவத்தில் உரை யாற்றிய போது தாம் மலேசியா நாட்டைச் சேர்ந்தவராக இருக்கின்ற போதிலும், தமது பெற்றோர் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.



அமிர்தலிங்கம்

திரு. குமாரசுவாமி, வெளிநாட்டு சட்டத்துறை வல்லுநர்கள் நிறைந்திருந்த மகாநாட்டு மண்டபத்தில் தாம் நிகழ்த்திய உரையின் தொனிப் பொருளாக அடிப்படை மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் உலக நாடுகள் மனித உரிமைகளை மிகவும் உயர்ந்த நிலையில் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் திரு. குமாரசுவாமி எடுத்துரைத்திருந்தார்.

'லோ ஏஸியா'த் தலைவர் திரு.பரம் குமாரசுவாமி கூறியது இதுதான்:-

"அடிப்படை மனித உரிமைகளை உயர்ந்த தரத்தில் பேணி, அந்த உரிமைகளுக்கு தகுந்த மதிப்பளிக்கும் ஒரு நாட்டிலேயே சிறந்த நாகரிக வளர்ச்சியைக் காணமுடியும்.




"பொருளாதார ரீதியாகவோ, கைத்தொழில் ரீதியாகவோ ஒரு சிறந்த நாகரிகத்தைக் கொண்டிருக்க முடியாது. அடிப்படை மனித உரிமைகள் பேணப்படுவதன் மூலமே மனிதாபிமானத்தை எதிர்பார்க்க முடியும். அத்துடன் மானிடப் பண்புகளையும் பாதுகாக்க முடியும்.

"எனவே அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் மூலம் அடையும் வளர்ச்சியே ஒரு நாகரிகமான வளர்ச்சியாக அமைய முடியும். இந்நிலையில் அனைத்து உலக நாடுகளும் அவற்றின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கே தலையாய முக்கியத்துவம் தர வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

திரு.பரம் குமாரசுவாமியின் இந்த உரை இலங்கையில் தருணம் அறிந்து பகரப்பட்டதாகவே காணப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை அடிப்படை மனித உரிமைகள் என்ற விடயம், புத்தி ஜீவிகள் மட்டத்திலான கருத்துப் பரிமாற்றத்துக்குரிய விடயமாகவே பெரிதும் காணப்படுகின்றதே தவிர, நடைமுறையில் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதென்பது சாத்தியமற்றதொன்றாகவே விளங்குகின்றது.

இலங்கையில் சர்ச்சைக்குரிய வடக்கு-கிழக்குப் பிரதேச தமிழ் பேசும் மக்கள் தமக்கென ஒரு தகுந்த தலைமைத்துவம் அற்ற நிலையிலேயே தற்போது காணப் படுகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் அரசியல் ரீதியாகவும் மற்றும் சமூக, பொருளாதார ரீதியாகவும் பெரும்பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர். தென்னிலங்கையில் மட்டுமல்லாது வடக்கு-கிழக்கிலும் ஒரு பூரண பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

அடக்கு முறைகள், அசம்பாவிதங்களுக்கெதிராக குரல் எழுப்ப முடியாது ஒரு கட்டுண்ட நிலையில் அவர்கள் இருக்கக் காணப்படுகின்றனர்

இத்தகைய சூழ்நிலையிலேயே 'லோ ஏஸிய'த் தலைவர் திரு.பரம் குமாரசுவாமி கொழும்பில் வைத்து மனித உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டவை ஆட்சியாளர்கள், அரசியலாளர்கள் மற்றும் அடக்குமுறையாளர்களின் கவனத்துக்குரியவையாக விளங்குகின்றன.

இதே வேளை கடந்த 20ந் திகதியன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலதிபர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் ஞாபகார்த்தமாக விரிவுரையொன்றும் இடம் பெற்றிருந்தது.

இந்த நூற்றாண்டின் சமய தத்துவ ஞானிகளில் ஒருவரும், முன்னாள் இந்திய ஜனாதிபதியுமான டாக்டர் சர்வபள்ளி இராதாகிருஷ்ணனின் புதல்வர் சர்வபள்ளி கோபால் இந்த ஞாபகார்த்த உரையை வழங்கியிருந்தார்.

பேராசிரியர் சர்வபள்ளி கோபால் புதுடில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர்களில் ஒருவரும், இந்தியாவின் பிரபல வரலாற்றறிஞருமாவார்.

"தென் ஆசியாவில் சமயச்சார்பின்மை" என்ற தலைப்பில் பேராசிரியர் கோபாலின் விரிவுரை விளங்கியிருந்தது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளின் சமயச் சர்ச்சைகளை வரலாற்று ரீதியாக ஒப்பிட்டு ஆராய்வதாகவும், உலக அரங்கில் சமய வாதங்களின் நிலையை விமர்சிப்பதாகவும் இந்த விரிவுரை விளங்கியிருந்தது.

பேராசிரியர் சர்வ பள்ளி கோபால் அரசியலில் எக்காரணம் கொண்டும் மதக் கோட்பாடுகள் ஆதிக்கம் செலுத்தலாகாது எனக் குறிப்பிட்டிருந்ததுடன், தமது நாடான இந்தியாவில் இந்து-முஸ்லிம் சர்ச்சை ஏற்படுத்தியிருந்த தாக்கத்தையும் விபரித்திருந்தார்.

அவர் தமது விரிவுரையின் இறுதியில், மதச்சார்பின்மை இனங்களை ஒற்றுமைப்படுத்துவதிலும், ஒரு நாட்டை அபிவிருத்திக்கு, இட்டுச் செல்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றது எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட நாடுகள் குறுகிய மத மற்றும் இனவாத விடயங்களை முதன்மைப்படுத்தலாகாது. அவை கல்வி, மற்றும் ஆரோக்கியமான சமூக வளர்ச்சிசார்ந்த விடயங்களிலேயே கூடுதல் கவனத்தைச் செலுத்த வேண்டும், என்றும் தெரிவித்திருந்தார்.

அமரர் அமிர்தலிங்கத்தின் ஞாபகர்த்த பேருரை வைபவத்துக்கு முன்னாள் நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் தலைமை தாங்கியிருந்தார்.

திரு. ரொனி டி மெல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் திரு. அமிர்தலிங்கத்துடன் ஒன்றாகக் கல்வி பயின்றவர். எனவே திரு.அமிர்தலிங்கமும், தாமும் பல்கலைக்கழக நாட்கள் முதற்கொண்டு பாராளுமன்ற நாட்கள் வரை கொண்டிருந்த உறவுகளை திரு. ரொனி டி மெல் இந்த ஞாபகர்த்த வைபவத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இன்றைய அரசின் அமைச்சர்கள், ராஜதந்திரிகள், இடது, வலதுசாரி அரசியலாளர்கள், பல்கலைக்கழக கல்விமான்கள், சட்டத்துறையைச் சேர்ந்த பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் உட்பட இன,மத வேறுபாடின்றி பெருந்திரளானோர் அன்றைய அமிர்தலிங்கம் ஞாபுகர்த்த வைபவத்தில் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையில் சிங்கள, தமிழ் இனங்கள் அன்னியோன்யமாக வாழக் கூடிய வாய்ப்புக்கள் முற்றிலுமாக அற்றுப் போய்விடவில்லை என்பதனையே இந்த வைபவம் உணர்த்தியிருந்தது.

திரு. ரொனி டி மெல் அமரர் அமிர்தலிங்கத்தை வாயாரப் புகழ்ந்தார். கூடவே திரு. அமிர்தலிங்கமும், ஏனைய தமிழ் அரசியலாளர்களும் தம்முடன் கொண்டிருந்த அன்னியோன்யங்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

இரு இனங்களின் அரசியலாளர்களும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட போதெல்லாம் 'கைலாகு' கொடுத்துக் கட்டித் தழுவியிருந்தனர்.

ஆனால் தாம் தலைமை தாங்கிய மக்களிடையே மட்டும் கைகலப்பை உண்டு பண்ணி பகைமையைத் தூண்டி விட்டிருந்தனர்.

இப்பகைமையே இன்று இரத்த ஆறாகப் பிரவாகமெடுத்திருக்கும் நிலையில், அமிர் ஞாபகர்த்தக் கூட்டம் போன்ற வைபவங்களில், இரு இனங்களின் அரசியலாளர்களும் தமது பசுமையான உறவுகளை அசை போடுவதை அவதானிக்கும்போது, போலித்தனங்கள்-கபடத்தனங்களின் விளைவே இன்றைய இனக்குரோதம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

### அட்வைஸ்

# வாழத் தெரிந்தால் வாழலாம்

காதல் இனிது. குடும்ப வாழ்வில் காதல் போயின் கசப்பே மிஞ்சும். சலிப்பே தோன்றும்.

"சே....இது என்ன வாழ்க்கை" என்று சோர்வே தலைகாட்டும்.

ஆணும், பெண்ணும் இணைந்து புரிந்து இயங்குதலே குடும்ப உறவுகளில் மலர்வை ஏற்படுத்தும்.

புரிதல் என்பது முக்கியத்துவமானது. 'ஆணைத் திருப்திப்படுத்து. கணவன் சீறினாலும் கட்டுப்பட்டு அடங்கிப் போ'.

'கணவன் முகம் கோணாமல் நடந்து கொள்'. இவைபோன்ற ஒரு பக்கச் சார்பான கட்டுப்பாடுகள் மட்டுமே இங்கே அதிகமாகப் போதிக்கப்படுகின்றன.



பெண், உயிருள்ள ஜீவன் என்பதை மறந்து விடுகிறார்கள்.

பெண்ணும் உணர்ச்சிகள் உள்ள ஜீவன் தான் என்பதை உதாசீனப்படுத்துகிறார்கள்.

மனைவியை எப்படி நடத்த வேண்டும்? மனைவியோடு எப்படி நடக்க வேண்டும் என்று போதித்திருக்கிறார்களா? கிடையாது.

ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணும் புரிந்து நெருங்கி கலந்து வாழ்தலே குடும்ப உறவுகளில் புத்துணர்வுகளை ஏற்படுத்தும்.

மனம்விட்டுப் பேசுதல், விருப்பங்களை பகிர்ந்து கொள்ளுதல், விவாதித்தல், விட்டுக் கொடுத்தல், இன்பத்திலும், துன்பத்திலும் அனைத்திலும் சரிபாதியாய் பங்கெடுத்தல் என்பவையே குடும்ப உறவுகளை வலுப்படுத்தும்.

குடும்பம் சுகம். குடும்பம் இனிதானது. ஊடலும், கூடலும் சுவையான கட்டங்கள்.

ஆணும், பெண்ணும் கலத்தல் என்பது வெறுமனே வாரிசுப் பெருக்கத்திற்கான இயந்திர ரீதியான தொழிற்பாடல்ல.

கலத்தல் என்பது இனிக்க வேண்டு மானால் உடல்கள் கலக்கு முன்னர் உள்ளங்கள் கலக்க வேண்டும்.

வெறும் உடல் சுகம் மட்டுமே தேவை என்றால் இனிய துணை அவசியமில்லை.

உள்ளம் கலந்து உடல்கள் இணைகையில் இல்லறம் இனிமையாகிறது. தினமும் புதுமையாகிறது.

மணவாழ்க்கைக்கான ஆலோசகர் டாக்டர் வின்சென்ற் டி ஃபொலி கூறும் கருத்துக்களை இப்போது கவனத்தில் கொள்ளுங்கள்.

## லேடீஸ் ஸ்பெசல்


1. உங்கள் திருமணத்தையிட்டும் வாழ்க்கைத் துணையையிட்டும் நல்ல பல எண்ணங்களை முதலில் நிரைப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் துணையின் நல்ல குண நலன்கள் அனைத்தையும் வரிசைப்படுத்திப் பாருங்கள். அவை பெரும்பாலும் நல்ல பண்புடையனவாக இருப்பதை உணரும் போது உங்களுக்கே வியப்புண்டாகும்.
   இவற்றையே உங்கள் உறவின் மூலதனமாக்குங்கள். உடலுறவில் உங்கள் துணை அதிக நாட்டம் கொண்டவரானால் அதற்கு அவருடன் ஒத்துழையுங்கள். இதற்கென அவர் சிறந்தவரெனவே நீங்கள் மனத்தளவிலும் கருத்தூன்றுங்கள். கூடல் உங்களுக்கு மேலும் சுவைக்கும்.
2. உங்கள் இருவருக்கும் மிக அந்நியோன்யமான நெருக்கம் இருக்க வழி பாருங்கள். உங்களுடைய துணையின் பிரச்சனைகள் என்னென்ன என்பதனை அறிய முயலுங்கள். ஒரு நாளைக்கு ஐந்து நிமிட நேரமாவது இருவரும் ஒளிவு மறைவு இல்லாமல் மனம் விட்டுப் பேசுங்கள். ஒருவரை ஒருவர் பரஸ்பரம் புரிந்து கொள்ள இது வழிவகுக்கும்.
3. உங்கள் துணையுடனான உறவே எப்பொழுதும் முக்கியமான ஸ்தானத்தில் வைக்கப்பட வேண்டும். குழந்தைகளோ, உங்கள் தொழிலோ மற்றும் பெற்றாரோ கூட உங்கள் வாழ்க்கைத் துணைக்கு அடுத்த நிலையில் தான் கணிக்கப்பட வேண்டும். வாழ்க்கையைப் பங்குபோட மற்றுமொரு பெண் மூலமோ அல்லது ஆண் மூலமோ மட்டும் பிணக்குகள் தோன்றுவதில்லை. கணவனிடமோ மனைவியிடமோ உறவாட நெருங்கும் எவரிடமிருந்தும் சிக்கல்கள் உருவாகலாம். ஆகவே உங்கள் துணையுடன் ஒன்றியிருந்தால் சிக்கலை விலக்கிக் கொள்ளலாம்.
4. உங்கள் மண வாழ்வு ஒவ்வொருநாளும் புதுமையுடன் துலங்க வழி தேடுங்கள். புதுப்புது அம்சங்களை உங்கள் அன்றாட வாழ்வில் கண்டு பிடியுங்கள். வாழ்க்கையிலும் உறவிலும் புதுமையினைத் தேடத் தேட தெவிட்டாத இன்பமே ஊறும். இத்தகைய புதிய அனுபவங்களை இருவரும் இணைந்தே- ஒருவருக்கொருவர் தேடிக் கண்டுபிடிக்க முடிந்தால் வாழ்வில் சிரத்தையோ சுவையோ என்றும் குறையப் போவதில்லை.
5. திருப்தியற்ற நிலையை- மனத் துன்பங்களை வெளிப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அவற்றைக் கண்டிக்க முற்படாமல் ஒருவருக்கொருவர் விளக்கி -உரிமையுடன் கருத்துப் பரிமாறிக் கொள்ள வேண்டும். குறைபாடுகளைக் கண்டாலும் கடிந்து விடாமல் அனுதாபத்தோடு இணைந்து தீர்வுகாண முயல வேண்டும். விமர்சிக்கத் துவங்கினால் கோப உணர்வே தலையெடுக்கும். உங்கள் துணைக்கு உங்கள் உணர்வை எடுத்துக் கூற வேண்டுமே தவிர கண்டிக்கவோ விமர்சிக்கவோ கூடாது.

எடுத்துக் காட்டாக- கணவர் வீடு வந்து அங்கு எல்லாம் குழம்பிக்கிடப்பதைப் பார்த்து " இந்த பன்றித் தொழுவத்தில் மனிதன் குடியிருப்பானா?" என்று கோபத்தில் கேட்டால் அதற்கேற்றாற் போல் மனைவியின் பதில் சூடாகவே அமையும். இதைவிடுத்து "இந்த வீடு கிடக்கும் நிலையும் நீ இதனைப் பொருட்படுத்தாமல் இருப்பதும் சங்கடமாக இருக்கிறதே" என்று பக்குவமாக கணவன் சொன்னால் மனைவியின் பதிலும் பக்குவமாக அமைந்து இருவரும் இணைந்தே வீட்டைச் சுத்தமாக்கும் தன்மைக்கு இடமளிக்கும்.

கண்டிக்க ஆரம்பித்தால் இருவருக்குமிடையிலான உறவு கசக்கும். உறவு இனிக்க வேண்டுமானால் கலந்துரையாடி கருத்துப் பரிமாறிக்கொள்ள இடம் தருவது முக்கியமாகும்.

# நீங்களும் தைக்கலாம்

## குழந்தைச் சட்டை





சுதா
நீர்கொழும்பு

18" நீள அகலமான துணியை எடுத்து ABCD எனப் பெயரிடுக. B யும் D யும் ஒன்றாக சேரும்படி மடிக்குக. A யிலிருந்து E வரை 4"மும் A யிலிருந்து F வரை 4"மும் அளந்து EF ஐ இணைக்குக. Eயிலிருந்து பின் கழுத்தாழத்திற்கு 1/2"மும் முன் கழுத்தாழத்திற்கு 1 1/2"மும் வரைக.

கழுத்தகலம் E யிலிருந்து I வரை 1 1/4" எடுத்து கழுத்தகலத்துடன் இணைக்குக.

F லிருந்து G வரை",2 1/2"ற்கு 1/2" உள் நோக்கி கை வரைக. A யிலிருந்து 18" H வரை அளந்து D,H ஐ இணைத்து கீழ் மடிப்பு வெட்டுக.

கை, கழுத்து, கீழ் மடிப்பு போன்றவற்றை ஸ்கலப் செய்தால் அழகாக இருக்கும். நீங்கள் விரும்பின் முன் பக்கத்திற்கு சிறியதாகப் பூப் போடலாம். குழந்தைகளுக்கு அழகாகவும் எளிமையாகவும் இருக்கும்.



# சமைப்போம் சுவைப்போம்

## உருளைக்கிழங்குப் பொரியல்

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 1/2 கிலோ |
| தேங்காய் முதல் பால் | - 1/2 கப் |
| மஞ்சள் தூள் | - சிறிதளவு |
| காய்ந்த மிளகாய்த்தூள் | - 2 மேசைக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| ரம்பை இலை | - சிறிதளவு |
| மாசிக்கருவாடு (தூளாக்கியது) | -2 மேசைக்கரண்டி |
| உப்பு | - சுவைக்கேற்ப |
| இஞ்சி | - 3 சிறிய துண்டம் |
| உள்ளி | - 3 பல்லு |
| எண்ணெய் | - போதியளவு |
| சின்ன வெங்காயம் (வெட்டியது) | - 5 மேசைக்கரண்டி. |

**செய்முறை:**

உருளைக்கிழங்கைக் கழுவி ஒரு பாத்திரத்தினுள் நீர் விட்டு வேகவைக்கவும். வேகியதும் தோலை உரித்து நான்காக நறுக்கிக் கொள்ளவும். நறுக்கிய கிழங்குத் துண்டங்களை ஒரு பாத்திரத்தில் இட்டுத் தேங்காய்ப்பாலை விடவும். வேறொரு பாத்திரத்தில் மீதியுள்ள அனைத்து மளிகைப் பொருட்களையும் (வெங்காயம் தவிர்ந்த) இட்டுக் கொதிக்க விடவும். வேறொரு பாத்திரத்தில் எண்ணெய் சிறிதளவு விட்டுக் கொதித்ததும், வெங்காயத்தை இட்டுத் தாளித்து அதனை முதற்பாத்திரத்தினுள் இட்டுக் கிளறவும். குழம்பைக் குறைந்த வெப்பத்தில் வற்றும் வரை கலக்கிக் கொண்டே கொதிக்க விடவும். குழம்பு வற்றியதும் இறக்கி வைக்கவும்.

# தன்கையே தனக்குக் கெடுதியா?

## தமது தலைமுடியை தாமே பிய்த்தெடுப்போர்!

பல பெண்கள் தங்களை அறியாமலே தங்கள் தலையிலுள்ள முடிகளைப் பிடுங்கி விடுகிறார்கள்.

இதனால் அவர்கள் வழுக்கைத் தலையர்களாகி விடுகின்றனர். முடியை இழந்த பின்னர் தான் தாங்கள் தவறு செய்து விட்டதாக விசனப்படுகின்றனர்.



இது உடலியல் தொடர்புடைய நோயா அல்லது உளவள ரீதியானதொரு பாதிப்பா என்பதனை மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியாதிருக்கிறது. சில விட்டமின் சத்துக்களின் குறைபாட்டினால் இத்தகைய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டு விடுகின்றனர் என்றும் சிலர் கருதுகின்றனர். இத்தகைய நோய் அல்லது கெட்ட பழக்கம் தம்மிடமிருப்பதைப் பெரும்பாலானவர்கள் உணர்வதில்லை. தெரிந்தாலும் இதனை மருத்துவ நிபுணர்களிடம் கலந்தாலோசிக்கவும் நாட்டம் கொள்வதில்லை.

தலை முடியினை மட்டுமே பெரும்பாலானவர்கள் பிடுங்கி எடுக்கின்றனர். மிகக்குறுகிய எண்ணிக்கையிலுள்ளவர்கள் தங்கள் கமக்கட்டு, மூக்குத் துவாரம் போன்ற இடங்களிலுமுள்ள மயிர்களைப் பிடுங்கி எடுக்கின்றனர். சில ஆண்களிடமும் இக்குறைபாடு உண்டு. இளவயதினராக இருக்கும் போது மீசை தாடி வளர ஆரம்பித்ததும் அவற்றைப் பிடுங்கத் தலைப்பட்டு விடுகின்றனர். இதில் அவர்களை அறியாமலே ஒருவகை இன்ப உணர்வு பெறுபவர்களாகவும் உள்ளனர்.

சில பெண்கள் தங்கள் தலை முடிகளைப் பிடுங்கி வாயில் வைத்து பற்களால் கடித்து விழுங்கியும் விடுகின்றனர். இவற்றை சீரணிக்க வைக்கும் ஆற்றல் வயிற்றுக்கு இல்லாமையால் மயிர்கள் திரண்டு உடலின் உட்பகுதியில் எங்காவது ஒட்டிக் கொள்ளுவதுண்டு. இதனை வெளியேற்ற சத்திரசிகிச்சையும் சில சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டதுமுண்டு.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள முடியுடன் கூடிய நோய்களை ஆய்வு செய்யும் டாக்டர் பிராங்க் நீடில்ஸ் இத்தகைய பாதிப்புள்ள பலருடைய நிலை பற்றி ஆராய்ந்து வருகிறார். இத்தகைய பழக்கமுள்ளவர்களுடைய முடிகளை ஒட்ட வெட்டுதல், அவர்களுடைய கைகளுக்கு உறை போடுதல் போன்ற பலமுறைகளைக் கடைப்பிடித்தும் சரியான சிகிச்சை முறைகள் கண்டு பிடிக்கப்படவில்லை என்கிறார் டாக்டர் பிராங்க்.

தங்களை அறியாமலே தங்கள் தலை முடியினை பிடுங்குபவர்கள், அதனால் வழுக்கையானதும் பெரும் மனவேதனை அடைகிறார்கள். வழுக்கையை மறைப்பதற்கு போலிமுடி டோப்பாக்களை அணிய ஆரம்பிக்கின்றனர். தங்களிடம் இத்தகைய குறைபாடு இருப்பதைப் பிறர் அறிந்து விடாமலிருக்க வேண்டும் என்றே கருதுகின்றனர். ஆனால் தங்களை அறியாமலே தலைமுடியினைப் பிய்க்கும் நிலைக்கு ஆளாகிவிடுகின்றனர். இவ்வாறு டாக்டர் பிராங்க் நீடில்ஸ் கூறுகிறார்.

### பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

முதற்பரிசு - பட்டுச்சேலை
ஆறுபேருக்கு இல்ல உபயோகப் பொருட்கள்
ஆறுதல் பரிசுகளாக காத்திருக்கின்றன.


மகளிர் மட்டுமே பங்குகொள்ளும் இப்போட்டியில் பங்கு கொள்வதும் சுலபம். பரிசுகளை பெறுவதும் மகா சுலபம்.

முரசு 9 முதல் தொடர்ந்து 27வது வரை (15 முரசுகள்) லேடீஸ் ஸ்பெசல் தரும் விடயங்களை அவதானமாய் படித்துவாருங்கள்.

பின்னர் உங்களை நோக்கி கேள்விகள் தரப்படும். ஆக பதினைந்து கேள்விகள் மட்டும்.

சரியான விடை எழுதுவோரில் ஏழு பேரை பிரபல பிரமுகர் ஒருவர் தெரிவு செய்வார்.

# வீட்டுக் குறிப்புகள்



வீட்டில் நீங்களாகவே பிளவுஸ், கவுண் என்று தைத்துக் கொள்கிறீர்களா? எந்த உடை தைப்பதாக இருந்தாலும், தைக்க வேண்டிய துணியை ஒரு முறை தண்ணீரில் நனைத்துக் காய வைத்து நன்றாக சலவை செய்து கொள்ளுங்கள். அதன் பின் நீங்கள் தைக்க வேண்டிய உடைக்கேற்ப அளவாக வெட்டித் தைத்துப் பாருங்கள். கச்சிதமாக வரும்.



உங்கள் வீட்டு வரவேற்பறையை மேலும் மெருகூட்ட வேண்டுமா? வரவேற்பு அறையின் யன்னல் அமைப்பைச் சற்று மாற்றி அமையுங்கள். அதாவது யன்னல் கண்ணாடிகள் வெள்ளையாக இல்லாமல், லைட் மற்றும் அழகான கலர் கொண்ட கண்ணாடிகளைப் பொருத்துங்கள். இந்தக் கண்ணாடி பிரேம்கள் பளபளப்பாக இருக்கட்டும். அதுமட்டுமல்லாமல் ஜன்னல் கதவை ஒட்டியபடி யன்னலுக்கு ஏற்ற கலர் மின்சார பல்ப்பைப் பொருத்தி விடுங்கள். இப்போது வரவேற்பறை புதுப்பொலிவுடன் - பார்ப்பவர் வியக்கும் வகையில் இருக்கும்.



சீப்பு, பிரஷ் போன்றவற்றைச் சுத்தப்படுத்த குளியல், துணி துவைக்கும் சோப்புக்களைப் பயன்படுத்தாமல் ஷம்பூ கொஞ்சம் பட்டுச் சுத்தப்படுத்துங்கள். சீப்பு, பிரஷ் போன்றவை எவ்வித சேதமும் இன்றி பளிச்சென்று ஆகிவிடும்.



வீட்டுக் குளியலறைச் சுவரில் பாசி படர்ந்து அசிங்கமாக உள்ளதா? பெயின்ட் அடித்துப் புதுப்பொலிவை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? பெயின்ட் அடிப்பதற்கு முன் பாசியை நன்றாகச் சுரண்டி எடுத்து விட்டு, பிளீச்சிங் பவுடர் அல்லது அசிட் போட்டு சுத்தமாக்கி விடுங்கள். அதன்பின் பெயின்ட் அடியுங்கள். சுவர் பாசி படியாமல் அழகாக இருக்கும்.



உபயோகப்படுத்தாத பழைய துணிகளை ஒரே அளவாக வெட்டி, ஒன்றன்மீது ஒன்றாக வைத்து, மெத்தை போல் தைத்து விடுங்கள். இதை வீடு துடைக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# வியக்கப்பட்ட முகம் விகாரமாகியது



## அன்று சிந்தினாள் மோகனப் புன்னகை! இன்று பிச்சை எடுத்து எண்ணுகிறாள் சில்லறை!!



**15** வருடங்களுக்குப் பின்னோக்கிச் செல்ல வேண்டும்.

தாய்லாந்துக்குச் செல்ல வேண்டும். அங்குத்தான் அந்த அழகுராணிப் போட்டி நடந்தது.

வனப்பான, அழகுராணியாகத் தேவையான அளவுகளோடு அரங்கிலே தேவதைகள் தோன்றினார்கள்.

அத்தனை மண்ணுலக தேவதைகளையும் மண்டியிட வைக்கும் அழகுப் பெட்டகமாய் அரங்கிலே தோன்றினாள்.

அழகுராணிப் போட்டி காணவந்தவர்கள் அத்தனை பேரும் அந்த தேவதையின் நிலவைப் பழிக்கும் முகம் கண்டு சொக்கிப் போனார்கள்.

போட்டியிலே அவள்தான் வென்றாள். அழகுராணியாக அங்கீகரிப்பது தவிர அடுத்த பேச்சுக்கே இடமில்லை.

அவள்தான் சூரிவொங்.

சஞ்சிகைகளின் அட்டைகளில் சிரித்தாள். விளம்பரக் காட்சிகளில் தோன்றினாள். வர்த்தக நிலைய திறப்பு விழாக்கள் அவள் வந்து திறப்பதற்காகக் காத்திருந்தன.

ஒரு சோதனை வந்தது.

காலை எழுந்து களிப்போடு கண்ணாடி அருகே சென்று முகத்தைப் பார்த்த சூரிவொங் அதிர்ந்து போனாள்.

அவள் கண்களுக்குக் கீழ் இருந்த சதை சற்று வீங்கியிருந்தது.

ஒன்பது வருடங்களுக்கு முன்னர்தான் அந்த நோய் அழகுத் தேவதையைத் தேடி வந்தது.

யானைக்கால் நோய் என்று சொல்வோமே அது போன்ற நோய்.

ஆனால் காலில் வீக்கம் ஏற்படவில்லை.

எந்த முகத்தை முழு நிலவென்று தாய்லாந்து முழுவதும் புகழ்ந்து நின்றனரோ அந்த முகத்திலே வீக்கம் ஏற்பட்டது.

வைத்தியர்கள் எவ்வளவோ முயன்றும் முக வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

முகத் தசைகள் பெருத்தன. கோரமான வடிவத்தை ஏற்படுத்தின.

கண்டவர் வியந்து .விழியசைக்க மறந்து பார்த்து நின்ற பருவமுகம் பாழ்பட்டுப் போனது.

கண்டவர் பயந்து ஓடும் முகமாய் கோர உருப் பெற்றது. அவ்வளவுதான். உறவுகள் அவளைவிட்டு தூரவிலகின.

வைத்தியர்களும் கைவிரித்து விட்டனர். சத்திர சிகிச்சை மூலம் கூட தசை வளர்ச்சியை கட்டுப்படுத்த முடியாது என்று கூறிவிட்டனர்.

கைப்பிடித்த கணவனும் கைவிட்டு ஓடினான். ஓடியவன் பணத்தையும் சுருட்டிக் கொண்டு ஓடினான்.

முகத்தின் அழகு போக சுற்றமும் போனது. புகழும் போனது. சேர்த்து வைத்த செல்வமும் போனது.

முன்னர் மோகனப் புன்னகை சிந்திய அழகுராணி சந்திக்கு வந்தாள்.

இப்போது பாங்கொக் தெருவில் சூரிவொங் பிச்சை எடுத்துப் பிழைக்கிறாள்.

மாளிகை வாழ்க்கை போனது. ஒரு மண் குடிசைதானும் இப்போது உரிமை யில்லை. முப்பத்தைந்து வயது. கண் பார்வையற்ற ஒரு பிச்சைக்காரர்தான் இப்போது துணை.

சோகமான அத்தியாயமாய் தொடரும் நாட்கள்!

# பரிசுப் பொருளாக ஒரு புதிய பொருள்!

சகல வசதிகளும் பெற்ற ஒருவருக்கு சிறந்த பரிசாக எதனைக் கொடுக்கலாம்? யானையின் மலத்தைக் கொடுத்தால் நலம். இயற்கையானதும் கூட. என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? இருக்கும்தான். மேலே படியுங்கள் இங்கிலாந்தில் இப்பொழுது யானையின் எச்சத்துக்கு மவுசு பிறந்திருக்கிறது. எதிர்வரும் கிறிஸ்தோதயத்துக்கு அமெரிக்காவில் இதற்கு தனியான கிராக்கி ஏற்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள டெவோண் மிருகக் காட்சி சாலையில் தற்செயலாக ஆரம்பித்தது இந்த வியாபாரம். இந்தக் காட்சிக் சாலையின் விளம்பரப் பிரிவினர்தான் இம்முறையை ஆரம்பித்ததாக நிர்வாகி டியார்டே ஹொலோவே கூறுகிறார்.



மக்கள் எப்போதும் புதுமையானவற்றையே விரும்புகிறார்கள். தன்னுடைய அலுவலகத் தலைமை அதிகாரியாக விருந்து மாற்றலாகிச் செல்பவருக்கு அங்கு பணி புரியும் ஒரு பெண் இதனை ஒரு நினைவுப் பரிசாகக் கொடுத்தார். அவர் அதனை மனப்பூர்வமாக ஏற்றார் என்கிறார் அந்தப பெண். திருமணத்தின் போது மாப்பிள்ளையும் மாப்பிள்ளைத் தோழனும் யானை எச்சத்தை வைபவத்தின் போது உற்சாக மூட்டும் என்று வாங்கிச் சென்றனராம்.

மலத்தை நன்றாகக் காயவைத்து ஒருவகைப் பிசினுடன் கலந்து உரிய வடிவம் கொடுத்து நல்ல மரத்தினாலான ஒரு சிறு பீடத்தில் பொருத்தி வைத்தால் இதன் விலை 10 டொலராகும்.

# நடிகை வீட்டில் புலி!



நடிகைகள் நாய் வளர்ப்பது பற்றித்தான் இதுவரை கேள்விப்பட்டிருப்பீர்கள்.

நாய் வளர்க்கலாம். பூனை வளர்க்கலாம். கிளியும் வளர்க்கலாம். ஆனால் அமெரிக்காவில் உள்ள நடிகை டி.ஆலர்ன்-தன் வீட்டில் புலி வளர்க்கிறார்.

நடிகையின் வயது 62. வீட்டில் புலி தவிர அவருக்கு வேறு துணையே இல்லை. பேபி என்பது புலிக்கு வைத்துள்ள பெயர். பேபி ஒரு நாள் நடிகையோடு கோபித்துக் கொண்டு போய் விட்டது. விசயம் வெளியே தெரிந்து ஊர் முழுக்க ஒரே அல்லோல கல்லோலம்.

ஒன்பது நாளுக்குப் பிறகு பேபி நடிகையிடம் வந்து சேர்ந்தது. பேபியை தேடிய செலவு மட்டும் 5000டொலர். கிட்டத்தட்ட இரண்டரை இலட்சம். இப்போது ஒரு பிரச்சனை. நடிகை வீட்டில் கட்டிலில் படுத்துறங்கும் புலியை மிருகக் காட்சிச் சாலைக்கு அனுப்புமாறு ஊர் சொல்கிறது. நடிகை மறுக்கிறார். பிரச்சனை தொடர்கிறது.

பேபி ஹாயாக இருக்கிறது. ராஜ வாழ்க்கை.

# தகவல் பெட்டி

## பெற்றவள் மீதொரு பற்றுதல்!

*பெற்றவள் பிள்ளையைக் கொஞ்சிடுவாள். உச்சி முகர்ந்திடுவாள். பிள்ளையோ பெற்றவள் மடியிலும், மார்பிலும் தலை சாய்த்து சுகம் காணும். இது மனிதர் முதல் விலங்கு வரை பொதுவான பாசம். தாயின் மூக்கிலே தாடை வைத்து ஆனந்தம் காணும் நீர் யானை. தன் சேயின் செயலில் ஆனந்தம் காணும் தாய்.*

*ஜெர்மன் நீயூரெம்பேக் மிருகக் காட்சிச் சாலையில் கமராச்சிறையில் மாட்டிய காட்சி.*



www.padippakam.com

## மாபெரும் செலவில் மக்கள் ஆட்சி

மலையாளப் படவுலகின் வெற்றி நாயகன் மம்முட்டி மீண்டும் ஒரு தமிழ் படத்தில் நடிக்கப் போகிறார்.

'மக்கள் ஆட்சி' என்று படத்திற்குப் பெயர் வைத்துள்ளார்கள்.

ஆர்.கே. செல்வமணி இயக்கப் போகிறார். இசை இளையராஜா.

மம்முட்டிக்கு ஜோடியாக நடிக்கப் போவது ரோஜா.

படத்தில் அரசியல் சாட்டைகள் தூள்கிளப்பும்.

'குற்றப்பத்திரிகை' படம் முடங்கிப் போனாலும் அரசியல் படங்கள் எடுக்கும் விடயத்தில் செல்வமணி சோர்ந்து விடவில்லை.

மக்கள் ஆட்சிக்கு பெரும் செலவு செய்யப் போவது புதிய படநிறுவனம்.

பாடல் பதிவோடு படத்துவக்கவிழா நடந்துள்ளது. தலைமை தாங்கியவர் விஜயகாந்த். குத்து விளக்கேற்றியது இளையராஜா.

மக்கள் ஆட்சி மம்முட்டிக்கு தமிழில் ஒரு திருப்பமாக அமையலாம்.



## பவித்ரனுக்கு பினாமி வசனகர்த்தா?

பவித்ரன் இயக்கும் 'இந்து' படத்தின் வசன கர்த்தா தான் தான் என மார்தட்டிக் கொண்டு திரிகிறார் 'இந்தியா டுடே' எடிட்டர் கல்யாண் குமார். அப்படி என்றால் பவித்ரன் இதுவரை இயக்கிய படங்களுக்கு பினாமி வசனகர்த்தா யாரோ? மலையாள பகவதிக்கே வெளிச்சம்!

## அடிதடியோடு ஆடையும் குறையும்!

மொழிமாற்றுப் படங்கள் சில நேரங்களில் வசூலை வாரிக் குவிக்கும். சில சமயங்களில் காலை வாரிவிடும்.

ஆனால் லேடி சூப்பர் ஸ்டார் விஜயசாந்தியின் படங்கள் வசூலில் பாதகம் செய்வதில்லை. தெலுங்கில் அவர் நடித்து தமிழில் மொழிமாற்றப்பட்ட படங்கள் யாரும் போட்ட முதலுக்கு நஷ்டம் ஏற்படுத்தவில்லை.

இப்போது தெலுங்கில் தயாராகும் பிரமாண்டமான படம் 'மக்கள் நாயகி'.

அடிதடி மட்டுமல்ல, ஆடைக் குறைப்பும் செய்து கிளு கிளு நடனம் ஆடியிருக்கிறார் விஜயசாந்தி.

தமிழுக்கு மொழிமாற்றும் வேலைகள் முடிவடைந்து வெளிவரத் தயாராகிக் கொண்டிருக்கிறாள் மக்கள் நாயகி.

## தாமதத்திற்கு கோபம் வேண்டாம்!

நடிகை ஐஸ்வர்யாவின் பதில்கள் வந்து சேர்வதில் சிறு தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதனால் வரும் வாரம் வரை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

புதிய மணமக்களை அதிகம் குறுக்கீடு செய்யக்கூடாது என்பதால் ஏற்பட்டுவிட்ட தாமதம். வரும் வாரம் பதில் வரும் நிச்சயம்.





## சினிமா விமர்சனம்



### தாலாட்டு

ஒளிப்பதிவால் கிராமிய பசுமையை நெஞ்சில் பதியவைத்து விட்டார் பி.ஆர். விஜயலட்சுமி. பி.ஆர் ஒளிப்பதிவாளர். அவர்தான் ஒளிப்பதிவாளர்.

அரவிந்தசாமிதான் நாயகன். கொடுத்த பாத்திரத்தை குறை வைக்காமல் செய்திருக்கிறார். சுகன்யாவுக்கும் ஜோடிப்பிடிப்புள்ள பாத்திரம். சிவரஞ்சனியும் உண்டு. கிழவி வேசத்தில் காந்திமதியை பல படங்களில் பார்த்துவிட்டோம். இதிலும் அப்படியே. என்றாலும் அலுப்பூட்டவில்லை.

இசையில் மண் வாசனை இருக்கிறது. இளையராஜாவாச்சே.

இயக்குநர் புதியவர். வாய்ப்புகள் இருந்தால் வளருவார் என்று தெரிகிறது. தாலாட்டில் மங்கலம்.

## நினைத்தது பொய்த்தது!

பத்தினிப் பெண் படத்தை பெரிதும் எதிர்பார்த்திருந்தவர் ரூபிணி. ஆனால் படமோ வந்ததும் தெரியாது போனதும் தெரியாது. சரியா விளம்பரம் செய்யப்படவில்லை. நீண்ட நாளாக இழுத்தடித்து வெளியான படம். அதுதான் ஓடவில்லை என்கிறார் ரூபிணி.

அதிரடிப்படை படத்தில் ஒரு நல்ல பாத்திரம் கிடைத்திருப்பதாகச் சொல்கிறார்.



கோல மயில்-ஆட
கோர்த்தும்
விழிகள் வந்து
எழில்மீது
மொய்க்கும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## அவர் சம்மதித்தால் இவர் சம்பாதிக்கலாம்

ரஜினிகாந்த் நடிக்க ஒரு படத்தை இயக்க விரும்புகிறார் செல்வமணி. அதற்கான பேச்சுக்களும் நடந்து வருவதாகச் சொல்லுகிறார்.

ரஜினி மட்டும் சம்மதம் சொன்னால் போதும். தமிழ்நாடே வியக்கும் அளவுக்கு அந்தப் படத்தை எடுத்துக் காட்டுவேன் என்கிறார் செல்வமணி. சம்மதிப்பாரா ரஜினி? அதனால் பேர் சம்பாதிப்பாரா செல்வமணி?

## தமிழுக்கு பக்தன்

விளம்பரப் புலி என்று அழைக்கப்படுகிறவர் நாஹு. கூலிக்காரன், நல்லவன் போன்ற படங்களை தயாரித்து விளம்பரத்தில் புயல் கிளப்பியவர்.

இப்போது கமல் தயாரித்து நாசர் நடிக்கும் 'மகளிர் மட்டும்' படத்தில் தமிழ் பித்தனாக நாஹு நடிக்கிறார். அவருக்காகவே அந்தப் பாத்திரத்தை கமல் உருவாக்கியுள்ளார்.

## வான் கோழி மயிலாகுமோ?

"எத்தனை நாளைக்கு மயிலைப் பார்த்து வான் கோழி தோகை விரிப்பது? மயில் மயில்தான், வான் கோழி வான் கோழிதான்." இப்படிச் சொல்லியிருக்கிறார் சத்யராஜ்.

ஏன் சொல்லியிருக்கிறார்? எம்.ஜி.ஆர் பாணியில் நடிப்பதை கைவிட்டுள்ளது பற்றி பேட்டி ஒன்றில் கேட்டார்கள். அதற்குக்கான பதில் அப்படி.

## மகாநதியாகும் நட்பு

நன்றிக்காக 'மகராசன்' படத்தில் நடித்த கமல் இப்போது நட்புக்காக 'மகாநதி'படத்தில் நடிக்கிறார். இதன் படப்பிடிப்பு இம்மாதம் தொடங்கப் போவதாகப் பேசப்படுகிறது. ஆகஸ்ட் மாதத்தில் திருச்சியில் நடந்த ஆடிப் பெருக்கு விழாவை ஏற்கனவே படம் பிடித்து வைத்துள்ளார்கள். படத்தில் இணைத்துக் கொள்ளத்தான் அந்த முன் ஏற்பாடு.

## மினிசினி

★ கமல்ஹாசனின் 'மகளிர் மட்டும்' படத்தில் கதாநாயகனாக நடித்து வரும் நாசர், வி.சேகர் இயக்கும் 'வரவு எட்டணா செலவு பத்தணா' படத்திலும் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். இப்படத்தில் நாசருக்கு ஜோடி ராதிகா.

★ நீண்ட காலமாகப் படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருந்த ராமராஜன், மீண்டும் புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார். ராஜ்கீர்த்தி என்னும் இளம் இயக்குநர் இயக்கும் இப்படத்திற்கு 'வள்ளல்மகன்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

★ 'பொன்விலங்கு' படத்தைத் தயாரித்த ஆர்.கே. செல்வமணி, 'சித்திரப்பூவே' என்னும் படத்தையும் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார். அப்படத்தை விக்னேஸ்வர் இயக்குவதாக இருந்தது. ஆனால் பொன்விலங்கு படத்தோல்வியால் சித்திரப்பூவே படத்தயாரிப்பு வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

★ 'பொன்னுமணி' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகியவர் சௌந்தர்யா. இவர் அடுத்து 'அருப்பிள்ளையார் சாமியில்' பார்த்திபனுக்கு ஜோடியாகவும், 'முத்துக்காளை'யில் கார்த்திக்கிற்கு ஜோடியாகவும் நடித்து வருகிறார்.

★ 'தாலாட்டுக்கேக்குதம்மா' இயக்குநர் ராஜகபூரிடம் உதவி இயக்குநராக இருக்கும் இருவர் பிரபு நடிக்கும் படங்களை இயக்கவுள்ளனர்.

★ 'கோகிலா' என்ற கன்னடப் படத்தின் மூலம் பாலுமகேந்திராவை இயக்குநராக்கியவர் சென்னையிலுள்ள 'மோட்சம்' தியேட்டரின் சொந்தக்காரரான பொலாண்ணடேட். இவர் தற்போது 'உங்கள் அன்பு தங்கச்சி' என்ற படத்தைத் தயாரிக்கிறார்.

★ 'கலெக்டர் ராஜசேகர்' என்னும் மொழி மாற்றுப் படமொன்றில், பிரபல இந்தி நடிகை ரவீனா கதாநாயகியாக நடித்துள்ளார்.

★ 'விடியும் வரை காத்திரு' படத்தைப் போல் மீண்டும் ஒரு மர்மப்படத்தை எடுப்பதற்கு பாக்கியராஜ் தீர்மானித்திருந்தார். ஆனால் இவ்வருடத்தில் வேறு பட வேலைகளில் மும்முரமாக இருப்பதால், அடுத்த ஆண்டில் எடுக்கத் திட்டமிட்டுள்ளார்.

★ ரஜினி நடித்த 'எஜமான்' தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தெலுங்கில் இப்படத்திற்கு 'ரெளடி ஜமீன்தார்' என்று பெயரிட்டுள்ளார்கள்.

★ ஒளிப்பதிவாளர் ஸ்ரீராமிடம் இருந்த நந்து உதவியாளர்களில் ஒருவரான ஆர்.எல். பிரபு என்பவர் கமல் நடிக்கும் 'மகாநதி' படத்தின் மூலம் ஒளிப்பதிவாளராக அறிமுகமாகிறார்.



## கூப்பிடுங்கள் சுமியை!

கமலின் காதலியாக ஆடிப் பாடியவர் கமலின் தாயாக நடித்தார்.

அடக்கமான அம்மா வேடம் என்றால் கூப்பிடுங்கள் சுமித்திராவை என்கிறார்கள்.

இப்போதும் கட்டுக் குலையாத தேகம். ஆனாலும் காதல் வேடங்களில் ஆட முடியுமா என்ன? நடிகர்கள் வயதானாலும் மரத்தைச் சுற்றி ஓடிப் பாடலாம். நடிகைகள் விசயத்தில் அப்படி இல்லை.

அதுதான் அன்புக் காதலியாக நடித்தவர்கள், பின்னர் அன்புள்ள அம்மாவாக நடித்துக் கொண்டிருக்கிறார்கள். சுமித்திராவும் அப்படித்தான்.



## சொன்னதால் ஆடினேன்!

பெரிய இயக்குநர் வாசு, பெரிய நடிகர் சத்தியராஜ் இருவரும் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டதால் ஆடினாராம். சொல்வது யார்? நடிகை மோகினி.

உடன் பிறப்பு படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சியில் கவர்ச்சியாக வந்து விட்டுப் போவதால் கைவசம் படங்கள் இல்லை என்று நினைத்து விட வேண்டாம்.

இதுவும் மோகினி சொன்னதுதான்.

## ஆரம்பமானது சேதுபதி!

விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்க பி. வாசு இயக்கும் படம் 'சேதுபதி ஐ.பி.எஸ்!' இது ஏவிஎம் பட நிறுவனத்தின் 155 வது படம். இளையராஜா இசையில் வாலி பாடல்களை எழுதுகிறார். படத்துவக்கவிழா அண்மையில் நடைபெற்றது. ரஜினிகாந்த் உட்பட திரையுலகப் பெருப் புள்ளிகள் பலர் வந்திருந்தனர்.

## வயிற்றிலே புளி

வள்ளி பட நாயகி பிரியாராமன் பிரபலமாக வருகிறார். அவர் பிரபலமாக வரும் வேகம் பிரபல நடிகைகள் சிலரது வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது.

## கெட் அப்பான கட் அவுட்

சரத்குமார், ஆனந்தராஜ் போன்றவர்கள் சொந்தச்செலவில் தமது படத்திற்கு போஸ்டர் அடித்து வெளியிடுவார்கள். ஆனால் ராஜுமான் மாபெரும் கட் அவுட் செய்து வைத்துவிட்டார். 'உடன்பிறப்பு' படம் வெளியானதும் தனக்கும் சத்தியராஜிற்கும் தனித்தனிக் கட் அவுட்டுக்கள் செய்து வைத்துவிட்டார்.

## நிர்வாணம் ஒரு நிர்ப்பந்தம்!

நடிகை அர்ச்சனா முதல் பாவம் படத்தில் முழு நிர்வாணமாக நடிக்கவும் அதனால் பரபரப்பாகப் பேசப்பட்டவர்.

நிர்வாணமாக நடிப்பது விருப்பமல்ல. நிர்ப்பந்தம்.

என் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும், வேலை தேடிச் சென்ற இடமெல்லாம் தேவையற்ற விலையாக உடலைக் கேட்டார்கள்.

சினிமா வாய்ப்புத் தேடி போது தருவதாகச் சொல்லி உடலைப் பெற்றுக் கொண்டார்கள். பின்னர் ஏமாற்றினார்கள்.

இப்படித் தன் சோக அனுபவங்களை மனம் திறந்து சொல்லி வருகிறார் அர்ச்சனா.

## காதோடு சொல்லுகிறோம்

★ குரங்கு வளர்ப்பு புகழ் பல் நடிகை சூப்பர் ஸ்டார் படத்தில் ஆடினார். இப்போது வந்துள்ள படத்தில் பால்காரியாக தெனிவு காட்டியுள்ளார். பால்காரி வேசத்திற்குப் பிறகு பட வாய்ப்புக்கள் வந்து குவிவதாகச் சொல்லித்திரிகிறார். பெரிதாக திறமை காட்டியதால் படவுலகம் அதிர்ந்து போச்சுதோ தெரியவில்லை.

★ வாய் நடிகை இப்போதெல்லாம் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் போகவிடுகிறார். போவது மட்டுமல்ல கிளு கிளு ஜோக்குகளையும் அள்ளி விடுகிறாராம். பல் நிலையத்தில் நின்று கண் அடிப்பதும் ஒரு வகைத் தகவல் தொடர்புதான் என்று கல்லூரி விழா ஒன்றில் கூறிவிட்டு குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாராம். எல்லோரும் அவரையே பார்த்தார்களாம். பார்த்தது அவர் சிரித்ததற்கல்ல.

★ கோடம்பாக்க ரேக நடிகை சொந்தப் படத் தயாரிப்பில் இறங்கத் திட்டமிடுகிறாராம். திறமையைக் காட்ட நடிகை சொந்தப்படமே ஒரே வழி என்கிறார். ரசிகர்களுக்கு கஷ்டகாலம்தான். கண்ணு படப் போகுது என்று சொல்வது பொருந்தாது ரசிகர்களுக்கு கண்ணு கெடப் போகுது என்று கிண்டல் செய்கிறது கோடம்பாக்க வட்டாரம்.

★ இந்தி ராணியாகிவிட்ட 18 வயது புகழ் தேவி ஜோசியம் கேட்டபின் யோசிக்கத் தொடங்கியிருக்கிறார். அடுத்த ஒன்றரை வருடத்திற்கு கஷ்ட காலம்தான் என்று சொல்லிவிட்டாராம் ஜோசியர்.

★ தொலைக்காட்சிப் பேட்டிகளில் தனது வயதுக்கு சான்று கொடுக்கப் பிடிக்கவில்லையாம். சொல்லிச் சொல்லிப் புலம்புகிறாராம் கன்னட நடிகையின் தாக்குதலால். இன்னொரு விசயம். இப்போதெல்லாம் கவர்ச்சி நடிகை பந்தா காட்டுவதில்லையாம். இரண்டாம் ரக தயாரிப்பாளர்களின் அன்பான அழைப்பையும் ஏற்றுக் கொள்கிறாராம்.

★ முன்னாள் நடிகையும், தற்போது டாப்கேப் புகழ் நடிகரின் மனைவியுமான தீபிதானவர் தன் மைத்துனரின் காதலுக்கு உதவி செய்கிறாராம். வண்ண வண்ண பூ நடிகை வினோதமானவரை மைத்துனர் விரும்ப அவர் தூதுபோய் பேசிப் பார்த்தாராம். முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

★ இந்தி ரேகாவானவர் தனக்கு இப்போதும் 18 வயது போல் இருப்பதாகப் பேட்டி கொடுத்திருக்கிறார். வயது மனதில்தான் இருக்கிறது. 18 வயதுக்குரிய சகல உணர்ச்சிகளும் எனக்கும் உண்டு என்று அடித்துச் சொல்லுகிறாராம். அதென்ன உணர்ச்சியோ?

மனைவியுடனேயே ரஜனி ஆனை மீது ஒரு நுணையுநகை புகார் செய்திருக்கிறார். எனவே தருமராகக் கூறி கோர்ட் செய்து விட்டாராம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# நியாயம் தந்த லாபம்

## பாப்பா முரசு

சந்திரசேகர் அந்த நகரத்தில் மிகப் பெரிய வியாபாரியாகத் திகழ்ந்தவர். வியாபாரத்தில் நேர்மையுடன் நாணயத்தையும் கடைப்பிடித்து நிறைய சொத்து சேர்த்தார். அவரது வியாபார வெற்றிக்கு சுயநலமில்லாத அவருடைய நல்ல குணம் தான் காரணம் என ஊரார் அவரைப் பற்றிப் பெருமையாகப் பேசிக் கொண்டார்கள்.

சந்திரசேகரைத் தேடிப் பல உறவினர்கள் வந்தார்கள். பொருளுதவி கேட்டார்கள். கேட்டவர்களுக்கெல்லாம் இல்லை என்று கூறாது நிறையப் பொருளுதவியை வாரி வழங்கினார். சிலர் கடன் பெற்றுச் சென்றார்கள். திருப்பிக் கொடுக்கவில்லை.

சந்திசேகருக்கு மூன்று குமாரர்கள். மூவருக்கும் தந்தையின் செய்கை பிடிக்கவில்லை. நேர்மையும், நாணயமும் வியாபாரத்திற்கு ஒத்து வராது. சுயநலமும் அவசியம் தேவை என்னும் நேர்மாறான குணம் உடையவர்களாக இருந்தார்கள்.

இதைத் தந்தையிடம் சொல்ல மூவருக்கும் பயம். தக்க சமயத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

நாளடைவில் சந்திரசேகர் நோய் வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகி விட்டார். வியாபாரத்தைத் தமது மூன்று மகன்களிடமும் ஒப்படைக்க எண்ணி அவர்களை அழைத்தார்.

மூத்தவன் பெயர் ராகவன், அடுத்தவன் பெயர் ரங்கன், மூன்றாமவன் பெயர் வரதன். இம்மூவரும் தகப்பன் முன்பு வந்து நின்றனர்.

"அப்பா இவ்வளவு நாள் வியாபாரத்தை நீங்கள் கவனித்து வந்தீர்கள். வியாபாரத்தில் இலாபம் வந்தாலும் உங்களுடைய தாராள மனப்பான்மையாலும், பிறநலத்தாலும் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. தாங்களே உடல் நலமில்லாமல் படுத்த படுக்கையாகி விட்டீர்கள். ஆகையால் இனி இதே வியாபாரத்தை எங்கள் விருப்பப்படி செய்ய அனுமதியுங்கள்", என்று கேட்டனர்.

தந்தையும், "உங்கள் விருப்பப்படியே வியாபாரத்தைத் தொடருங்கள். ஆனால் யாரும் உங்களைப் பற்றி புகார் செய்ய என்னிடம் வராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். மூன்று மாதங்கள் வரை நான் உங்கள் திறமையைக் கவனிப்பேன். பழ வியாபாரத்தை ராகவன் எடுத்துக் கொள்ளட்டும். நெல் வியாபாரத்தை ரங்கன் எடுத்துக் கொள்ளட்டும். காய்கறி வியாபாரத்தை வரதன் எடுத்துக் கொள்ளட்டும். உங்கள் மூவருள் யார் திறமைசாலி என்பதை நிரூபிக்கிறீர்களோ அவர்களுக்கே என் சொத்து முழுவதையும் எழுதி வைப்பேன்," என்றார்.

அப்பா சொன்னபடியே மூவரும் அவரவர் வழியில் வியாபாரம் செய்வதாக ஒப்புக்கொண்டு மறுநாள் முதல் அவரவர்கள் கடையை தனியாகப் பிரித்து வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள்.

ராகவன் சந்தைக்குச் சென்று ஆயிரம் பழங்களை இருநூறு ரூபாய்க்கு வாங்கி வந்தான். "இந்தப் பழங்களை இரண்டு மடங்கு விலை வைத்து விற்று ஒரே வாரத்தில் இருநூறு ரூபாய் லாபம் காட்டப் போகிறேன் என்று சபதம் செய்தான்.

ரங்கன் இருநூறு ரூபாய்க்கு ஒரு மூட்டை நெல் வாங்கி வந்தான். அதை அரிசியாக்கி அத்துடன் கல், உமி கலந்து இரண்டு மூட்டையாக்குவதாகச் சொல்லிக் கொண்டான்.

மூன்றாமவன் வரதன் தனது காய்கறிக் கடைக்கு நியாய விலைக் கடை என்று அறிவிப்புப் பலகை எழுதி, கடையை அழகுபடுத்தி, புதிய காய்கறிகளை நூறு ரூபாய்க்கு மட்டும் வாங்கி வந்து குறைந்த லாபத்தில் விற்க ஆரம்பித்தான்.

ஒரே நாளில் நூறு ரூபாய் காய்கறிகள் நூற்று இருபது ரூபாய்க்கு விற்பனை ஆயிற்று. லாபம் இருபது ரூபாயில் தனது குடும்பச் செலவுக்கு 15 ரூபாய் எடுத்துக் கொண்டு மறுநாள் சந்தைச் செலவுக்கு ஐந்து ரூபாய் வைத்துக் கொண்டான். மலிவு விலையில் கிடைப்பதால் மக்கள் அந்தக் காய்கறிக் கடையிலேயே காய்கறிகள் வாங்க ஆரம்பித்தனர். வியாபாரத்தில் பத்து சதவிகித லாபம் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து லாபம் அதிகமாகக் கடையில் வீட்டுக்குத் தேவையான பல்வேறு சாமான்களையும் வாங்கி வியாபாரம் செய்யத் தொடங்கினான்.

மூத்தவன் ராகவன் கடையில் பழத்தின் விலை அதிகம் என்பதால் பாதி பழங்கள் விற்பனையாகாமல் அழுகி வீணாகிப் போயின. ஒரே வாரத்தில் பாதிப்பணத்தை இழந்தான்.


ரங்கன் கடையில் முதல் வாரம் அரிசி வாங்கியவர்கள் அடுத்தவாரம் அரிசியில் கல் கலந்திருப்பதை வந்து புகார் செய்தார்கள். ரங்கன் கலப்படத்தைக் கொஞ்சம் குறைத்து விற்பனை செய்தான். அப்போதும் புகார்கள் வந்த வண்ணம் இருந்தன. கலப்படம் செய்வது தவறு என்பதை அவன் உணர்ந்த போது, அவனது கடை வாடிக்கையாளர்கள் எல்லாம் வேறு கடையை வாடிக்கை பிடித்துக் கொண்டார்கள். வியாபாரத்தில் நஷ்டம், பணத்தேக்கம் ஏற்பட்டது.

சந்திரசேகர் மூவருடைய வியாபார நிலையையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஒவ்வொருவரையும் அழைத்து, அவரவர்கள் செய்தது தவறு என்பதை உணர்த்தினார்.


"ராகவா நீ வியாபாரத்தில் பேராசைப்பட்டாய், ஒரே வாரத்தில் கணிசமான லாபம் பெறலாம் என எண்ணினாய். அதன் விளைவாகப் பழங்கள் அழுகி நஷ்டப்பட்டாய். பேராசை பெருநஷ்டம் என்பதை இப்போதாவது புரிந்து கொள். கொஞ்சம் கொஞ்சமாக லாபம் பெற முயல்வதுதான் வியாபாரம். உன் வியாபாரத்தில் பிற நலம் இல்லை. சுயநலம் தான் அதிகம். ரங்கனும் அதே தவறைச் செய்தான். நாணயத்தை விட ரூபாய் என்னும் நாணயத்தை முக்கியமாகக் கருதினான். அதனால் வாடிக்கையாளர்களை இழந்தான். பணத்தை இழந்தால் மீண்டும் சம்பாதித்துக் கொள்ளலாம். வாடிக்கையாளர்கள் நம்மை விட்டுப் போனால் திரும்ப நம்மிடம் வர மாட்டார்கள்."

வரதன் புத்திசாலி. நியாயவிலைக் கடை என்கிற அறிவிப்பு பலகையின் மூலம் ஜனங்களை ஈர்த்தான். குறைந்த லாபத்தில் நல்ல பொருட்களை விற்று, வாடிக்கையாளர்களைப் பெருக்கிக் கொண்டான். மூவருள் அவனே என் வாரிசாக வரத் தகுதியானவன்," என்றார்.

"அப்பா அண்ணன்களுக்கு இது அனுபவமாக இருக்கட்டும். அவர்களும் என் வழியில், என்னுடன் சேர்ந்து கூட்டாகச் செயல்படட்டும்." என்ற வரதனை பெருமையுடன் பார்த்தார் தந்தை.



### வண்ணத்துப் பூச்சி



வண்ண வண்ணப் பூச்சி
வடிவு மிகு பூச்சி
கண்ணைக் கவரும் பூச்சி
கவலையில்லாப் பூச்சி

•

பூவில் தேனைக் குடித்தே
நித்தம் மகிழும் பூச்சி
பட்டுச் சிறகை விரித்தே
பறந்து திரியும் பூச்சி.

•

தம்பி தங்கையர் யாவரும்
பார்த்து மகிழும் பூச்சி
நல்ல நல்ல பூச்சி
நான் விரும்பும் பூச்சி.

முல்லைச் செல்வி ஹஸீனா
அல்-ஹிரா ம.வி.
கொட்டாரமுல்லை.

### வர்ணம் தீட்டும் போட்டி இல:06

**பரிசுக்குரியவர்**

லி. மங்களேஸ்வரி
ஸ்ரீ சண்முக வித்தியாலயம்
திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்**

பாத்திமா நஸ்பியா
குருநாகல்.

செல்வி அஞ்சனா இரங்கசாமி
மகளிர் மகாவித்தியாலயம்,
வவுனியா.

ச. சுதர்சன்
வாழைச்சேனை.

எஸ். எப். ரிஸ்னா
பதுரியா முஸ்லிம் வித்தியாலயம்-தியத்தலாவை.

சர்மிளா நிக்கலஸ்
கொட்டாஞ்சேனை.

வி. சுதாகரன்
நிக்கப்பொத்த.

பா. சந்திரமதி
கலைமகள் வித்தியாலயம்-அன்புவழிபுரம், திருகோணமலை.

எஸ். சித்தி சப்னா
தில்லையடி முஸ்லிம் மகாவித்தியாலயம்-புத்தளம்.

கே. ஜி. ரூபன் புஸ்பகுமார்
இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு.

பிரபா நல்லசாமி
வந்தாறு மூலை.

கணேசன் சத்தியதேவி
தலாத்து ஓயா.

ஜெஸ்மின் தாஹிர்
திகழி முஸ்லிம் பாடசாலை-ஏத்தாலை.

ஜே. எம். பாரிஸ்
க/ஜாமியுல் அஸ்வார் மத்திய கல்லூரி-உடத்தலவின்ன.

எஸ். டயானா
வெல்லம்பிட்டிய.

சந்திரிக்கா கிருஸ்ணன்
கொழும்பு-15.

சி. சுதாகர்
இ.இ.த/மகாவித்தியாலயம், இரத்தினபுரி.


### விடுகதைகளும் விடைகளும்

1. காளை கட்டிக்கிடக்கு கயிறு ஓடிக்கிடக்கு. அது என்ன?
2. குப்பை தின்பான் கூளம் தின்பான். தண்ணியக் கண்ட செத்துக்கிடப்பான். அது என்ன?
3. அடுக்கடுக்காக பானை அதுக்கு மேலே பச்சை. அதுஎன்ன?
4. தொண்டமான் குதிரைக்கு தொடையளவு தண்ணீர். அது என்ன?
5. என் வீட்டுக் கிணற்றில் எப்போதும் உப்புத் தண்ணீர். அது என்ன?
6. தாடிக்காரன் மீசைக்காரன். கோவிலுக்குப் போனால் வெள்ளைக்காரன். அவன் யார்?
7. சிங்கார மேடையில் சங்கீதக் கச்சேரி. அங்கே போனால் அடியும் உதையும். அது என்ன?
8. இறக்கை இல்லாதவன் ஊர் ஊராய்ப் பறப்பான். அவன் யார்?

1. பூசனிக்காய் 2. தீ 3. கரும்பு 4. தவளை
5. கண்ணீர் 6. தேங்காய் 7. தேன்கூடு 8. தபால்

பி. எம். மதிலா
நடுத்தீவு, மூதூர்-7.


### சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்



மேலே உள்ள படத்திற்கு அழகாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டப் பட்ட படம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/- காத்திருக்கிறது. வரைந்த வர்ணப்படத்தை தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 9.10.93.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 09**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்**
**கிருலப்பனை,**
**கொழும்பு-05.**

### சிறுவர் சிரிப்பு




### கண்டுபிடியுங்கள் இல- 02

1. கே. ரஃபாடின் கிண்ணியா
2. ஆர். பிரியா கொழும்பு-13.
3. எம். இம்ரான் கொழும்பு-12.
4. என். இந்திரானி புத்தளம்.
5. கன். ஐ. ஹில்பால் கண்டி.
6. ஆர். சரஸ்வதி கொழும்பு-6.
7. ராகுல்ராஜ் நடராஜ் நுவரெலியா.
8. வீ. வசந்த மலர் நுவரெலியா.
9. எஸ். தஸ்கியா புத்தளம்.
10. எம். சுரேஷ்குமார் பூண்டுலோயா.

இலக்கிய நயம்

# உருதில் காதல்

மொழி ஓர் இனத்திற்குப் பெயர் வைக்கிறது.

அந்த இனத்தவர்கள் மொழிக்குப் பெயர் வைக்கிறார்கள்.

இத்தாலியர்கள் தங்கள் மொழியை இசை மொழி என்கிறார்கள்.

ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியை வணிக மொழி என்கிறார்கள்.

பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் மொழியை காதல் மொழி என்கிறார்கள்.

இந்தக் கூற்றுகளெல்லாம் பிசிறடிக்காத உண்மைகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதால் உருது மொழியை நாம் கவிதை மொழி என்று பிரகடனப்படுத்தலாம். பிழையில்லை.

உருதுக் கவிதைகளின் ஒய்யார நந்த வனத்தில் சாதாரணச் சருகுகளில் கூட சந்தன வாசம் புறப்பட்டு வருமென்றால் பூக்களின் வாசத்தை என்சொல்ல?....

முகத்தில் அடித்து விட்டுப் போகிறது.

"பாம்புக்கும் மயிலுக்கும்
பரம்பரைப் பகையென்று
யார் சொன்னார்?
என் மயிலே!
நீ
பாம்பைத்தானே
ஜடை போட்டிருக்கிறாய்?"

அவரவர் காதலி பற்றி நாசிக் யோசிக்க வைக்கிறான்.

காதலுக்கான காத்திருப்புகள்- காதலின் ஞாபக சோகங்கள்- காதல் தோல்வியின் ரத்தக் கசிவுகள்- அழகில் விளைந்த அவஸ்தைகள்- பிரிவில் நேர்ந்த பிரளயங்கள் இவைகளே பெரும்பாலும் பழைய கஜல் கவிதைகளின் பாடு பொருள்கள்.

வருவதாய்ச் சொன்னவள் வரவில்லை.

**தமிழகக் கவிஞர் வைரமுத்து உருதுக் கவிதைகளை ரசித்துப் படித்து வடித்துள்ள கருத்துக்கள் இவை. பிற மொழி இலக்கியங்களின் சுவையறிதல் நம் மொழியின் படைப்புத் தளம் விரிவாக உதவும்.**

விமானம் செய்வதற்காகவே சில உலோகங்கள் வார்க்கப்படுவது மாதிரி, கவிதை செய்வதற்காகவே உருது மொழி உருவாக்கப் பட்டிருக்கிறது.

உலகக் கவிதைகளின் எத்தனையோ வடிவங்கள் இறந்துவிட்டன.

ஆனால், உருதுவின் கஜல் கவிதைகள் மாத்திரம் காலத்தின் மழையில் நனையாமல்- வெயிலில் கருகாமல்-காற்றில் கரையாமல் உலகத்தின் செவிகளில் உட்கார்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கின்றன.

கஜல் வடிவத்தில் எழுதப்பட்ட காதல் கவிதைகள் மோகலாகிரியின் உச்சத்தில் மதுக் கோப்பைகள் வற்ற வற்றச் சுரந்த கவிதைகள்.

குடியில்- கூத்தில்- வெறியெடுத்த ராத்திரியில்-விடிய விடிய விழித்த விழிப்பில் பிரசவிக்கப்பட்ட பிறந்த மேனிக்கவிதைகள்.

கஜல் கவிஞர்கள் வர்ணனையில் பாதாளத் தையும், ஆகாயத்தையும் ஒரே நேரத்தில் தொடவல்லவர்கள்.

கஜல் கவிஞர்கள் காதலிகளின் கூந்தலைப் பற்றி மாத்திரமே முடிக்கொரு கற்பனையாகக் கோடிக் கற்பனைகள் குவித்து வைத்திருக் கிறார்கள்.

"சீப்பு
உன் கூந்தலை வாருகிறது.
என் மனதை
ஏனடி கலைக்கிறது?"

என்று கேட்டுச் சொக்க வைக்கிறான் ஜுரத்.

ஒரே ஊசியை இரண்டு கண்களில் ஏற்றுவது மாதிரி ஒரே எழுவாயை இரண்டு வினைகளுக்குப் பொதுவாக்கி அதிரடி கவிதை எழுதுகிறான் அவன்.

'நாசிக்' என்னும் கவிஞன் தன் காதலியின் கூந்தலை இதுவரை யாரும் பார்க்காத பார்வையில் பார்க்கிறான்.

அவன் கவிதையை முடித்துவிட்டுப் போகும் போது கருநாகப் பாம்பொன்றின் வால் நம்



நிமிஷம் யுகமாய் நீளுகிறது.

தரையெல்லாம் நெருஞ்சி; தலை யெல்லாம் நெருப்பு.

காத்திருந்த கவிஞனுக்கு உலகமே கறுப்பாகி விடுகிறது.

அவன் அழுது கொண்டே எழுதுகிறான்.
அவனது கஜல் கண்ணீரைச் சுரக்கிறது.

"நீ வரவில்லை!
மலர்கள்
மௌனம் அனுஷ்டிக்கின்றன
பனித்துளிகள்
அழுது வடிகின்றன
சோலையில்
இரங்கல் தீர்மானம்
நிறைவேறுகிறது"

இந்தக் கவிதை அந்தச் சோலையில் என்னையும் ஒரு பனித்துளியாய் அல்லவா அழ வைத்து விட்டது.

★

★ *உருது- கவிதைக்காகவே வார்க்கப்பட்ட மொழி என்றால் கஜல் காதலுக்காகவே வார்க்கப்பட்ட வடிவம்.*

★ *கஜல்- தட்சணத்தில் தோன்றி டெல்லிக்குச் சென்ற வடிவம்.*

★ *மொகலாய அரசு தன் ராஜ சபைகளிலும்- ராத்திரி சபைகளிலும் கஜலோடு தினமும் கைகுலுக்கிக் கொண்டது.*

★ *பாரசிக மொழியின் ஆக்கமும்- தாக்கமும் உருது மொழிக்கு உண்டு. ஏனென்றால் "இந்தியாவை ஆண்ட மொகலாய மன்னர்களுக்கே பாரசீகமே இலக்கியமொழி.*

★ *பல கஜல்கள் அரங்கில் ஆடும் நடன மாதுகளைப் பற்றி போட்டி போட்டு எழுதப்பட்ட முந்தானைக் கவிதைகள்.*

★ *கஜலின் சிறப்பு அது தனக்குள் ஒரு பொருளை மட்டுமே ஊடாடவிடுவது.*

★ *கஜலின் இறுதி வரியில் கவிஞர்கள் பெரும்பாலும் தங்கள் பெயரை இணைக்கிறார்கள். அது கவிதைக் குள்ளேயே கவிஞன் இடும் கையொப்பமாகிறது.*

★

கஜல் பாடிய கவிஞர்கள்- வாழ்க்கையை நேசித்தவர்கள்; ரசித்தவர்கள்; ருசித்தவர்கள்.

அந்தந்த நிமிஷத்தை அர்த்தமுள்ளதாக்க ஆசைப்பட்டவர்கள்.

கவிதைக் குயிலை ஒரு கூண்டுக்குள் அடைத்து வைத்துக் கூவச் சொல்லாமல் அதைச் சிறகடித்துப் பறக்கவிட்டு சிலாகித்த வர்கள்.

தத்துவம் போட்டுக் கொடுத்த பாதையில் வாழ்க்கைத் தேரை ஓட விடாமல்- வாழக்கை போட்டுக் கொடுத்த பாதையில் தத்துவத் தேரை ஓடவிட்டவர்கள்.

இப்படி எழுதுகிறான் கவிஞன் மிர்:

"ஒரு கோப்பை மதுவுக்காக
உன் தொழுகைப் பாயை
அடகுவை!

ஒரு பயனும் இல்லாத
இந்தத் தொழுகைப் பாயை
மதுவருந்துவோருக்கு
விரித்துவை!

மதுவை மகிமை செய்!
மதுக்குவளையை வணங்கு!

உன்
தூய ஆடையில்
மதுக்கறை படியட்டும்.
உன் புகழை
உன் பெருமையைக்
கொஞ்சம் ஒதுக்கிவை!

நீ எழுந்து நில்லப்பா
மதுக்கோப்பை குனிகிறதே
மரியாதை செய்!"

வாழ்க்கை என்கிற நதி கரைகளுக்கு வெளியே பிரவகிக்கிற போது நுரைத்த நுரைகளே இவை போன்ற கவிதைகள்.

உவமை என்பது ஒரு கவிதைக்கு அணிதான்.

ஆனால்- அந்த அணி செய்வதற்கு அறிவு தேவை.

உவமை என்பது ஒரு கவிஞனின் புலமை.

காதலியின் நெற்றியில் ஒட்டிய கற்றை முடியிலிருந்து ஒரு வியர்வைத்துளி அவள் கன்னத்தில் பட்டுத் தெறிக்கிறது.

இதை எழுத வந்த 'தார்த்' என்னும் கவிஞன்.

"ஐயோ!
ஈதென்ன அதிசயம்

ஒரு பனித்துளி வழுக்கி
சூரியனில் விழுகிறதே!"

-என்று ஆச்சரியப் பெருமூச்சு விடுகிறான்.

"நீயில்லாத
இந்தச் சோலையில்
பூக்களும் பனித்துளிகளும்
சிறகில்லாமலே
பறந்து விட்டன!"

-என்று தொடர்ந்து துக்கம் வேறு கொண்டாடுகிறான்.

கவிதையில் இதயத்தை அருவமாகப் பார்ப்பதுதானே அனைவருக்கும் வழக்கம்?

ஆனால் 'சிராஜ்' என்னும் உருதுக் கவிஞன் இதயத்தைச் சதையாகவே பார்க்கிறான்.

"நீ
பிரிந்து விட்டாய்
என் அன்பே!

காதலெனும்

வாணலியில் வறுபடுகிறது
என்
இதயமென்னும் இறைச்சித்துண்டு."

இந்தக் கவிதையைப் படித்த போது ரோமங்கள் கருகும் வாசனை அடித்தது எனக்கு.

★

உருதுக் கவிதைகளில் பிரிவுக் கவிதைகள் பேரழகானவை.

கண்ணீரின் பிசுக்கும், ரத்தத்தின் பிசுக்கும் உலராமல் ஒட்டியிருக்கும் உயிர்க் கவிதைகள் அவை.

திசைமாறிப் போன காதலிக்குத் தன் கடைசி விண்ணப்பத்தைக் கஜலாக எழுதுகிறான் காதலன்.

"காதலி!
என்னைக் கொன்ற பிறகு
உன் வீதியில்
புதைத்து விடாதே
ஊரார்
எனது புதைகுழியை வைத்து

உனது மலாவனத்தை ஏன்
கண்டுபிடிக்க வேண்டும்?"

உருது மொழியின் காதல் கவிதைகளைச் சுவைப்பதற்காகவே மனது காதலிக்கத் துடிக்கிறது.

அந்தச் சோகக் கவிதைகளின் சுகம் துய்க்கவே மனது காதலில் தோற்றுப் போகவும் துடிக்கிறது.


★

## அதிரடியான ஒரு போட்டி

★ சுப்பர் ஸ்டார் ரஜினியை நேரில் காண விரும்புகிறீர்களா?
★ தமிழகச் சுற்றுலாவுக்கு நீங்கள் தயாரா?

**நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:**

★ ஒன்றிலிருந்து இருபது வரையான கூப்பன்களை நிரப்பி பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.
★ போட்டி முடிவடைந்தவுடன் அனைத்துக் கூப்பன்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.
★ போட்டி சம்மந்தமான எந்த விடயத்திலும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
★ போட்டியில் பங்குகொண்டு சரியான விடை எழுதுவோரில் ஒருவர் அதிஷ்டசாலியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.
★ ஏனைய ஐம்பது அதிஷ்டசாலிகளுக்கு சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் பெரிய அளவிலான வண்ணப்படங்கள் வந்து சேரும்.



**இலக்கம்-10**
**சுப்பர் ஸ்டார் சந்திப்பு**
காட்சி இடம்பெற்ற படத்தின் பெயர்:-.....................................
படத்தின் இயக்குநர் பெயர்:-.....................................
ரஜினியின் ஜோடி/ஜோடிகள் யார்:-.....................................
இப்படம் வெளியான ஆண்டு:-.....................................

பி.கு: இலக்க வரிசைப்படி 20 கூப்பன்களையும் நிரப்பி அனுப்புவோர் மட்டுமே போட்டியில் பங்குகொள்ள முடியும்.

## இந்த வாரம் உங்கள் பலன்
(03.10.93 முதல் 09.10.93 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், குரு |
| துலாம் | - புதன், செவ்வாய் |
| விருட்சிகம் | - இராகு |
| மகரம் | - சனி |
| இடபம் | - கேது |
| சிம்மம் | - வெள்ளி |

சந்திரன் மீனம், மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் சஞ்சாரம்
4-10-93இல் துலா இராசிக்கு வியாழன் பிரவேசம்

### மீனம்: சுப நேரம்
(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் பிரயாசம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | தனலாபம், பெரியோர் நட்பு. | காலை 11 மணி |
| செவ்வாய்- | வாழ்வு சிறக்கும், உயர்வு. | காலை 10 மணி |
| புதன்- | நடைக்கஷ்டம், செலவு அதிகம். | காலை 9 மணி |
| வியாழன்- | பிள்ளைகளால் கவலை, பணத்தட்டுப்பாடு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், மனக்குளப்பம். | பி.ப 5 மணி |
| சனி- | செலவு மிகுதி, உயர்ச்சி மேன்மை. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-6

### மேடம்: சுப நேரம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மன அமைதி குன்றும். வீண் பிரயாணம். | காலை 7 மணி |
| திங்கள்- | தனலாபம், பிரயாணங்களால் நன்மை. | காலை 10 மணி |
| செவ்வாய்- | எடுத்த காரியம் வெற்றி, பெரியோர் நட்பு. | பி.ப 4 மணி |
| புதன்- | காரியானுகூலம், கடவுள் பக்தி. | பி.ப 3 மணி |
| வியாழன்- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, பகைவரை வெல்லல். | காலை 9 மணி |
| சனி- | துயர் அதிகம், மறைமுக எதிர்ப்பு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள் -செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்
(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொன் பொருள் சேர்க்கை, வெற்றி வாய்ப்பு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | கடன் பயம், காரிய தாமதம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | எடுத்த கருமம் தாமதம், வீண் பிரயாசம். | பி.ப 3 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப 1 மணி |
| வியாழன்- | கடவுள் பக்தி, காரியசித்தி. | காலை 10 மணி |
| வெள்ளி- | பொருள் நட்டம், வீண் பிரயாசம். | காலை 11 மணி |
| சனி- | பலவித பேறு, கஷ்ட நிவர்த்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, பொருள் பேறு. | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவு, கஷ்டம் நீங்கல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, காரியசித்தி. | காலை 11 மணி |
| வியாழன்- | எடுத்தகாரியம் தடை, மனக்கஷ்டம். | காலை 10 மணி |
| வெள்ளி- | மனஆறுதல், புகழ் கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- | கடின உழைப்பு, காரியானுகூலம். | பி.ப 4 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கும்பம்: சுப நேரம்
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த எண்ணம், ஆடம்பர வாழ்வு. | காலை 11 மணி |
| திங்கள்- | தூர இடப் பிரயாணம், காரியானுகூலம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | துக்கச் செய்தி, மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- | பாராட்டு, உறவினர் நன்மை. | பி.ப 4 மணி |
| வியாழன்- | பணக்கஷ்டம், பொருள் நட்டம். | பி.ப 5 மணி |
| வெள்ளி- | தனலாபம், மறைமுக நோய் வருத்தம். | காலை 9 மணி |
| சனி- | உறவினரால் தொல்லை, உள்ளத் தெளிவு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கர்க்கடகம்: சுப நேரம்
(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிடப் பயணம், பொருள் விரயம். | பி.ப 4 மணி |
| திங்கள்- | தனலாபம், பொருள் விருத்தி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பணப்புழக்கம், கடின உழைப்பு. | காலை 11 மணி |
| புதன்- | உறவினரால் தொல்லை, வீண் பழி கேட்டல். | பி.ப 4 மணி |
| வியாழன்- | தேகாரோக்கியம் பாதிப்பு, செலவு மிகுதி. | பி.ப 5 மணி |
| வெள்ளி- | இராஜ கௌரவம், உயர்ச்சி. | பி.ப 2 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு [illegible]ம். | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உத்தியோக நன்மை, அதிகாரம். | காலை 8 மணி |
| திங்கள்- | கடின உழைப்பு, மனக்கஷ்டம். | காலை 10 மணி |
| செவ்வாய்- | அரச பதவி, மனப் போராட்டம். | காலை 11 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, காரியசித்தி | பி.ப 3 மணி |
| வியாழன்- | பாராட்டு, நன்மைகள் சேரல். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், உயர்வு. | காலை 10 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, இனசன விரோதம். | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - சனி, அதிஷ்ட இலக்கம்-8

### சிம்மம்: சுப நேரம்
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் மிகுதி, குடும்பப்பிரச்சனை. | பி.ப 3 மணி |
| திங்கள்- | மறைமுக எதிர்ப்பு, வீண் செலவு. | காலை 10 மணி |
| செவ்வாய்- | வெளிநாட்டுப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| புதன்- | பணக்கஷ்டம், கொடுக்கல்வாங்கல பிரச்சனை. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளியிடத்தால் நன்மை, பணவரவு. | பி.ப 5 மணி |
| வெள்ளி- | அரச பதவி, தொழில் பேறு. | காலை 11 மணி |
| சனி- | செலவு மிகுதி, குறைகேட்டல். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அகமகிழ்வு, ஆடம்பரச் செலவு. | காலை 10 மணி |
| திங்கள்- | பயம் மிகுதி, வீண் பிரயாசம். | பி.ப 4 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் உதவி, அதிகாரம். | பி.ப 3 மணி |
| புதன்- | பாராட்டு, காதல் விவகாரம் வெற்றி. | பி.ப 5 மணி |
| வியாழன்- | தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | பலவித எண்ணங்கள், கடவுள் பக்தி. | காலை 11 மணி |
| சனி- | உயர்ச்சி, முன்னேற்றம். | காலை 10 மணி |

அதிஷ்டநாள் - வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியரால் உதவி, அதிகார விருத்தி. | காலை 8 மணி |
| திங்கள்- | பணவரவு, வீண் வாக்குவாதம். | காலை 11 மணி |
| செவ்வாய்- | அறிஞர் சேர்க்கை, அதிகார விருத்தி. | காலை 10 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, துயர் நீங்கும். | பி.ப 4 மணி |
| வியாழன்- | கல்விப் பேறு, கடின உழைப்பு. | பி.ப 3 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், கடவுள் நம்பிக்கை. | பி.ப 2 மணி |
| சனி- | புதிய திட்டங்கள், செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள் -செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மறைமுக எதிர்ப்பு, பணத்தட்டுப்பாடு. | காலை 10 மணி |
| திங்கள்- | பாராட்டு, உறவினர் வருகை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | எண்ணிய கருமம் வெற்றி, புகழ். | பி.ப 3 மணி |
| புதன்- | தனதானிய லாபம், கடன் பயம். | பி.ப 5 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, மனப்பூரிப்பு. | பி.ப 4 மணி |
| வெள்ளி- | வாழ்க்கையில் திருப்பம், சுபகாரிய மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | பலவிதச் சிறப்பு, வீண் செலவு. | காலை 11 மணி |

அதிஷ்டநாள் - வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்
(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | பாராட்டு, மனமகிழ்ச்சி. | காலை 10 மணி |
| செவ்வாய்- | வீண் பிரயாசம், காரியத் தடை. | காலை 11 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப 3 மணி |
| வியாழன்- | வெளிநாட்டுப் பயணம், துயர் நீங்கும். | பி.ப 4 மணி |
| வெள்ளி- | தனவிருத்தி, கடிதங்களால் நன்மை. | பி.ப 6 மணி |
| சனி- | செலவு மிகுதி, அந்நியர் உதவி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள் - புதன், அதிஷ்ட இலக்கம்-3

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அன்று மனித இறைச்சி உண்டவர்! மருத்துவராகி அறுவை சிகிச்சை நடத்துகிறார் இன்று!!




இங்குதான் விபத்து நடந்தது. உடல்கள் சிதறிக் கிடக்கின்றன. இந்த உடல்களை அறுத்து உணவாய் உண்டுதான் பிழைத்தவர்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டார்கள்.

இருபது வருடங்களுக்கு முன்னர் நடந்தது அந்தச் சம்பவம்.

20 வயதான மருத்துவ மாணவன் றொபட்டோ கனெசா பயணம் செய்த விமானம் நொறுங்கி பனிபடர்ந்த மலையில் சிதறி விழுகிறது.

இதில் ஒரு றக்பி விளையாட்டுக்குழு, அக்குழுவினரின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் விமான ஓட்டியும் சிப்பந்திகள் இருவருமாக மொத்தம் 42 பேர் பயணம் செய்தனர்.

விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். ஆக 24 பேர் மட்டுமே உயிர்த்தப்பினர்.



மருத்துவ மாணவன் என்பதால், காயப்பட்டவர்களுக்கு அவசர சிகிச்சைகளை அளிக்க கனெசா முன் வந்தார். மயக்க மருந்துக்கு வழியில்லை. சத்திர சிகிச்சைக்கான கத்தி முதலியன எதுவுமே இல்லாத நிலையில், கண்ணாடித் துண்டுகள், பிளேடுகள், உடைந்த உலோகத் துண்டுகளால் உடல்களைக் கீறி சிகிச்சை அளித்தார். முகச் சவரத்தின் போது பூசும் பூச்சே புண்களுக்குத் தடவும் மருந்தாகக் கிடைத்தது.

அண்டஸ் மலைச்சிகரத்தில் விமானம் விழுந்து நொறுங்கியது. எங்கும் பனி. இறங்கி கீழேவர முடியாத நிலை.

70 நாட்கள் தொடர்ந்து அதே இடத்தில் கிடந்தனர். முதல் எட்டு நாட்கள் வரை சிதறிக் கிடந்த உணவினைச் சேகரித்துப் பிழைத்தனர். 'பட்ட காலிலே படும்' என்பது போல ஒன்பதாவது நாள் பெரும்பனிப்புயல் கடுமையாக வீசியது.

பனிப்புயலுக்கு எட்டுப்பேர் பலியானார்கள். உணவும் தீர்ந்தது.

உயிர்வாழ உணவு தேவை. உணவோ அங்கு மருந்துக்குக் கூடக் கிடையாது. உதவி வரும் வரை உயிர் வாழ வேண்டுமானால் ஒரே வழி- உயிர் துறந்தவர்களின் உடலை உண்ண வேண்டும்.

றொபட்டோ தான் இந்த யோசனையை முதன் முதலில் தெரிவித்தார். மறுப்புத் தெரிவிக்க யாருமில்லை. உடன் பயணம் செய்தவர்களின் உடல், உயிருடன் இருப்பவர்களுக்கு உணவானது.

உடலின் பகுதிகளில் சத்துள்ளதெனக் கருதப்பட்ட பகுதிகளை றொபட்டோ கனெசா தேர்ந்தெடுத்து பரிமாற ஆரம்பித்தார். மீண்டும் பனிப்புயல் வீசினால் அள்ளுண்டு போகாதிருக்க விமான இடிபாடுகளுக்குள் சடலங்கள் அடுக்கப்பட்டன. பனி சூழ்ந்திருந்தமையினால் உடல் எதுவும் கெட்டுப் போகவில்லை.

உறவினர்கள், நெருங்கிய நண்பர்கள் ஆகியோருடைய உடல்களை உண்ணலாகாதெனத் தீர்மானிக்கப்பட்டது. கைகள் கால்களிலுள்ள இறைச்சியையே முதலில் பிரித்தெடுத்து உண்பதென முடிவானது. அதன்படியே நடைபெற்றது. இறைச்சியைச் சூடாக்கவும் வழியில்லை. பச்சையாகவே உண்டனர். இறந்தவருடைய நாக்கினை ஒருவர் சுவைத்தார். ஆனால் அதனை அவரால் விழுங்க முடியவில்லை. எலும்புக்குள்ளிருக்கும் மச்சை எனப்படும் மெல்லிய கொழுப்பே மிகவும் உருசியான பதார்த்தமாக இருந்தது என்று இவர்கள் சொன்னார்கள்.

இறந்தவர்களுடைய இருதயத்தை வெட்டி எடுத்த போது அதில் உறைந்து கிடந்த இரத்தமும் சுவையுடன் இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர். இறைச்சி, கொழுப்பு, இரத்தக் கட்டி ஆகியவற்றுடன் இதயத்தின் உள்ளுறுப்புகளும் வேளைக்கு வேளை விருந்து போல் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. நுரையீரல், சிறு நீரகம் மற்றும் குடல் பகுதிகள் ஆகியனவும் உணவாக உண்ணப்பட்டன.

மூளையை வெறுமனே உண்பதற்கு முடியாமற் போகவே தசைகள், கொழுப்பு, இருதயம், நுரையீரல் சிறு நீரகம் ஆகியவற்றை சிறு சிறு துண்டுகளாக வெட்டி மூளையுடன் கலந்து உண்ணப்பட்ட போது புதிய உருசியினை அவதானித்துள்ளனர். மனித மண்டை ஓடே உணவு உண்ணும் பாத்திரமாகப் பயன்படுத்தப் பட்டது. எலும்புகளே கரண்டியாக மாறின.

இத்தகைய கொடுமையான காலத்தை மேலும் அனுபவிக்க முடியாதெனக் கண்ட கனெசாவும் மற்றுமொருவரான நந்தோ பறடோனவும் மலையிலிருந்து கீழிறங்கி உதவி தேடுவதெனத் தீர்மானித்தனர். ஒன்பது நாட்களின் பின்னர் இவர்கள் உதவி புரிவோரைக் கண்டனர். அடுத்த நாள் ஏனையோரும் காப்பாற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன.

அன்று உண்பதற்காக மனித மாமிசத்தை, அறுத்தவரான றொபெட்டோ கனெசா தனது சொந்த மாநிலம் உருகுவேயிலுள்ள மொண்ட் வீடியோ நகரில் சத்திரசிகிச்சை நிபுணராகப் பணி புரிகிறார் இன்று.

இந்தக் கதை இப்பொழுது திரைப்படமாகத் தயாராகி வருகிறது. றொபெட்டோ கனெசா பாத்திரத்தை ஜோஷ் ஹாமில்டன் ஏற்று நடிக்கிறார்.

எவ்வளவுதான் இச்சம்பவங்களை திரைப் படத்தில் தத்ரூபமாகப் புகுத்தினாலும் உண்மையில் அனுபவித்தவர்களுக்கு அப்போதிருந்த உணர்வுகளை எடுத்துக் காட்ட முடியுமா? ●

## முடக்கு வலி போக ஒரு வழி!

புதிய வகையான புரதச் சத்து ஊசி மருந்து பாவித்த அன பொட்ஸ் என்ற தொழில் நுட்ப வரைவாளர் மகிழ்ச்சிப் பெருக்கிலிருக்கிறார். மூட்டு வாத நோயினால் முடங்கும் நிலையிலிருந்த அனி, புதிதாக- பரீட்சார்த்தமாகப் பிரயோகிக்கப் பட்ட ஊசி மருந்தின் மூலம் 75 சதவீதம் குணம் கண்டுள்ளார்.



TGF-B என்ற கிருமிகளே மூட்டு வாதம், முடக்கு வலி போன்ற நோய்களுக்குக் காரணம். அவை இரத்தத்திலுள்ள வெண் குருதிக்கலன்களை அழித்து, நோய் எதிர்ப்புச் சக்தியைக் குறைத்து அங்கங்களின் மூட்டுக்களில் போய்க் குடியேறி விடுகின்றன. இதனால் மூட்டுகளில் வீக்கம் ஏற்பட்டு தாங்க முடியாத வேதனையும் உண்டாகிறது. இப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதிய புரத ஊசி மருந்து, TGF-B கிருமிகளைக் கொன்று வேதனையிலிருந்து விடுதலை அளிக்கிறது.


தேசிய மூட்டு வாத ஆய்வு அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானியான டாக்டர் டேவிட் பிசெற்ஸ்கி, "இம்மருந்தினை இன்னும் பரீட்சார்த்த நிலையிலேயே வைத்திருக்கிறோம். இருப்பினும் மூட்டுகளில் ஏற்படும் வீக்கத்தை, இம்மருந்து அழித்து விடுகிறது என்பதை அறிந்து கொண்டுள்ளோம்." என்று கூறுகிறார். ■



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புதுமைத் தொடர்

## அத்தியாயம்—14




குலாம்ஷா திகைத்தார். குலாம்ஷா உள்ளே அதிர்ந்தார்.

இந்தக் குற்ற உலகின் கொடிய தலைவன் யாராக இருக்கமுடியும் என்ற விலைமதிப்பற்ற கேள்விக்கு இப்படியொரு பதில் வரும் என்று குலாம்ஷா நினைக்கவில்லை.

குலாம்ஷா குழம்பியதும், அதிர்ந்ததும் புரிந்து ரம்யா சின்னதாய் சப்தம் வர சிரித்தாள்.

ரம்யா சிரித்தபோதுதான் குலாம்ஷா குழப்பத்திலிருந்து வெளியே வந்தார் - கேட்டார்.

"உண்மையாகவா ரம்யா?"

"எதற்குப் பொய் சொல்ல வேண்டும்?"

"அப்படியானால்?"

"வைத்திலிங்கம்தான் எமது பொஸ். இந்தக்கூட்டத்தின் - குற்ற உலகின் கோமகன் அவர்தான். நம்புங்கள் ஷா. நம்புங்கள்."

"சமூகத்தில் பிரபல மனிதர். மாபெரும் கோடீஸ்வரர் - மறைமுகமாய்க் கொடிய மிருகம்."

"வைத்திலிங்கம் எப்படிக் கோடீஸ்வரர் ஆனார் என்று உங்கள் டிப்பார்ட்மெண்ட் ஆராய்ந்ததுண்டா ஷா? முடியாது. ஏன் எனில் உங்களைவிட வைத்திக்கு உரிய இடங்களில் செல்வாக்கு அதிகம்."

குலாம்ஷாவுக்குள் பாம்பு படமெடுத்து ஆடுவது போல கோபம் எழுந்தது.

"என்னிடமே நட்புக்கொண்டிருந்தான். சே.... அவனைப்போய் நல்லவன் என்று.... இந்த குலாம்ஷாவைக் கூட உன் நடிப்பால் ஏமாற்றிவிட்டாயே வைத்தி."

குலாம்ஷா உள்ளே கொதித்தார். வைத்திலிங்கத்தின் சிரிப்பு, நெற்றியின் இரு புறத்தையும் கட்டை விரலாலும், ஆட்காட்டி விரலாலும் அழுத்தியபடியே பேசும் வைத்தியின் பெரிய மனிதத் தோரணை... எல்லாம்.... எல்லாமே குலாம்ஷாவின் மனத்திரையில் நீவைன் ஆகிக் கொண்டிருந்தன.

"கோபம் போதும் ஷா. இனி எப்படி மோதுவது என்று யோசிக்கலாம். வைத்தியின் சுயரூபத்தை, பிரபல புள்ளி என்ற முகமூடியை எப்படிக் கிழித்துப் போடலாம் என்று யோசிக்கலாம். அதற்குமுன்..."

ரம்யா சொல்லிக் கொண்டிருக்க இடையில் வெட்டி குலாம்ஷா கேட்டார்.

"அதற்கு முன்?"

"இங்கிருந்து தப்ப வேண்டும் ஷா."

சொல்லிவிட்டு முன்நோக்கி நகர்ந்தாள். பின் தொடர்ந்தபடி குலாம்ஷா கேட்டார்.

"ரம்யா நீ செத்தது எப்படிப் பொய்யானது?"

"உங்களுக்கு எதிலும் அவசரம் ஷா. சில விஷயங்களில் பொறுமையும் சுவை தரும்."

சிரித்துக் கொண்டே நடந்தாள்.

"எந்த விஷயங்களில் ரம்யா?"

நடந்து கொண்டே கேட்டார்.

ரம்யா குலாம்ஷாவின் கேள்வியால் நடை நிறுத்தி சடுதியாகத் திரும்பினாள். திடீரென ரம்யா நின்றதால் பின் வந்த குலாம்ஷா அவள் மீது மோதினார்.

ரம்யா பின் திரும்பிய நொடியில் குலாம்ஷா மோதியதால் ரம்யாவின் சிகர அழகுகள் குலாம்ஷா நெஞ்சில் மோதி அழுத்தின. ஷா உள்ளே நொருங்கினார்.

எதிர்பாராத தாக்குதலால் மறு நொடி குலாம்ஷாவை இறுக அணைத்தாள் ரம்யா.

பெண்ணுக்குப் பலம் இல்லை என்று எந்த மடையன் சொன்னது? பெண்ணின் சுதந்திரத்தை முறித்து மூலையில் எறிந்திவிட்டு பலம் இல்லை என்று சொல்லித் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள். காதலில், காமத்தில், வாழ்க்கையில் பெண் பலம் பாதி, ஆண்பலம் பாதி.

பெண்ணைப் பெண்ணாக - ஒரு மனிசியாக மதித்தால் அவள் பலம் ஆணை மெய் மறக்க வைக்கும். ஆண் பலம் அவளை மெய்மறக்க வைக்கும். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மதிப்பதும், பலம், பலவீனங்களை பகிரலுமே ஊடலில், கூடலில், தொடரும் வாழ்தலில் பூரண சுகம் கொடுக்கும்.

ரம்யா இறுக அணைத்தபோது அந்த அணைப்பிலே உணர்ச்சி இருந்தது. குலாம்ஷா மீது ரம்யாவுக்குள்ள கவர்ச்சியான ஈர்ப்பு தெரிந்தது.

அணைத்தவள் அப்படியே முகம் உயர்த்தி ஷாவின் உதடுகளை தன் இதழ்களால் இறுக மூடினாள்.

இப்போது ஷா விலகிக் கொள்ள விரும்பவில்லை. இளம் இதழ்களைத் தன் உதடுகளால் வரவேற்றார். கரம் அனுப்பி ரம்யாவின் முதுகு வருடினார்.

இதழ்களில் இருந்து விலகி, முகம் குனிந்து ரம்யாவின் மென்மையான கழுத்தில் உதடு பொருத்தினார்.

ரம்யாவிடம் இருந்து சூடான பெருமூச்சு கிளர்ந்து வந்து குலாம்ஷாவின் கழுத்தைத் தடவிச் சென்றது.

ரம்யாவின் உள்ளே... வேள்வி நடக்கிறது. ஷாவின் உள்ளே காமம் ஒரு குதிரைபோல கட்டறுத்துப் பாயத் துடிக்கிறது.

ரம்யாவின் கழுத்தில் இருந்து விடுபட்டு விலகிய உதடுகள் கன்னத்தில் பதிந்து அவள் காதுமடலில் வந்து நின்றன. உதடு பிரித்து ரம்யாவின் காதுமடலைக் கடித்தார் ஷா.

ரம்யா தன்னை மறந்து...

"குலாம்ஷா"

என்று கிறக்கமாய் உச்சரித்தாள். கூச்சத்தால் நெளிந்து, உணர்ச்சியால் மயங்கி குலாம்ஷாவின் கழுத்தில் கடித்தாள்.

அந்த மயக்கமான பொழுதிலும் குலாம்ஷாவின் உள்ளே இன்னொரு குலாம்ஷா எச்சரிக்கைக் கொடி உயர்த்தினார்.

'பெண் சுகத்தில் உன்னை மறந்தால், துரத்திவரும் எதிரியிடம் உன்னை இழப்பாய்.'

எச்சரிக்கை புரிந்து மயக்கம் விலக்கினார். ரம்யாவின் நெற்றியில் அழுத்தமாய் ஒரு முத்தம் இறக்கிவிட்டு அணைப்பில் இருந்து விடை கொடுத்தார். ரம்யா விடுபட விருப்பம் இன்றி விலகினாள்.

"இப்படியே இருக்கலாம் போல் இருக்கிறது ஷா."

"தப்புவது முக்கியம் என்று நீயே சொல்லிவிட்டு இப்போது நீயே தடுக்கி விழலாமா?"

"ஆசைக்கு சூழல் புரியாது ஷா."

"ஆசையே துன்பங்களுக்குக் காரணம்."

"நியாயமான ஆசைகள் நிறைவேற துன்பங்களை தூசாக நினைக்கலாம் ஷா. எல்லோருமே துறவிகள் ஆகிவிட்டால் புதிய பிறவிகளே உருவாக முடியாதல்லவா?"

சொல்லிச் சிரித்தாள்.

"நன்றாகப் பேசுகிறாய்."

"செயலில் மட்டும் நான் கோட்டை விடுகிறேனே என்ன?"

"இல்லை. நீ ஒரு செயல் வீரி" சிரித்து ரம்யாவின் முதுகில் தட்டி...

"வழியைக் காட்டு பெண்ணே."

"சொர்க்கத்திற்கே வழி காட்டக் காத்திருக்கிறேன்."

"அது பின்னர். இப்போது தப்புவதற்கு வழிகாட்டு."

ரம்யா மறுபடி இருட்டில் வழி புரிந்து முன்னேறினாள்.

"இன்னும் ஐந்து நிமிடத்தில் வெளிக்காற்று வந்து தழுவும். இங்கிருந்து விடுபட்டுக் கொள்ளலாம்."

சொல்லியபடியே நடந்தாள் ரம்யா.

அடுத்த ஐந்து நிமிடங்கள் பேச்சின்றியே நடந்தனர். பேச்சின்றியே வழியை அடைந்தனர்.

இருளில் சுவரில் பட்டன் தேடி அழுத்தினாள் ரம்யா.

சுவர் விலகி வழி ஒன்று திறந்தது.

மெல்லிய வெளிச்சம் வெளியே தெரிந்தது.

வெளியே கால் எடுத்து வைத்து முகம் நீட்டி இடதுபுறம் பார்த்தாள் ரம்யா. பின் வலது புறம் பார்க்கத் திரும்பினாள்.

திரும்பிய முகத்தில் இடியாய் இறங்கியது ஒரு கரம்.

முகத்தில் குத்து வாங்கி, எதிர்பாராத அதிர்ச்சியில் பின்புறமாய்ச் சரிந்தாள் ரம்யா.

■

மறுமுனை போனில் சிரிக்க டி.ஐ.ஜி. டென்சில் கோபமானர்.

"யார் நீ?"

கேட்டார்.

"உங்கள் நண்பன். நலன்விரும்பி அல்லது உண்மை விளிம்பி. இதில் ஏதாவது ஒரு பெயரை வைத்துக் கொள்ளுங்கள் டி.ஐ.ஜி."

கேலியாய்ச் சிரித்தது மறுமுனை. குரல் காரமாய் இருந்தது.

"யார் வேண்டும் உனக்கு?"

"டி.ஐ.ஜி. டென்சில்தானே பேசுகிறீர்கள்?"

"யெஸ்."

"நல்லது நீங்கள் தான் வேண்டும்."

பொறுமையைத் தொலைத்தார் டி.ஐ.ஜி.

"யாரடா .. நீ?"

"வேண்டாம். இந்த டா..டி.. டேய் கோபம், துள்ளல், துடித்தல் எக்ஸ்செட்றா, எக்ஸ்செட்றா இதெல்லாம் வேண்டாம்."

"வேறு என்ன வேண்டும்? உன் சாவுவேண்டுமாடா முட்டாள்?"

"பிறகும் பாருங்கள் உணர்ச்சி வசப்படுகிறீர்கள். ஒரு முட்டாள் எப்படியப்பா டி.ஐ.ஜி. டென்சிலின் தங்கையை, பாசமலரை பக்குவமாய் கடத்திவர முடியும்? ஒரு முட்டாள் எப்படியப்பா டி.ஐ.ஜி. முன்னால் அவர் காவலர்களை டுமீல்.. டுமீல்.. செய்திருக்க முடியும்..? ஒரு முட்டாள் எப்படியப்பா கிரைம் புலி குலாம்ஷாவை மடக்கித் தன் கோட்டைக்குக் கொண்டு போயிருக்க முடியும்? இப்படி எத்தனை கேள்விகள். பதில் தேடிப் பாருங்கள். இனி முட்டாள் என்ற வார்த்தையை மூட்டை கட்டி வைத்து வீடுவீர்கள்."

"நீ முட்டாளோ இல்லையோ அதைப் பின்னர் முடிவு செய்யலாம். நீ ஒரு கோழை. சுத்தமான ஆண்மகன் அல்ல..."

"அப்படியா..? உங்கள் பாசமலர் என் அருகில்தான் இருக்கிறது மிஸ்டர் டென்சில். நீங்கள் இறுதியாகச் சொன்ன வார்த்தைகளுக்கு அவளை விட்டே பதில் சொல்ல வைக்கவா?"

"பிரச்சனை உன் கூட்டத்திற்கும் எமக்கும்தானே தவிர என் குடும்பத்தோடு விளையாடாதே. முடியுமானால் என்னோடு மோதிப்பார். உன் வீரத்தைப் பார்க்கலாம்."

மறுமுனை மீண்டும் சத்தம் போட்டுச் சிரித்தது.

"எமது வழியை விட்டு விலகுவது புத்திசாலித்தனம். இல்லை, முடியாது, விலகமாட்டேன், விளையாடியே தீருவேன் என்று நீங்கள் அடம் பிடித்தால்..?"

அவன் சொல்லி நிறுத்திய மறுநொடி..

"அண்ணா....."

என்று டென்சிலின் தங்கை அலறும் குரல் மறுமுனையில் இருந்து கேட்டது.

"என்ன டி.ஐ.ஜி. நெஞ்சு துடிக்குமே. இதயம் இறங்கி கீழே வந்திருக்குமே!"

கேலி பேசி சிரித்து எரிச்சலூட்டி டி.ஐ.ஜி. டென்சிலின் உள்ளே நெருப்பு மூட்டினான்.

"ஓகே. டி.ஐ.ஜி. யோசித்து முடிவு செய்யுங்கள். உங்கள் பாசமலர், தாமரைப்பூ கண்ணீரிலே காணாமல் போக வேண்டுமோ என்று யோசியுங்கள். பின் மீண்டும் தொடர்பு கொள்வேன். குட் பை."

தொடர்பு துண்டிக்கப்பட்டது. டி.ஐ.ஜி. டென்சிலின் உள்ளே சினம் கொம்பு சீவப்பட்டு எதிரியைக் குத்திக் குதறத் தயாரானது.

மயக்கம் தெளிந்து மதுமிதா கட்டிலில் எழுந்து அமர்ந்தாள்.

"டி.ஐ.ஜி."

சினம் உள்ளே சிலிர்த்தெழுந்தபடி இருக்க, குரல் கேட்டு திரும்பி அவள் முகம் பார்த்தார்.

அருகில் வருமாறு கரம் அசைத்து சைகையால் அழைத்தாள் மதுமிதா.

(இன்னும் வரும்) ■

# சிந்தியா பதில்கள்

அன்பின் சிந்தியா. தவறுகள் தண்டிக்கப்பட வேண்டுமா? திருத்தப்பட வேண்டுமா?

**எஸ்.மணி-பூண்டுலோயா.**

அது தவறுகளைப் பொறுத்து தீர்மானிக்க வேண்டியது.

•

சிந்தியா- சின்னவீட்டை மறக்க ஒரு யோசனை சொல்லம்மா பிளீஸ்?

**எ.பி.சதாசிவம்-கொழும்பு-2.**

பெரிய வீடாகப் பார்த்து குடியேறுங்கள்.

## முரசு தான் முந்தித் தந்தது!

இன்றைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா பற்றி சில வரிகள்?

**ஏ.ஜி.முஆத்-தோப்பூர்-03.**

அவசரமான முடிவுகள் - அவசரமான பேச்சுக்கள் அவரது பலவீனம்.

•

பதினைந்து பிள்ளைகளை ஒரே சமயத்தில் பிரசவித்த செய்தி தமிழக ராணி வாரஇதழிலும் வெளிவந்துள்ளது கவனித்தீர்களா?

**எம்.மதிவதனி-மட்டக்குளி.**

கவனித்தேன். முரசுதான் அந்த உலக சாதனையை முந்தித் தந்தது. ராணி 'டு லேட்'.

•

உலகிலே எது நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறது?

**இரா.திருச்செல்வம்-கொழும்பு-14.**

நேரம்.

•

ரசிகர்களை உணர்ச்சி வசப்படுத்தும் நட்சத்திரங்கள் உணர்ச்சி வசப்படுவதுண்டா?

**எம்.பி.எஸ்.மணியம்-எல்கடுவ.**

நடிகர்-நடிகையர்களும் மனிதர்களே.

•

திரையுலகம் தற்போது எந்தளவுக்கு முன்னேறியுள்ளது?

**ஏ.சி.எம்.முஸம்மில்-மாவனல்ல.**

தொழில்நுட்பத் துறையில், படங்கள் வெளிவரும் தொகையில், ஆடைகள் பாலாடை போல மெல்லியதாகும் வகையில் என்று பலவற்றைச் சொல்லலாம்.

•

டியர் சிந்தியா. வெளிநாடுகளில், புலிகளின் நிலைப்பாடு என்ன?

**எஸ்.எம்.தன்சூரியா-மூதூர்.**

காட்டுக்குள் இருப்பதே பாதுகாப்பு என்று கருதுகின்றன.

•

முரசில் இடம் பெற்ற முகில் வண்ணனின் கதையில் தற்கொலை பரிகாரமாகக் கூறப்பட்டது சரியா சிந்தியா? இவ்வாறான கதைகளுக்கு முரசு இடம் தரலாமா?

**அ.தெய்வசிகாமணி-கண்டி.**

வாழ்வின் சிக்கலுக்கு தீர்வுகாண தற்கொலை என்பது கோழைத்தனம். எதிர்த்துப் போராடுவதே அவசியம். முரசில் இடம் பெறும் அனைத்து ஆக்கங்களும் முரசின் கருத்துகளாகத் தான் இருக்கும் என்பதில்லை.

•

ஐஸ்வர்யாவுடன் ஏற்கனவே கிசு கிசுக்கப்பட்டவரைத்தானா அவர் திருமணம் செய்துள்ளார்?

**சேத்தூர் எஸ்.பகீரதி-மட்டுநகர்.**

ஆம். ஒரு திருத்தம். இறுதியாகக் கிசு கிசுக்கப்பட்டவரை.

•

தினமுரசு வாரமலரின் இளமையின் இரகசியம் என்ன?

**செல்வி ரின்ஸியா-புத்தளம்.**

உஷ்! அதுபரம இரகசியமாக்கும்.

•

காதலில் தோல்வி அடையும் ஆண்கள் மதுவை நாடுவது ஏன்?

**செல்வி தேவி மஞ்சுளா-சாமிமலை.**

அதிலும் 'ம'இருக்கிறது என்ற திருப்தியோ தெரியவில்லை.

•

நடிகர் சத்தியராஜ் நடித்த 'வால்டர் வெற்றிவேல்' அவருக்கு வெற்றிப்படமா?

**சே.மு.முபமீதீன்-காங்கேயனோடை-13.**

வெற்றிப்படம் மட்டுமல்ல. வெள்ளிவிழாப் படம்.

•

ஆண்கள் ஏன் பெண்களை ஏமாற்றுகிறார்கள்?

**கே.ஜெயகௌரி-நிலாவெளி.**

எல்லா ஆண்களும் ஏமாற்றுவதும் இல்லை. எல்லாப் பெண்களும் ஏமாறுவதும் இல்லை. ஏமாறுகிறவர் உள்ளவரை ஏமாற்றுவோரும் இருப்பர் ஜெயகௌரி.

•

கிரிக்கெட் போட்டிகளில் வர்ணனையாளர்கள் ஒரு அணிக்குச் சார்பாக வர்ணனை வழங்குவது சரியானதா?

**செல்வன் இ.சந்திரபாலன்-இரத்தினபுரி.**

தவறானது.

•

எதிர்பாராமல் பிரிந்த உண்மைக் காதலியைப் பற்றி?

**எம்.எஸ்.நஜீம்-கொழும்பு.**

உமக்குத்தான் தெரியும்!


•

தளபதி-உடன் பிறப்பு இருபடங்களிலும் நட்பின் புனிதத்தை காட்டுவது எந்தப்படம்?

**எம்.எல்.எம்.பாஹிம்-மாளிகாவத்தை.**

இரண்டிலும் இரு வேறு கோணங்கள். உண்மை நட்புக்கு பல பரிமாணங்கள் உண்டு. அவற்றில் சில கட்டங்களே இரண்டிலும் காட்டப்பட்டன.

# பேனா நண்பர் அரங்கம்



**பெயர்:** கே. சதீஸ்
**வயது:** 23
**முகவரி:** 270 41 /7, பேஸ்லைன் வீதி
தெமட்டகொட, கொழும்பு-9.



**பெயர்:** மா. பரிமளா
**வயது:** 25
**முகவரி:** கீனாக்கலை த.வி.
பதுளை.
**பொழுதுபோக்கு:** ரீ.வி. பார்த்தல், வானொலி கேட்டல், நாவல் வாசித்தல்.



**பெயர்:** இ. சிவதாசன்
**வயது:** 24
**முகவரி:** 71, ஸ்ரேஸ் வீதி,
கொழும்பு-11.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், சினிமா பார்த்தல்.



**பெயர்:** பௌஸான்-உல்-ஹக்
**வயது:** 20
**முகவரி:** "லங்கா ஜெம்ஸ்"
இல-40, ரேஸ்கோஸ் வீதி, பதுளை.
**பொழுதுபோக்கு:** வானொலி, ரீ.வி, பத்திரிகை.



**பெயர்:** ஏ.எல். முகமட் சதாத்
**வயது:** 22
**முகவரி:** 205/3, மண்முனை,
புதிய காத்தான்குடி.
**பொழுதுபோக்கு:** பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், பேனா நண்பர் தொடர்பு, விளையாட்டு.



**பெயர்:** எம்.எஸ். பஸ்மியாஸ்
**வயது:** 17
**முகவரி:** இல-265/9, டாம் வீதி,
கொழும்பு-12.
**பொழுதுபோக்கு:** வானொலி, பத்திரிகை, தையல்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## சிறுகதை

# பெரியமடு கிராமம்

-தி/இளையவன்-

மன்னார் அகதிகளுக்கென ஒதுக்கப் பட்டிருந்த அந்த அகதி முகாம் தூண் கம்போடு சாய்ந்து கண்களை மூடிக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான்.

"ஏங்க...! நாம நம்மட ஊருக்கு எப்பவாக்குல போவம்...?."

மனைவியை முகத்துக்கு நேரே பார்த்தவன் வழமை போல எவ்வித வார்த்தைகளும் பேசாது அமைதியாக, ஆறுதலாக எழுந்து சற்றுத் தூரத்திலிருந்த பள்ளிவாசலை நோக்கி விரைந்தான்.

'சே...! என்ன வாழ்க்கை இது?' அவனுக்குள் வெறுப்பு மேலும் அதிகரித்தது. ஏதோ ஒரு வகையில் தாங்கள் இன்னும் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டே இருப்பதாக ஒரு எண்ணம் அவனுள்ளத்தில். டவுண்ல வாழணும், வசதிகளை அனுபவிக்கணும் என்பதே அப்போதைய அவனது ஆசைகள். இப்போ அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது தான். ஆனால், அதன் மாறுபட்ட தன்மை கண்டு மனதிற்குள் கொதித்தான்.

மன்னார் பட்டிணத்திலிருந்து கிழக்கால சங்குப்பிட்டிக்குச் செல்லும் பாதை வழியாக உள்ள பள்ளமேட்டு சந்தியில் இறங்கி, பெயருக்கென கொஞ்சம் தார் ஊற்றப் பட்டிருக்கும் அந்தக்கால வீதியால் காட்டுப் பாதையூடாக சுமார் எட்டு மைல்கள் தூரம் சென்றால் அந்த சிறிய பெரியமடு கிராமம். இப்போ அந்த கிராமத்திற்குள் காகம் கூட இருக்காது என்பதையவன் அறிவான். அநேகமாக இடிபாடடைந்துள்ள வீடுகளுக்குள் பற்றைகள் வளர்ந்து விச ஜந்துக்கள் ஜீவனம் நடத்திக் கொண்டிருக்கும். கடந்த கால வடக்கு-கிழக்கு வன்செயலுக்கு முன்னர் அந்த மாவட்டத்தின் விவசாயத் தேவைகளில் கணிசமான பங்களிப்பைச் செலுத்திய கிராமம் அது. மன்னார் மாவட்டத்திலே அந்த ஊரின் பெயரை அங்கு விளையும் மாம்பழங்கள் நிலைநாட்டிக் கொண்டிருந்தன.

பஸ் பெயர்ப்பலகையின் முன்பாக குறுக்கால் ஒரு வெள்ளிக் கம்பிச் சட்டம் விழுந்த அல்லது ஜன்னல்களினூடாகத் தெரியும் தலைப்பாக்கள், முக்காடுகள் என்பன அந்த ஊருக்கு செல்லும் பஸ்ஸின் அடையாளம். நேர அட்டவணைப்படி என்னவோ 2.15 மணிக்குப் புறப்படும் என்று டைம் கீப்பர்கள் சொன்னாலும், பஸ் புறப்பட எப்படியும் 3.00 மணியையும் தாண்டிவிடும். ஏதோ அந்த ஊருக்குச் சொந்தமான பஸ்தான் என்ற நினைப்பு ஊர்க்காரர்களுக்கு. நடத்துனர்களும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. '10 அல்லது 15 நிமிசத்துக்கப்புறம் தான் வருவேன் கொஞ்சம் நின்று போங்க' என்று யாராவது சொன்னால் அவர்கள் வரும் வரைக்கும் காத்துக் கொண்டிருப் பார்கள். ஊரோடு அப்படியொரு சிநேகிதம்.

ஊர்க்காரர்களை விட அந்த பஸ்ஸுக் குத்தான் அடிக்கடி சுகயீனம் வரும். நடு வீதி என்றும் பாராது அசையாது அடம் பிடித்துவிடும். கேட்டால் 'பிறேக்டவுன்' என்று பதில் வரும். ஊர்க்காரர்களுக்கோ அது பழக்கப்பட்ட விசயமாகையால் பெரிது படுத்தாமல் இறங்கி, அவ்வழியால் செல்லக்கூடிய சங்குப்பிட்டி பஸ்ஸைக் காத்திருந்து அதற்குள் நசுங்கிக் கசங்கி பள்ளமேடு சந்தியில் குதிப்பார்கள். எட்டு மைல் தூரம் நடப்பதென்பது அவர்களுக்குச் சர்வசாதாரணம். இதெல்லாம் அவனுக்கு ஜீரணிக்கவே முடியாத வெறுப்பாக இருந்தது. 'இப்படி எளவு பிடிச்ச ஊர்லயும் வாழணுமா...? வர்ற விலைக்கு எப்படியும் காணி பூமியை வித்துட்டு டவுண்ல பொழைக்கிற வழியைப் பார்த்தால்தான் நிம்மதி.' தனக்குள் புலம்பிக் கொண்டே நடப்பான்.

அந்த ஊருக்குரிய தேசிய வாகனமே மாட்டு வண்டிதான். வண்டியோட்டிகளிடம் ஒரு தாராள மனதென்னவென்றால், காட்டுப் பாதையால போகின்ற யாரைக் கண்டாலும் வண்டியில் ஏற்றிக் கொள்வார்கள். பலதரப்பட்ட ஊர்க் கதைகளுடன் ஆடிக் குலுங்கிச் செல்லும் அந்தப் பயணம் சுவாரசியமானது. ஆறுதலாக இருட்டுக்குள் ஊரை அடைவது தான் அந்த மாட்டு வண்டிப் பயணம். இதையும் அவன் வெறுத்தான். இரவு படுக்கையில் அங்க இங்க உடம்பு பிடிக்கும் போது ஊரையும் அந்தப் பயணத்தையும் திட்டித் தீர்த்துக் கொண்டே உறங்கிப் போவான்.

பள்ளமேட்டுச் சந்தியிலிருந்து வடக்காகப் பார்த்தால் தூரத்தில் விடத்தல் தீவு கிராமத்தின் ஓட்டு வீட்டுச் சிகப்புக்கள் கூட்டம் கூட்டமாகத் தெரியும். பெரிய மடுக்குப் போக என்று புதிதாக யாரும் வந்து வாகனம் இல்லாது மாட்டிக் கொண்டால் அவர்களுக்கு ஆறுதல், அடைக்கலம் எல்லாமே அந்த விடத்தல் தீவுதான். அவனோட வேலைத்தளக் காரியாலயம் டவுணில் இருப்பதனால் அடிக்கடி பிற ஊர்க்காரர்கள் அவனைத் தேடிவந்து வாகனம் கிடைக்காது இப்படி பரிதாபமாக மாட்டிக் கொள்வார்கள். அவர்கள் அதைப் பெரிதாக எடுக்கா விட்டாலும் அவனைப் பொறுத்தளவில் அது இமயம் அளவுக்குக் குறைபாடாக மனதை உறுத்திக் கொள்ளும். நாலு பேருக்கு முன்னால் தன் ஊர்ப் பெருமையினைச் சொல்லவே வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொள்வான்.

கொஞ்சம் தூரத்துடன் 'நான் வரவில்லை. நீங்க போங்க, என்பதுபோல தன்னைச் சுருக்கிக்கொள்ளும் தார் வீதியைக் கடந்ததும், எங்கும் மணல் பாதைதான். மழைக்காலம் என்றால் சேறும், சகதியுமாக வீதி தன்னை ஈரமாக்கிக் கொள்வதனால் சைக்கிள்களை நம்பி பயணம் செய்பவர்கள் பாடு பரிதாபம்தான். அக்காலங்களில் அவன் அந்த ஊரை முற்றாகவே ஒதுக்கி விடுவான். பஸ்விட மாட்டார்கள். பட்டணத்தில் தற்காலிகமாக ஒரு வீட்டை வாடகைக் கமர்த்திக் கொண்டு மழைக்காலம் முடிந்து வீதி தன்னை உலர்த்தி பழைய மணல் நிலைமைக்கு வந்து விட்டது என்பதையறிந்த பின்னரே புது மாப்பிள்ளைக்குரிய தெம்புடன் ஊருக்குள் வருவான். இது அவனோட வழக்கம்.

ஊர்க்காரர்களோ சுட்டெரிக்கும் வெயிலுக்குக் கூடப் பயப்படுவதில்லை. காலில் செருப்பில்லாமல் அந்த மணல் பாதையால் விரைவார்கள். இரண்டு பக்கமும் பற்றைக் காடுகள் பச்சையாக இருக்க, சில இடங்களில் வெட்டை வெளிகள். வெய்யிலின் தாக்குதலைச் சமாளித்துக் கொள்ள ஒரு பிடி நிழலும் இல்லாத பகுதிகளும் ஏராளம். தூரத்தில் காட்டுவயல் பக்கம் உயர்ந்த வக்கற்ற நிலையில் பனை மரங்கள் காற்றில் ஆடும். சில இடங்களில் பரட்டைத்தலை விரித்தபடி ஆல மரங்களும், பால மரங்களும் வீதியோரம் நின்று ஆறுதல் அளிக்கும்.

வழக்கம் போல ஒரு மழைக்கால ஆரம்பம். அவனுக்கு அப்போ பதவியுயர்வு கிடைத்த புதிது. பட்டணத்தில் ஒரு விடுதியையும் காரியாலயத்தால் வழங்கியிருந்தார்கள். எப்படியும் மழைக்கு முன்னர் குடும்பத்தாருடன் கிளம்பியாகணும் என்ற வெறி அவனுள்ளத்திலே உயர்ந்திருந்தது. வீடு வயல்களை நம்பிக்கையானவர்களிடம் கையளித்துவிட்டு தனது பயணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினான். அப்போ வடக்கு-கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளை அவ்வூர்க் காரர்கள் வானொலியிலும் பத்திரிகையிலுமாக ஆர்வத்துடன் அறிந்து கொண்டிருந்தனர்.

அன்று ஒரு சனிக்கிழமை-விடுமுறை நாள். பஸ்ஸுக்காக குடும்பத்தினருடன் ஊர் விளையாட்டு மைதானத்திற்கு முன்பிருந்த 'காக்கா' தேனீர்க்கடை அருகிருந்த தரிப்பிடத்தில் காத்திருந்தான். காக்கா தேனீர் கடைக்கு முன்னால் நீட்டி நிமிர்ந்திருந்த 'வாங்கில்' அவன் குடும்பம். ஊரைவிட்டுப் பிரியப் போகின்றோமே என்ற ஏக்கப் பெருமூச்சு அவனுடைய மனைவியின் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

"எப்ப டாடி பஸ் வரும்.....?." கடைசி மகள் நச்சரித்துக் கொண்டேயிருந்தாள். மனைவி பொறுமையிழந்து நெளிந்து கொண்டிருந்தாள்.

"பேசாம மாட்டு வண்டியில சந்திக்குப் போய் பஸ் பிடிப்போமா.....?"

"மாட்டு வண்டியிலா! அதவிட நடந்தே போகலாம்." வெறுப்புடன் மனைவியைப் பார்த்தான்.

"உங்களால நடக்க முடியுமா....?"

"பள்ள மேட்டுச் சந்திக்குத்தானே..... கடைசித்தடவையா நடந்திட வேண்டியது தான். இந்த ஊர்ல நடையைவிட்டா வேற கதி என்ன?"

நடந்து கொண்டே அந்தக் கிராமத்தையும் தான் வளர்ந்த - விளையாடிய இடங்களையும் சோகத்துடன் நோட்ட மிட்டாள். மனைவியின் எண்ணங்களை ஏனோ அவனால் புரிந்துகொள்ள முடிய வில்லை. அவள் எதுவுமே பேசாது மௌனமாக தொடர்ந்து கொண்டிருந்தாள். பெரிய மடு கிராமத்தில் தொடங்கிய காலை வெயில் கொஞ்சம் கொஞ்சமாகச் சூடு பிடிக்கத் தொடங்கியது. எப்படியும் மத்தியான சூட்டுக்கு முன் சந்திக்குப் போயிடணும் என்ற எண்ணத்திற்கு ஏற்ப நடையைத் துரிதப்படுத்திக் கொண்டான்.

"மவன்! வெரசா எட்டுவைச்சு நட. உச்சி வெயில் வந்தா பொறவு கஷ்டம்."

"காலிலதான் நமக்குச் செருப்பிருக்கே. அதால வெயில் சுடாதே..." சின்னவளோட அறியாமை அவனுக்குச் சிரிப்பை யேற்படுத்தியது.

"கால் சுடாதும்மா ஆனா தலை சுடுமே.....!" ஊரை விட்டுக் கொஞ்ச தூரம்தான் பிரிந்திருந்தார்கள். அவனது மனைவியைப் பொறுத்தளவில் இவ்வளவு தூரம் நடப்பதென்பது குறைவுதான். மற்றவர்கள் சொல்லும் அந்தச் சுவாரசியமான கதைகளைக் கேட்டு தானும் அந்தக் காட்டுப் பாதையால நடந்து பலவிதமான பறவைகளின் ஒலிகளையும் சிறிய பிராணிகளின் துள்ளல்களையும் மற்றும் சிறிய விலங்குகளின் இயற்கைவாழ் தன்மைகளையும் மனசுதீர காண வேண்டும் என்ற நெடுநாளைய ஆசைக்கு அன்று சரியான சந்தர்ப்பம். மற்றவர்கள் சொன்னது போல அந்தக் காட்டுப் பாதை யால நடப்பது சுகமான அனுபவமாகவே யிருந்தும் அதனையவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

"காட்டுப் பாதையால நடந்து போகணும்னு உங்களுக்கு ரொம்ப ஆசைதான்."

அந்த வார்த்தைகள் அவனுக்கு எரிச்சலூட்டியதால் சற்று மௌனமாகி,

"இது பெரிய நந்தவனப் பாதைபாரு....? புழுதி மணலும், காட்டுமிருகங்களும்."

"அதையெல்லாம் விட ஊர்ல நல்ல மனுசருங்க இருக்காங்க" அவளோட வார்த்தைகள் எதையோ குத்திக் காட்டுவதை யுணர்ந்து கொண்டான்.

"உனக்கு டவுணைப்பத்தி என்ன தெரியும்? ரெண்டு பேர் சத்தமா கதைச்சாலே அக்கம் பக்கத்திலிருந்து குமிஞ்சிடு வாங்க. கேட்டா சமாதானப்படுத்த வாறாங்களாம் -நாகரிகம் தெரியாத பட்டிக் காட்டான்கள்."

'டவுண் வாழ்க்கையில இரண்டு பேர் அடிபட்டு, குத்துப்பட்டு துடிச்சுக் கொண்டிருந்தாலே நமக்கு ஏன் வம்பு என்று பார்த்தும் பாராம ஒதுங்கிப் போறதா நாகரிகம்' பகிரங்கமாகக் கேட்டுவிடத் துடித்தாள். ஏனோ பொறுமையாக அடக்கிக் கொண்டே,

"நல்ல மனசிருக்கிறதால உதவிக்கு வாராங்க. ஒரு நேரத்துல யாரும் சமைக் காட்டி எத்தனை வீட்டிலிருந்து சாப்பாடு அனுப்பி வைப்பாங்க. உங்களுக்கே தெரியுமே."

எவ்வளவு ஒத்துமையான சாதிசனங்க. இவங்கள விட்டா பிரியணும்.....?" மேற் கொண்டு பேச்சுக் கொடுத்தால் எங்கே தன் மனசு மாறிவிடுமோ என்ற அச்சம் மேலிட மௌனமானான்.

தூரத்தில் சில மாட்டு வண்டிகள் புழுதியைக் கிளப்பிக் கொண்டு போட்டி போட்டுக் கொண்டு வந்தன. பாதுகாப்பாக வீதியை விட்டிறங்கி ஓர் ஓரமாக எல்லோரும் நின்றுகொண்டனர். அவர்களுக்கருகிலும் எங்கும் புழுதிமயம். வேகமாக வந்து கொண்டிருந்த ஒருவன் இவர்களைப் பார்த்துப்பலமாகக் கத்தினான்.

"எல்லோரையும் ஊரை விட்டு விரட்டுறாங்க. மீறி இருந்தா ஆபத்தாம். அந்தப்பக்கத்தால போகாதீங்க."

வார்த்தைகளைக் கேட்டதும் அவன் துடித்துப் போனான். வடக்கு-கிழக்கில் தலை விரித்தாடிய வன்செயல் தங்கள் கிராமத்தையும் பிடித்துவிட்டதே என்று நடுங்கிப்போனான். ஏற்கனவே பல ஊர்களில் நடைபெற்றதாகக் கேள்விப்பட்ட வன்செயல் சம்பவங்களும் உயிர்ப்பலிகளும் அவனை மேற் கொண்டு செல்லத்தடுத்தது. ஊரைவிட்டுச் செல்ல இருந்தவன் இப்போ ஊரோடு செல்ல வேண்டிய நிலைக்காளாகி செய்வதறியாது தவித்தான். எதிரே, உதவிக்கென நிறுத்தப்பட்டிருந்த அந்த மாட்டு வண்டியில் பரபரப்பாக ஏறி பயணத்தை திசை மாற்றிக் கொண்டான். அன்று விடிவதற்குள் ஊர் அமைதிப்பட்டு விட்டது.

"நேரமாச்சு போங்க தம்பி பள்ளியப் பூட்டப்போறாங்க." முஅத்தீன் வார்த்தைகளால் சிந்தனை விடுபட எழுந்து கொண்டவன் கண்களைத் துடைத்துக் கொண்டான். இப்போ அந்த ஊரில் வாழணும் என்ற ஆசை அவனைக் கொன்றுகொண்டிருந்தது. எப்படியாவது அங்கு போயாகணும். அந்தக் காட்டுப் பாதையால நடக்கணும். அந்த காட்டுவயல்களை, குளங்களை, மாட்டு வண்டிப் பயணங்களை அனுபவிக்கணும் என்று துடித்துக் கொண்டிருந்தான். தான் வெறுத்த அந்த ஊரின் காற்றுக்காக இப்போ ஏங்குவதை வெளியே சொல்ல முடியாது உள்ளுக்குள் அழுதான். இப்போதும் தினந்தோறும் விடிகின்றது ஆனால், அகதி முகாமில் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் அந்த ஊர்க்காரர்களின் நிம்மதியான வாழ்வுக்கு எப்போதுதான் விடிவுகள் தோன்றுமோ....?

-இந்த மண்ணில்
அறிந்தவர்கள் - வெளிச்சத்தில்
உறங்குகிறார்கள்.
அறியாதவர்களோ - இருளில்
விழித்திருக்கிறார்கள்-

(சம்பவங்கள் கற்பனை)




**உணர்ச்சிகளுக்கு ஆண் பெண் பேதமில்லை.**
**ஆனால் திடீரென்று வெள்ளை**
**வேட்டிச் சட்டைக்கு மாறுவது சங்கடமானால்**
**பெண்ணிற்கும் அப்படித்தான்........**
**இது ஒரு தேவையற்ற காட்டுமிராண்டித்தனம்!!**

# மாற்றம்

-எம். சுரேஷ்-



ஒழுங்காக வேலைக்கு வருவதில்லை, யாருடனும் கதைப்பதில்லை. சிரிப்பதில்லை, முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு.... ரொம்பவும் மாறிப் போயிருந்தான் ரகுராமன்.

அந்த நிதிக் கம்பனியின் முகாமையைப் பொறுப்பேற்று நிறுவனத்தையே கலகலப்பாக்கி, மகிழ்ச்சிக் கடலில் தத்தளிக்க வைத்தவன் சோர்ந்து போனான்..... எந்நேரமும் கோட்டும் சூட்டுமாகக் கம்பீரமாகத் திரிந்தவன், கதர்வேட்டி சட்டைக்கு மாறி, ஒரு இனம் புரியாத விரக்தியிலிருந்து மீள முடியாமல்.....

தானாய் சிரித்தான், தனிமையில் அழுதான். அவன் வாழ்வில் ஏற்பட்ட இடைவெளியை எந்தவகையிலும் அவனால் ஈடுசெய்ய முடியவில்லை.

"செல்வி".....ஆத்மார்த்தமாக அழைத்தவன், விம்மினான். விழிகளை நீர் மறைத்தது.

.....அது நிலவு தேகத்தை எரித்த காலம். அவனுக்கு அவள்தான் அபிராமி. மௌனமாய் மனதிற்குள் காதலித்தான். பூக்களைக் காதலிக்க அனுமதி தேவையில்லையென்று தத்துவம் பேசினான்.

அந்த விழிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, விழிகளினால் விழிகளுக்கு காதல் கடிதம் எழுதினான். அனுப்பவில்லை!

"சொல்லி அழுவதைவிட, சொல்லாமல் அழுவதே மேல்" என்பது அவனின் காதல் கொள்கை. சொல்லாமலே அழுதான்!

இந்த ஊமை நெஞ்சின் ஓசைகள் அந்த நிலவுக்குக் கேட்டிருக்க வேண்டும்.

ஒருநாள் பூக்கள் பேசின. நிலவு சிரித்தது. அபிராமி வந்தாள். வண்டுக்குப் பச்சைக் கொடி காட்டிய அந்த வட கடல் முத்து, முத்தங்கள் பதித்தாள். காதல் ஆரம்பம்..... "போட்டு வைத்த காதல் திட்டம் ஓ.கே கண்மணி" அவன் டூயட் பாடினான்.

எத்தனை காலம்தான் டூயட் பாடுவது?

வண்டுகள் சட்ட ரீதியாகக் கலக்க விரும்பின, கல்யாணம் செய்தன.

தடைகள் விடைகொடுக்க, சந்தோஷம் சரித்திரம் படைத்தது. காமன் இவர்களிடம் பாடம் கற்றான்! ரதி பதவி நீக்கம் செய்யப்பட்டாள்!

அதிக மகிழ்ச்சியும், மிதமிஞ்சிய சந்தோஷமும் நிலைப்பதில்லை என்பதைப் போல் எதிர்பாராத ஒரு விபத்தில் அந்த நிலவு தேய்ந்தது, மகிழ்ச்சி ஓய்ந்தது.

செல்வியின் பிரிவால் துவண்டு போன ரகுராமன் மனதிற்குள் "அபிராமிக்கு" கோயில் கட்டினான். தனிமை வாட்டியது.

முத்துக்குளித்த காலங்களில் முத்து முத்தாய், அவனின் விழிகளுக்குள் சேர்த்து வைத்த கவிதைகள் இப்போது கை கொடுத்தன.....

"மௌனத்தில் விளையாடும் மனசாட்சியே, ஆயிரம் நினைவாகி, ஆயிரம் கனவாகி, காரியம் தவறானால் கண்களில் நீராகி...." சிரித்தான்.

"ரகு".....கேள்விப்பட்டேன்....ரகு, நாங்களும் எண்ணைக்காவது ஒரு நாள் போகப் போறவங்கதான்.... மனசைத் தேற்றிக்கோ..." சொன்னவன்,

## சின்னக் கதை

"என்னடா இது, வெள்ளை வேட்டி சட்டை?"

"செல்வி போனதுக்கப்புறம் இதைக் கட்டுறதில எனக்கொரு திருப்தி." ரகு சொன்னதும் சிவா கேலியாய் சிரித்தான்.

"இவ்வளவு காலமும் கோட் சூட் போட்டு வேலைக்குப் போனவன், திடீரென்று வெள்ளை ,வேட்டி சட்டையோட ஆபிசுக்குப் போறியாமே? உனக்கென்னடா பைத்தியமா பிடிச்சிருக்கு?

"நீ வெள்ளை வேட்டி, சட்டை உடுக்கிறதால யாருக்கு என்ன நன்மையிருக்கு? அப்பிடியும் இல்லாட்டி நீ வெள்ளை உடுக்கிறதால செத்துப் போன ஒன்னோட செல்வி திரும்பி வரவா போறாள்?" கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பினான் ரகுராமன். அவன் கண்களுக்குள் நீர்த்திரைகள்.

"சிவா...."

"என்ன?"

"சிலவேளை நான் செத்துப் போய், என்னோட செல்வி இதே மாதிரி வெள்ளைச் சேலை உடுத்திருந்தா நீ இப்பிடிச் சொல்லுவியா?" ரகுராமன் கேட்டதும் வாயடைத்துப் போனான் சிவா.

ரகுராமன் அதற்கும் மேல் விபரிக்க முடியாமல் விம்மி அழ ஆரம்பிக்கிறான். மீண்டும் அவள் நினைவு.....!

(யாவும் கற்பனையே)

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# ஏமாற்றம்

-மீராவோடை எல்.ரி.ஏ. ஸஜ்ஜாத்-

காறாத்தல் தேத்தண்ணிக் கடையில் உட்கார்ந்து டீ குடித்துக் கொண்டு, லொத்தர் சீட்டு முடிவுகளை அன்றைய தினசரிப் பேப்பரில் பார்த்துக் கொண்டிருந்தேன்.



"அதுதான் பெரிய பிஸ்னெஸ் மென்னாகிட்டிங்களே..... இருந்த இடத்திலே இருந்து ஆயிரமாயிரமா சம்பாதிக்கலாமே... அப்புறம் எதுக்குத்தான் வேலையில்லாம டிக்கட் வாங்கிறீங்களோ" சொல்லியபடியே வந்தான் எனது தோழன் உமறு.

"உம் டிக்கட் விழுந்தா வாங்கிக்க வலிக்குமாடா, டோ நீ ஒருத்தன்."

அப்போது எனது பக்கத்து வீட்டுக்காரன் அனிவாட மகன் ஓடி வந்தான்.

"முதலாளி... வாப்பா பேப்பர வாங்கிட்டு வரச் சொன்னாரு... டிக்கட் முடிவு பார்க்கணுமாம்."

"பேப்பர் தரமுடியாது.... வேணும்னா டிக்கட்ட வாங்கிட்டு வா... விழுந்திருக் காண்டு பார்த்துச் சொல்றன்."

அவன் ஓட்டமாக வீட்டுக்குப் போய் டிக்கட்டை எடுத்து வந்தான்.

வாங்கிப் பார்த்தேன்.

அவன் தந்த டிக்கட்டுக்கு ரூபாய் பத்தாயிரம் விழுந்திருந்தது.

"இந்தா தம்பி.... அந்த வெத்திலைக் கடைக்குப்போய் எனக்கு ரெண்டு ரூவாய்க்கு வெத்திலை, பாக்குப் போயிலை வாங்கிட்டு வா...."

அவனிடம் காசைக் கொடுத்தனுப்பி விட்டு அவன் தந்த டிக்கட்டை மறைத்து வைத்துக் கொண்டேன்.

அவன் வெத்திலை பாக்குப் புகையிலையுடன் திரும்பி வந்த போது அவன் கையில் வேறு ஒரு டிக்கட்டைக் கொடுத்து, இந்தா.....பரிசு எதுவும் விழல்ல....போய் வாப்பாகிட்ட சொல்லு."

## குட்டிக் கதைகள்

என்று கூறி அனுப்பி வைத்தேன்.

மறுநாள்.

அவசரமாக வெளியே போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.

"முதலாளி ஒரு நிமிசம்."

பரபரப்பாக படி இறங்கி வந்தான் அனிவா. எந்த வித சலனமும் காட்டாமல் நின்றிருந்தேன் நான்.

"முதலாளி...நேத்து என்ற மகன்கிட்ட டிக்கட்ட கொடுத்து அனுப்பி உங்களை ரிசல்ட் பார்க்கச் சொல்லி இருந்தேனே"... மூச்சு வாங்கச் சொன்னான் அவன்.

"ஓம்"

எங்கே கண்டு பிடித்து விட்டானோ என்று திக்திக் என்றது எனக்கு.

"பரிசு விழல்ல எண்டு நீங்க டிக்கட்ட திருப்பி அனுப்பிட்டிங்க... சரி எதுக்கும் இன்னொரு தரம் பார்ப்போம் என்டு டிக்கட் வாங்கின கடையில கொடுத்துப் பார்த்தேன். அந்த டிக்கட்டுக்கு பெஸ்ட் ப்ரைஸ் அஞ்சு லெச்சம் விழுந்திருக்கு முதலாளி." பட படவென்று அவன் பரவசமாகச் சொல்லிக் கொண்டே போக....

மயக்கமானேன் நான்,

அது நான் மாற்றிக் கொடுத்து அனுப்பிய டிக்கட்டுதான்.

(யாவும் கற்பனை)

# அன்புள்ள அம்மா

-ஷர்மிளா இஸ்மாயில்-

எனக்கு என் அம்மா மேல் மகா கோபம் வந்தது. பஸ்ஸில் அடித்துப் பிடித்து ஏறி அரைமணி நேரம் நின்று நசுங்கி, நெருங்கி தள்ளாடியபடி வீட்டுக்கு வந்தால் கொஞ்ச நேரம் 'ரெஸ்ட்' எடுக்க விடமாட்டேன் என்கிறாளே!

அம்மாவின் அருமை புத்திரன் லீவில் வீட்டுக்கு வருகிறானாம். (அண்ணா என்றாலும் 'னா' போட்டு தான் பழக்கம்) ஹோட்டல் சாப்பாடு தின்று மட்டையான அவன் வாய்க்கு ருசியாக அவன் இருக்கப் போகும் ஒரு கிழமைக்காவது சமைத்துக் கொடுத்துவிட வேண்டும் எனப் பரபரத்தாள்.

வகை வகையாய் சாப்பாட்டு வகைகள் செய்து தலையைக் கோதியபடியே அருமை மகன் சாப்பிடுவதை அன்பொழுக கவனிப்பாள். அத்தனை வேலைகளுக்கும் என் உதவி அவசியம் தேவைப் படும். அதை வெட்டு, இதை இடித்துத்தா, பிசைந்து எடு, தட்டிப் போடு என ஓயாமல் உத்தரவிட்டபடி அம்மாவும் பம்பரமாய் சுழல்வாள். எனக்கும் தலை சுழலும்.

நானும் வேலைக்குத்தானே போய் வருகிறேன். இவனுக்கு மட்டும் என்ன



இப்படி ஒரு விஷேச கவனிப்பு? ஆண் பிள்ளை என்பதால் தான் இத்தனை கொட்டமும்! வரவர மனசுக்குள் ஒரு வித எரிச்சல் எட்டிப் பார்க்கும். இன்னும் வாய் பேசாது அம்மாவின் உத்தரவுப்படி பணியாற்றி விட்டாச்சு.

இரவு படுக்கையில் 12.30. காலையில் 6.00க்கு எழுந்து மௌனமாய் வேலைக்குப் போனேன். மனசுக்குள் ஒரு இரகசிய சபதம். இன்று சாப்பிடவே கூடாது!

லஞ்ச் பக்கட்டை வேண்டுமென்றே மறந்து போய்(?) கிச்சன் டேபிளிலேயே கிடக்க விட்டு விட்டுப் போனேன்.

மாலையில் வீடு வரவே, அண்ணா வந்திருந்தார்(ன்). ஓரிரு வார்த்தைகளில் என் உரையாடல். இன்னும் கோபம் இருந்தது. "ஏன், லஞ்ச் பக்கட்ட மறந்திட்டு போய்ட்டியே, ஏதாவது வாங்கி சாப்பிட்டியா?" அம்மா. "சாப்பாடு எதுக்கு? பசிக்கல" இது நான். காரண மில்லாத கோபம். பேசாமல் கட்டிலில் ஏறி நீட்டி நிமிர்ந்து படுத்தாயிற்று.

"சாப்பிட வரலியா?" அம்மா. "வேணாம்" நான் கண்ணை மூடிக் கொண்டேன்.

"ரொம்ப டயர்ட்டா இருக்கா? எங்க எழுந்திரு. நான் சோறு ஊட்டி விடறேன். காலைல இருந்து பட்டினி. உடம்பு என்னாகும்?" கட்டிலின் பக்கத்தில் அம்மா! வார்த்தைகள் வரமுன்பு வாயினுள் 'ஓர் தயக்கம்.

"20 வயசு ஆகுது. இன்னும் சோறு ஊட்டி விடுங்க உங்க செல்லக் குஞ்சுக் குழந்தைக்கு."– சத்தமாய் முன் ஹோலில் அண்ணாவின் குரல் ஒலித்துக் கொண்டது.

# சின்னச் சின்ன ஆசைகள்....


-சேத்தூர் எஸ்.பி. ஹீரா-[illegible] நகர்-

அலுவலகமொன்றில் பணிபுரியும் சிவாவும் ரகுவும் விடுதி ஒன்றில் தனியறை எடுத்துத் தங்கியிருக்கின்றனர். ரகு யாரையோ சந்திப்பதற்குச் சென்று விட்டான். சிவா கட்டிலில் சாய்ந்தவாறு தனது டயறியைப் புரட்டினான். அதனுள் இருந்து திவ்யாவின் புகைப்படம் விழ சிவா அதை எடுத்து "ஹாய் திவ்யா" என்று முறுவலிக்கிறான். அது திவ்யாவையறியாமல் அவளிடமிருந்து சிவா எப்படியோ பெற்றுக் கொண்ட புகைப்படம். விரல் விட்டு எண்ணக்கூடிய லட்சாதிபதி ஒருவரின் மகளான திவ்யா சிவாவை மட்டுமே வட்டமடிக்கும் பருவச் சிட்டு. சிவா அவளை விரும்பினாலும் அவள் கேட்கும் போதெல்லாம் தன் ஏழ்மையால் வரும் தாழ்வு மனப்பான்மையினால் பேசாமல் இருப்பான். ஆனால் திவ்யாவோ சிவாவை விடுவதாக இல்லை. அவள் துரத்தித் துரத்திக் காதலித்தாலும் சிவா அவளோடு சும்மா கதைப்பதோடு சரி.

அவளைச் சீண்டி அழ வைப்பதில் சிவாவுக்கு கொள்ளை ஆசை. அதிலும் கோபத்தால் திவ்யாவின் முகம் சிவப்பதையும், உதடுகள் துடிப்பதையும், கையில் கிடைப்பதை சிவா மீது எறிவதையும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் சின்னச் சின்ன ஆசைகள் இன்னும் பல. "சிவா...சிவா" செல்லமாக அழைத்தவாறு வந்த திவ்யாவைக் கண்டதும் "ஹாய் அணுகுண்டு" என்ற சிவா திவ்யா அமர கதிரையைக் காட்டினான். முறைத்தவள் "நான் ஒண்ணும் இருந்து அலட்ட வரவில்லை. உங்ககிட்ட கடைசியா கேட்கிறேன். என் மேல உங்களுக்கு விருப்பமில்லையா? சிவா... ப்ளீஸ்... சொல்லுங்க" என்றாள் திவ்யா. அவளைக் குறும்பாகப் பார்த்த சிவா "ஆமா விருப்பமில்லை" என்றான். "ஏன்" என்றவாறு திவ்யா அவனைப் பார்க்க "உங்க தகுதிக்கு நான்......வேண்டாம் திவ்யா" அவன் கொஞ்சம் கடுமையாகவே சொன்னான்.

அவள் அழத் தொடங்கினாள். சிவாவோ அதை ரசித்தவனாய் திவ்யாவுக்கு கோபம் வருவதற்காக "ஸாரி திவ்யா நான் உங்க ஃப்ரெண்ட் ஜெயாவைத்தான்....அவன் முடிப்பதற்குள் "யூ....யூ..." என்றவாறு தலையணைகளை எடுத்து சிவா மீது வீசினாள். சிவா அவளைப் பார்த்து உதடுகளை மடித்து அழகாகச் சிரித்தான். திவ்யாவுக்குப் பற்றியது. அவள் நிற்கும் நிலையையும், கன்னங்கள் சிவப்பதையும் சிவா ரசித்தான். அழுகையினூடே "நான் இனி இந்தப் பக்கம் வரமாட்டேன். நீங்க ஜெயாவோட சந்தோஷமா வாழுங்க. நான் இனி உங்களை பார்க்கவே மாட்டேன்" என்ற திவ்யா [illegible] விட்டு வெளியேறினாள்.

அவள் இவ்வாறு கூறிச் சென்றாலும் சிவாவைப் பார்க்காது இருக்கவே மாட்டாள். திவ்யாவின் புகைப்படத்தை எடுத்த சிவா "ஸாரி டியர்....உன்னை[illegible] அழவைக்கும் போது நீ எவ்வளவு [illegible] தெரி[illegible] கன்னம் மாதுளம் பூவாய் சிவப்ப[illegible] ஆசையாய் இருக்கும்..... நீ உதடுகளை கோபம் வரும் போது அழுத்திக் கடிப்பாயே அதையும் பார்க்க எவ்வளவு ஆசை தெரியுமா? என்றவன் "சின்னச் சின்ன ஆசை" என்ற பாடலை முணு முணுத்தபடி "ஐ லவ் யூ திவ்யா" என்றான்.



அடுத்த நாள் காலை பதறியவாறு வந்த சிவாவின் நண்பன் ரகு திணறியபடி "சிவா...சிவா திவ்யா தற்கொலை..." ரகு முடிப்பதற்குள் "நோ" என கத்திய சிவா திவ்யாவின் வீட்டை நோக்கி ஓடினான். குத்து விளக்குகள் எரிய கூடத்தின் நடுவிலே திவ்யா கிடத்தப்பட்டிருந்தாள். கண்கள் கண்ணீர் சொரிய திவ்யாவை வெறித்துப் பார்த்த சிவா வெளியேறினான். போன வேகத்திலேயே திரும்பிய சிவா திவ்யாவை நெருங்கினான். இமை வெட்டாது எல்லோரும் சிவாவையே பார்த்துக் கொண்டிருந்தனர். முழந்தாளில் விழுந்தவன் அழுதவாறே திவ்யாவின் முகத்தைப் பார்த்து "திவ்யா ஐ லவ் யூ....... ஐ லவ் யூ திவ்யா" குமுறியவாறு திவ்யா மீது சரிந்த சிவா திரும்ப எழும்பவே இல்லை. அவனது கையிலிருந்த நஞ்சுக் குப்பி நழுவி தரையில் உருண்டது. அவன் திவ்யாவுடன் சங்கமமாகி விட்டான். அங்கு இருந்தவர்களுக்கு புரிந்ததோ தெரியவில்லை, அந்த வீட்டில் இன்னும் பெரிதாக ஒலித்தன அழுகைக் குரல்கள்!

(கற்பனையே)

# தொலைதூர வெளிச்சம்

ஜெயந்தி-பம்பலப்பிட்டி



களைத்துப் போன மனது சஞ்சலப்பட்டுக் கொள்கிறது. இனம் புரியாத துயரம் திக்கறியாது சகலரிலும், சகல நேரத்திலும், சகலத்திலும் சினப்படுகிறது. எனது 'நான்' தொலைந்து போவதே நிதர்சனமென்பதில் பயமெழுகிறது. இலக்கறியாத இவ் வாழ்வு ஏனென்றே புரியவில்லை.

**இந்தப்**
**பத்ரிகா யாகத்தில்**
**என்-**
**அக்னிப் பிரவேசம்**
**சுயபலம் கொணர்கிறது.......**

எல்லாம் என்னால் அறிய முடியாவிடினும் உங்களை உணர முடிவதே உற்சாகம் தருகிறது. யாரோவோர் ராஜேஸாய், பாலுவாய், பிரகாஷாய்.... கற்பனாவுலகமே ரம்யமானது. இக்கணத்தில் தோன்றுவதெல்லாம் முகமறியாத நண்பனின் விரல் நுனி பற்றிப் பரஸ்பர ஸ்நேகமுணர்த்த வேண்டுமென்பதே! இது மடலல்ல. என் பிரிய ஸ்நேகனுக்கு ஆத்ம சுத்தம் நேச விசுவாச மையில் எழுதும் முன்னுரை.

'காலம் மாறும்' என்கின்ற எதிர்பார்ப்பே இங்கே பலரது விடிகாலைக் கனவாயிற்று. இதனை மெய்ப்பிக்கப் போகும் அந்தச் சூரிய தேவன் யாரென்பதே நெஞ்சைத் தினமும் குடைகின்ற கேள்வி. ஏக்கங்கள் அடிமைத்தனம் வளர்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை. எங்கள் சுயபலம் இங்கே சுயநலமானது திணிக்கப்பட்ட விஷயமே தவிர தற்செயலானதல்ல. எதிர்காலம் ஒரு சற்புத்திர வருகையால் தீர்மானிக்கப்படுவதே சாத்தியமானது.

காதலை எதிர்ப்பவன் கனவுகளை எரிக்க வேண்டும். இதுதான் காலத்தின் ஞாயம். வாழ்வை யாசிப்பவன் வீழ்ச்சியை மறக்க வேண்டும். தொலை தூரத்தில் தென்படுகின்ற வெளிச்சமே இப்போதைக்கு என் போன்றவர்களின் கனவுகளின் சரணாலயம்.......!!!

## "தோள் கொடு தோழா"....

"ஆயுத அரக்கனின்
கோர வெறியாட்டம்
மடிந்து விழுகிறது
மானிடப் பூக்கள்.
• • •
பிறந்த மண்ணில்
உறங்க நிலமில்லை.
யார் கதி என்று
யாசித்தோம்..
"அகதி" என்று
அன்னியமாக்கப்பட்டோம்!
• • •
இங்குள்ள முகாம்களில் எல்லாம்
முகாரிதான் விடியலின் ராகம்.
புன்னகை மறந்தவர்
முகங்களில் இருந்து
பூபாளமா புறப்படும்?
• • •
மனித நேயம்
மரணம் கண்டது
இனிய தேசம்
இருண்டு போனது.
இங்கு
உயிர்ப்பலி ஒருசிலர்
உரிமையானது.
அதனால்
விடியலோ சிவப்பானது!
• • •
அன்று-
வில்லும் அம்பும்
விலங்கு தேடி ஆடின
வேட்டை!
யார் கொடுத்த ஆயுதத்தால்
இன்று- இந்த
மனித வேட்டை?
• • •
விஞ்ஞானத்தின்
விருத்தியை,
வியக்கத்தான் வேண்டும்
அதற்கு,
மனிதாபிமானம் ஏன்
மரணிக்க வேண்டும்?
• • •
தொடரும் இழப்பும்
இந்த இடரும்
இன்னும் வேண்டுமா?

மறவாதே தோழா..
மரணத்திற்கு விடைகொடுப்போம்!
மறுபடியும்-
மனித நேயத்திற்கு
வரவு சொல்வோம்!
• • •
தோள் கொடு
தோழனே - நீ இன்னும்
இவ்வாழ்வில் தோற்கவில்லை
தோட்டாக்களைத்
தோற்கடிப்போம்!

உறங்கியிருப்பதால்
ஆறாது
ஊமைக்காயம்

உதடுகள் வேண்டாம்
உயிருள்ள உன்
கவிதையால் பேசு!

துப்பாக்கி வேண்டாம்
துடிக்கும் உன்
பேனாமுனையே போதும்!

தோள் கொடு
தோழனே
யாரும் இவ்வாழ்வில்
தோற்கவில்லை!!"

-திருமதி.சாந்தினி சந்திரன்-


## புதிய வாகனம்

எமனேறும்
வாகனம்
எருமை-
எருமையது
பழமையென்று
நினைத்தானோ
அவனும்-
எனவேதான்
மாற்றினானோ
தன் ரதத்தை
"எயிட்ஸ்" என்று.

-மூதூர் ஆ. கமல்ராஜ்-







## மனித வேட்டை

என்
தேசத்தைப் பார்க்கிறேன்
துப்பாக்கித் தேரில்
உலா வந்து கொண்டிருக்கிறது!
அதில்
மனிதமில்லா
மனிதர்கள்
பவனி
வந்து கொண்டிருக்கிறார்கள்.
அங்கே,
இனவேற்றுமைகள்
ஒரு பாடத்திட்டமாக
புகுத்தப்பட்டுள்ளது.
அதனால்,
விதியின்
'விசாக்கள்'
வீதியில்
தூவப்பட்டதனால்
நாளைய
மனித வேட்டைக்கு
நாங்கள்
தயாராக வேண்டியுள்ளது!

-ஆரையம்பதி த. மலர்ச்செல்வன்-

## சிரிக்காத மோனாலிசாவுக்கு

என் அன்பு
சிரிக்காத...
மோனாலிசாவுக்கு!
×××
கண்மணி!
எனைப் பார்த்து-
முறைக்கும்போது..
கொஞ்சம்-
குறைத்து முறை!
பாவம்-
எனக்கு மட்டுமா?
அந்த காய்ச்சலுக்கும்-
காய்ச்சல்
பிடித்துவிடப்போகிறது!
×××
ரூபசுந்தரியே!
சிரிப்பு-
எப்போது உன்னோடு...
ஒப்பந்தம் செய்தது?!
உனக்கும் - அதற்கும்
எந்தவித சம்பந்தமும்..
இல்லை என்று?!
×××
அட! புன்னகையும் கூட....
உந்தனுக்கு என்ன-
லஞ்சம் கொடுத்ததோ?!
நீ-
புன்னகைக்கவே..
கூடாதென்று?!
×××
பார்த்து!
கண்மணி பார்த்து!!..
இப்படி முறைத்தால்-
உனக்கு - மேலும்
எழில் சேர்க்கும்..
உன் தங்கமூக்குத்தி-
சும்மாவே..
கழன்று போய்விடப்
போகிறது!
×××
உன்
கரட் நிற
எழில் முகத்திற்கு!
நீ-
எக்கச் சக்கமாய்..
எனைப் பார்த்து-
முறைக்கும் போது!..
பீட்ரூட் ஆக-
சிவப்பேறிப் போகும்..
உந்தன் - அழகுமிகு
கவர்சிக் கண்களிரண்டும்
அட!.. ஆகா!!..
அந்தக் கோபத்திலும்
என்ன அழகு?!
×××
நீயும்-
கேள்விப்பட்டிருப்பாய்!..
புகைத்தல்-
உடல் நலத்திற்கு..
கேடாகலாம் என்று!
அதுபோல கண்மணி!
முறைத்தலும்-
உடல் நலத்திற்கு-
கேடாகலாம்!..
ஆகவே கண்மணி!
கொஞ்சம் சிரி!
நான்-
உன் முன்னம்
இல்லாத சமயம்
பார்த்து ச(சி)ரி

-கோட்டை முனை வாஹிட் ஏ. குத்தூஸ்-

# தேன் கிண்ணம்

## தின வேள்விகள்

தேசம் பலிபீடமாய்
வேள்விகளை
தினம் நிகழ்த்துவதான
வரலாறு..
××
மானிடமும்
மரணத்திற்குப் பயந்ததான
ஒவ்வொரு
புலருதல்களும்
மறைதல்களும்
××
நெருக்கப்பட்டுப் போவது
தேவ பீஷ்ம மையங்களும் தான்!
××
இனிவரும் காலம்
எப்படி அமையப் போகிறது?
உலகத்தைச் சுற்றி
வளையமான கேள்வி.
××
ஒவ்வொரு நாளும்
சாகுதல் வேண்டும்;
உலகம் இயம்புவதான
வாய்ப்பாடு.
××
இனி
எல்லாப் பொழுதுகளையும்
பகலாக்க நினைக்கும்
விஞ்ஞான முயற்சிக்கு
உயிர்ப்பு கொடுக்கலாம்.
எல்லாம் வெளிச்சத்தில்
என்பதாகி விடுவதால்
××
ஓசோன் படைக்கும்
ஒரு ஆறுதல்;
பூமியில் புகைகளால்க்கூட
அது அடைபட்டுப் போக
முடியும்.
××
தீ விலகிய
உஷ்ணம் தணிந்து
ஆயுதாதிகள் தொலைந்து
ஒரே ஒரு மனிதன் தானும்
எஞ்சும் வரைக்கும்
தினமும்
வேள்விகளில்த் தான்
கண் விழிக்க
வேண்டுமென்பது
சர்வதேசத்திற்கான தற்கால
விதி....?...?

-அக்குறணை ஹரீரா அனஸ்-

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மார்பைக் கிழித்த மரக்கொம்பு!

## கழுத்துக்கு வந்தது கொல்லாமல் போனது!!

இப்படியும் நடக்குமா? என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சம்பவங்கள் உலகில் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

சில நேரங்களில் அது விபத்து என்று அழைக்கப்படும். வேறு சில சமயங்களில் அதுவே வியப்பான உலக சாதனை யாகிவிடும்.

இந்தப் படத்தைப் பாருங்கள். மார்பு வழியாகப் பாய்ந்த மரக்கிளை முதுகு வழியாக வெளியே வந்து விட்டது.

ஆனாலும் ஆள் தப்பி விட்டார்.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர் உல்ரிச் ஷால்டு.

விடுமுறையைக் கழிக்க ஜெர்மனியக் கிராமம் ஒன்றுக்கு சென்றார்.

உல்லாச நேரத்தில் அவரோடு கூட வந்தது அவரது காதலி. பிறகென்ன, உல்லாசம் சந்தோச உச்சிவரை செல்லும் அல்லவோ!

பறந்தது மோட்டார் சைக்கிள். முன்னால் சென்று கொண்டிருந்த வாகனம் திடீரென்று பிரேக் போட்டு நின்றது.

எதிர்பாராத நிறுத்தம் என்பதால் மோட்டார் சைக்கிள் அந்த வாகனத்தோடு மோதியது.

காதலனும்- காதலியும் தூக்கி எறியப்பட்டனர்.

காதலன் உல்ரிச் படுகூரான மரக்கிளை ஒன்றின் மீது போய் விழுந்தார்.

அந்தக் கிளை அவர் மார்பை துளைத்து முதுகு வழியாக வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

வாகன சாரதி பதறினார். உல்ரிச்சை வாகனத்தில் ஏற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

டாக்டர்கள் சத்திரசிகிச்சை செய்து மரக் கிளையை அகற்றினார். துளையை அடைத்தார்.

நெஞ்சில் பாய்ந்த மரக்கிளை அவரது இதயத்தையோ அல்லது முதுகுத் தண்டையோ தொடவில்லை.


அதுதான் அதிஷ்டம். அதுதான் உயிர் பிழைக்க முடிந்தது.



இப்போது சற்றுக் கழுத்துவலி இருப்பதாக உல்ரிச் கூறுகிறார்.

எப்படியோ இதயத்துக்கு வந்தது விலகிப் போனதால் உயிர் பிழைத்தது.

## சிறுவர்களும் சீறுகிறார்கள்!




பலஸ்தீன-இஸ்ரேல் சமாதான முயற்சிகளை பலஸ்தீன குழுக்கள் சில எதிர்க்கின்றன.

யாசீர் அரபாத்தின் படங்கள் எரிக்கப்படுகின்றன.

பழமைவாதிகளும், இளைஞர்களும் மட்டுமல்ல சிறுவர்களும் அரபாத் மீது சீறுகிறார்கள்.

பலஸ்தீன அகதி முகாம் ஒன்றின் சுவர்களில் 'அரபாத்துக்கு மரணம்' என்ற வாசகத்தை ஒரு சிறுவன் வரைகிறான்.

விளையாட்டுத் துப்பாக்கியை சுட்டுக்காட்டி மற்றொரு சிறுவன் மனதுக்குள் மரணதண்டனையை நிறைவேற்றிப் பார்க்கிறான்.

ஆக, சமாதானம் என்பது சுலபமான பாதையல்ல.

நகர ரவுண்டப்
அடுத்த வாரம்
காரணம்? ஒற்றன் லீவு!

திக்-திக்
திக்

தமிழகத்தின் திகில் கதை மன்னர்
முரசுக்காக எழுதும்
புதியதொடர்
விரைவில் ஆரம்பம்!
எழுதப்போவது யார்?



ஆரம்பமாகிறது புதிய பகுதி
மாலை வெய்யில்
தமிழக பிரபல கவிஞர் நா.காமராசன்
முரசில் வாரந்தோறும் எழுதுகிறார்.

# அந்தப்புரம் சென்றதாக அழகி மீது குற்றம்
# புறூணை சுல்தான்களால் பிலிப்பைன்சில் குழப்பம்!

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்று கேட்கக் கூடிய நாடாக இல்லாமல் இருக்கலாம்.

ஆனால் எண்ணை வளம் இருக்கிறது. அது செல்வம் குவிக்கிறது.

தினசரி ஒரு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் பீப்பாய் எண்ணை பெறப்படுகிறது.

அதுதான் புறூணை. அந்த நாட்டின் சுல்தர்ன்களை தெரியாதவர்கள் உலகில் கிடையாது என்று சொல்லிவிடலாம்.

உலக நாடுகளுக்கே கடன் வழங்கும் கோடீஸ்வரர்கள்.

அந்த சுல்தான்களுக்கு உலகின் பிரதான நகரங்களில் உல்லாச மாளிகைகள் இருக்கின்றன.

சுல்தான்களில் ஒருவரான ஹஸ்ஸனஸ் பொல்கியா என்பவருக்கு சொந்தமான மாளிகைகளில் ஒன்றுதான் 'இஸ்தானா நூறுல் இமான்'!

அந்த மாளிகையில் உள்ள அறைகளின் எண்ணிக்கையை கேட்டால் தலை சுற்றும்.

ஆயிரத்து எழுநூற்றி எண்பத்தெட்டு.

அந்த சுல்தானின் வயது 47.

புறூணை நாட்டின் மன்னர் அவர்தான். உலகின் மிகப் பெரிய பணக்காரரும் அவர்தான்.

அந்த சுல்தானின் மாளிகையில் அவ்வப்போது விருந்து வைபவங்கள் களைகட்டும்.

உலகப் பிரமுகர்கள் வந்து கலந்து கொள்வார்கள்.

அந்தப் பிரமுகர்களுக்கு ஒரு சந்தோசம் வேண்டாமா?

அதற்காகவே உலகப் பேரழகிகள் அழைக்கப்படுவார்கள்.

தமிழக நடிகைகள் கூட தருவிக்கப்படுவதுண்டு.

எனினும் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் அழகு ராணிகளுக்கு வரவேற்பு அதிகம்.

பிரமுகர்களை திருப்திப்படுத்தும் கச்சிதமான வித்தைகளைக் கற்றவர் களுக்கு நாடு திரும்பும் போது கை நிறையவும், பை நிறையவும் பொன், பொருள் கொடுத்து அனுப்புவார்கள்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் பேரழகி நடிகை நானெட்டி மெட் வேடுக்கு புறூணே வருமாறு அழைப்புக் கிடைத்தது.

இரண்டு வாரம் வந்து தங்கினால் போதும். 50 ஆயிரம் டொலர் தரப்படும் என்று கூறப்பட்டது.

அழைப்பை ஏற்க அந்த நடிகை மறுத்து விட்டார்.

எனினும் பிலிப்பைன்ஸ் நாட்டில் அண்மையில் ஒரு சர்ச்சை உருவானது.

பிலிப்பைன்ஸ் நாட்டு அழகு ராணிப் போட்டியில் வெற்றி பெற்று, உலக அழகு ராணிப் போட்டியில் பங்கு பெறக் காத்திருந்தவர் றூஃபா குட்டியரேஸ்.

அந்த அழகி புறூணை நாட்டு அந்தப்புரத்தை அலங்கரித்து விட்டு வந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் செனட் சபையில் ஒரு பெண் செனட்டர் ஒருவரால் பிரேரணையும் முன்வைக்கப் பட்டுள்ளது.



பிலிப்பைன்ஸ் அழகிகள், நடிகைகள், மொடல் அழகிகள், பாடகிகள் ஆகியோர் புறூணை சென்று பிரபல பிரமுகர்களுக்கு விருந்தாகி வருவதாக பிரேரணை கூறுகிறது.

வெறும் குற்றச்சாட்டு மட்டுமல்ல விருந்து கொடுக்க பெற்ற தொகையும் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

அழகுராணி றூஃபா குட்டிய ரேசிக்கு வயது 19.

தான் குற்றமற்றவர் என்று குட்டியரேசி கூறுகிறார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் உலக அழகுராணிப் போட்டியில் வெற்றி பெறும் வாய்ப்பை பறிக்கும் சதி என்று புலம்புகிறார்.

பிலிப்பைன்ஸ் செய்தித்தாள் களுக்கு நல்ல தீனி. இப்போது சுல்தான்களின் தினமும் அந்தப்புரம் சென்று வந்த அழகிகள் பற்றி செய்திகள் வருகின்றன.

வாதப் பிரதிவாதங்கள் சூடு பிடிக்கின்றன.

அப்பாவிகளும் பாதிக்கப்படக் கூடும்.

# பெண்ணைப் பேயாக்கும் பொறாமை

சுதன்மன், சுதேகை இருவரும் கருத்தொருமித்த தம்பதிகள். சிவபக்தர்கள் பண்பில் சிறந்தவர்கள். பிள்ளையில்லாக் குறையில் வாடுபவர்கள். ஆணான சுதன்மா தன் மனவருத்தத்தை அவ்வளவாகக் காட்டிக் கொள்ளா விட்டாலும் சுதேகையால் அப்படி இருக்க முடியவில்லை. பிறர் முன்னிலையில், பிள்ளையில்லா மலடி என்று தலை குனிய வேண்டிய தன் அவலத்தை, அவளால் பொறுக்க முடியவில்லை. அதன் பலன், பிள்ளைப் பேற்றிற்காக, கணவனை மறுமணம் செய்து கொள்ள வேண்டும், என்று வற்புறுத்தத் தொடங்கினாள்.



சுதன்மன் இணங்கவில்லை. ஏதோ ஒரு வேகத்தில் விவேகத்தை இழந்து செய்ய நினைக்கும் இந்தச் செயலால் வாழ்வில் நிம்மதி பறிபோகும் என்று எடுத்துக் கூறினான். தன்னுடைய நற்குணத்தில் சுதேகைக்குத் திட நம்பிக்கை. 'வந்தவளோடு இணங்கி வாழ்வேன்,' வாழ்வில் நிம்மதி நிலவ நான் உத்தரவாதம்' என்று உறுதியளித்தாள். பெண்ணின் பிடிவாதத்தின் முன் அந்த ஆணின் அறிவு அடிபணிந்து போனது.

இரண்டாவது மனைவியாக குசுமை வந்தாள். அவளும் நல்லவள். சிறந்த சிவ பக்தை. தினமும் மண்ணால் லிங்கம் செய்து, பூஜை செய்வாள். பின் அந்த லிங்கத்தை அருகிலுள்ள தடாக நீரில் சேர்த்து விடுவாள்.

மூத்த மனைவியும், இளைய மனைவியும் உடன் பிறந்தவர் போன்று இணங்கி வாழ்வதில் சுதன்மா நிம்மதி அடைந்தான்.

இளைய மனைவி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். அதன் பிறகு தான் சுதேகையின் வெள்ளை மனதில் மெல்ல மெல்ல கரும்புகை படியலாயிற்று. தான் ஒதுக்கப்படுவதாகவும் இளையவளுக்கு கணவனிடமும், உறவினரிடமும் முக்கியத்துவம் அதிகரித்து வருவதாகவும் எண்ணி, மனம் மருகி, உருகி உடல் இளைத்தாள். இளையவளின் அன்பான உபசரணை கூடக் கசந்தது.

சுதேகையின் பொறாமையும் வெறுப்பும் குழந்தையிடம் விசுவரூபமெடுத்துப் பாய்ந்தது. ஒரு நாள் இரவு, பெண்மையையும் தன் தன்மையையும் இழந்து விட்ட சுதேகை, ஒருவருக்கும் தெரியாமல் குழந்தையை வெட்டி எடுத்துக் கொண்டு போய், அருகிலுள்ள தடாக நீரில் எறிந்து விட்டாள். மறுநாள் காலை, குழந்தையைக் காணவில்லை என்று மற்றவரோடு சேர்ந்து தானும் தேடுவது போன்று பாசாங்கு செய்தாள்.

பெற்றவள் பதறினாலும், எல்லாம் ஈசன் சித்தம் என்று எப்போதும் போல பூஜை செய்து நீரில் கரைக்க வேண்டி, லிங்கத்தை எடுத்துக் கொண்டு தடாகக் கரைக்குச் சென்றாள். அவளது கலங்காத பக்திக்கு மெச்சி, சிவபிரான் தோன்றி குழந்தையை உயிர் பெறச் செய்து, அவளிடம் ஒப்படைத்தார். நடந்ததைக் கூறினார்.

பெற்றவளின் திடமான சிவபக்தி அவள் மகனைக் காப்பாற்றிக் கொடுத்து விட்டது. அவளது நல்ல உள்ளம், தன் குழந்தையைக் கொன்ற மூத்தவளை மன்னிக்கக்கூடச் செய்தது.

விலைமதிப்பற்ற வைரமும் நெருப்பிலே வீழ்ந்தால் கரியாகி விடும். தேவதைபோன்ற பெண்ணும் பொறாமையில் வீழ்ந்தால், பேயாகி விடுவாள் என்பதை சிவபுராணத்திலுள்ள இக்கதை உணர்த்துகிறது.

## ஆன்மீகம்

# நல்லொழுக்கங்கள் சில

1. பிறரைக் காணும் போது ஸலாம் கூறல். இதில் மற்றவரை விட நாம் முந்திக் கொள்வது நல்லது. (அஸ்ஸலாமு அலைக்கும் என்பதன் கருத்து - உங்கள் மீது இறைவனின் சாந்தியும் அமைதியும் நிலவுக! என்பதாகும்)
2. மற்றவரை நலன் விசாரிப்பது. நோயாளி ஆயின் அவரை அணுகி நற்செய்தி கூறுவது.
3. சாலையில் செல்லும் போது இடர் பொருட்களை அகற்றி பார்வையை கீழே செலுத்துதல்.
4. அனுமதி பெற்று மற்றவர் வீட்டில் சலாம் கூறி நுழைவது, நம் வீட்டில் நுழைந்தாலும் வாசலில் லேசாக கனைத்து உள்ளே செல்வது.
5. குழந்தைகளின் கைகளை அன்பால் முத்தமிடுவது.
6. அடுத்தவரின் உடமையை அவர் அனுமதி பெற்றே தொடுவது.
7. எப்போதும் புன்சிரிப்போடு இருப்பது.
8. மற்றவரை கெட்ட புனை பெயரில் அழையாதிருப்பது.
9. இயற்கையை (மழை+காற்று) திட்டாமலிருப்பது.
10. அறிவு, தத்துவம், இறையச்சம் உள்ள பாக்களைக் கேட்பது. (காமம், வெறியூட்டும் பாடல்களை விட்டொழிப்பது)
11. நாவு, வயிறு, அபம் ஆகியவற்றை தீங்கிலிருந்து பாதுகாத்தல்; உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதிருத்தல்.
12. தேவையற்றதில் ஈடுபடாமலிருத்தல்.
13. அடுத்தவர் மனம் நோகாமல் சிறு (நல்ல) கதைகளை கூறல். கேட்டல்.
14. தன்னைப் போல பிறரையும் சுற்றத்தார், விருந்தினர் அனைவரையும் மதித்து அவர்களுக்கு வரும் தீங்கைத் தடுத்தல்.
15. ஏழை, அனாதை, வழிப்போக்கன் அனைவரையும் ஆதரித்தல்.
16. பேராசை, அவசரம், தாமதம் இவைகளை விட்டொழித்தல்.
17. வெட்கம், அடக்கத்துடன் நடப்பது.
18. நாம் எதிர்பாராமல் யாருக்கேனும் தீங்கிழைத்து விட்டால் அவரிடம் மன்னிப்புக் கோரி உடனே ஏதாவது நன்மை செய்வது.
19. இறைவன், இறை தூதர், நம்முன்னோர்கள், மற்றும் நல்லவர்களுடன் மிக அன்பாக நடந்து கொள்ளல்.

தொகுப்பு: ருக்ஷான் அமீன்
உடுதெனிய.

# பொய் சொல்லாதீர்கள்

பொய் பேசுவதால் மரண ஆக்கினைக்குக் கூட மனிதன் உள்ளாவான் என்பதை புனித வேதாகமம் காட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் சாட்சி கொடுக்கிறார்கள். அதனைக் கேட்டு, விசுவாசித்தவர்கள் தங்கள் சொத்துக்களையெல்லாம் விற்று அந்தப் பணத்தை அப்போஸ்தலர்களின் பாதத்திலே வைக்கிறார்கள். அவனவனுக்குத் தேவையானது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

அப்போது அனனியா என்ற மனிதனும் அவனது மனைவி சப்பீராளும் தங்கள் நிலத்தினை விற்கிறார்கள். தன் மனைவி அறிய, அந்தப் பணத்தில் ஒரு பங்கை அனனியா வஞ்சித்து, மீதியை அப்போஸ்தலரின் பாதத்தில் வைக்கிறான். அப்போது பேதுரு, "அனனியாவே நிலத்தின் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும் படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையா? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணம் கொண்டதென்ன? நீ மனுஷரிடத்திலே அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்," என்கிறார். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்ட உடனே கீழே விழுந்து மரித்துப் போனான்.

ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்குப் பின்பு, அவனது மனைவி நடந்ததை அறியாது அப்போஸ்தலரிடத்தில் வருகிறாள். பேதுரு அவளை நோக்கி, "நிலத்தை இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்? எனக்குச் சொல்", என்றார் அவள், 'ஆம், இவ்வளவுக்குத்தான்" என்கிறார். மீண்டும் பேதுரு அவளிடத்தில், "கர்த்தருடைய ஆவியைச் சோதிக்கிறதற்கு நீங்கள் ஒரு மனப்பட்டதென்ன? இதோ உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது. அதனைக் கேட்ட மாத்திரத்திலே அவள், பேதுருவின் காலடியில் விழுந்து மரித்துப் போனாள். (அப்போஸ்தலர்:5-10)

ஒரு பொய் இரண்டு பேரை மரண ஆக்கினைக்கு உட்படுத்தி விட்டது.


இயேசுவோடிருந்து, அவரைக் காட்டிக் கொடுத்துப் பொய்ச்சாட்சி பகன்ற யூதாசும் தற்கொலை செய்து மாண்டு போனவன்தான்.

உலக வாழ்வில் இவற்றினைப் பாடமாகக் கொண்டாவது மனிதன் பொய் சொல்லாமலும், பொய்சாட்சி சொல்லாமலும் இருப்பானாக.

## ஸ்போர்ட்ஸ்

# 'உயிருள்ள சிங்கங்கள்' என்பதை நிரூபித்த தென்னாபிரிக்க அணியினர்!

-பிரட்மனபிமானி-



இலங்கையின் தேசியக் கொடியிலேயே சிங்கம் இருக்கக் காணப்படுகின்றது. ஆனால் இலங்கையின் காடுகளில் சிங்கங்கள் உயிர் வாழ்வதில்லை.

தென்னாபிரிக்காவில் சிங்கங்கள் இன்றுங்கூட உயிர்வாழுகின்றன. தென்னாபிரிக்க வனப் பிராந்தியங்கள் பல பெருமளவில் சிங்கங்களைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றன.

எனவே இத்தடவை இலங்கைக்கு சுற்றுப் பயணஞ் செய்து கிரிக்கெட் போட்டிகளை ஆடிய தென்னாபிரிக்கர்கள் டெஸ்ட் பந்தயத் தொடரில் வெற்றி பெற்றதன் மூலம் தாம் உயிருள்ள சிங்கங்கள் என்பதனை நிரூபித்துள்ளார்கள்.

தென்னாபிரிக்கர்களின் இலங்கை விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். தென்னாபிரிக்க சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து இலங்கைக்கு முதல் தடவையாக இத்தடவை விஜயம் செய்திருந்தது.

ஒரு நாள் சர்வதேச பந்தயத் தொடர் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்திருந்தது. ஆனால் டெஸ்ட் பந்தயத் தொடரில் தென்னாபிரிக்கா வென்றிருந்தது.

இலங்கையைப் பொறுத்தவரை வேகப் பந்து வீச்சாளர்கள் எதிர்பார்த்தளவு இத்தடவை பிரகாசிக்கவில்லை. இருந்த போதிலும் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மொரட்டுவையில் நடந்த முதலாவது டெஸ்ட் பந்தயத்திலும், எஸ்.எஸ்.ஸி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் அபாரமாக பந்து வீச்சை மேற் கொண்டு இலங்கை அணிக்கு நல்ல பங்களிப்பைச் செய்திருந்தார்.

இதே வேளை தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சாளர்கள் சிறந்த முறையில் பந்து வீசி தமது அணியின் வெற்றிக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பைச் செய்திருந்தனர்.

தென்னாபிரிக்க பந்து வீச்சாளர்களான ஷுல்ஸ், அலென் டொனால்ட், ஸ்நெல், மெக்மிலென் ஆகியோர் இலங்கை சுற்றுப் பயணத்தின் போது தென்னாபிரிக்க அணி கைப்பற்றிய 45 விக்கெட்டுகளில் 39 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்தனர்.

இது தவிர துடுப்பாட்ட வீரர்களான, ஜொண்டிரோட்ஸ், ஹான்ஸி குரொன்ஜே, டாரில் குலினன் ஆகியோர் நூறு ஓட்டங்களைப் பெற்று துடுப்பாட்டத்தில் திறமையை வெளிப் படுத்தியிருந்தனர்.

தென்னாபிரிக்க வீரர்களில் ஜொன்டி ரோட்ஸின் ஆட்டமே குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஏனெனில் இவர் துடுப்பாட்டத்தில் திறமையாக ஆடியிருந்த போதிலும், பந்து தடுப்பதிலும் (Fielding) தனது திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் அடிபட்டு வந்த பந்துகளில் அநேகமானவை மிக அரிதாகவே இவரின் பிடியை மீறிச் சென்றன. பந்துகளை லாவகமாகப் பிடிப்பதிலும், தடுத்து நிறுத்துவதிலும் ஜொன்டிரோட்ஸ் அசகாய சூரராகவே விளங்கினார்.

அணித்தலைவர் கெப்லர் வெஸ்ஸல்ஸ் அமைதியாகவும், அதே வேளை ஆர்ப்பாட்டமில்லாமலும் சிறிய சைகைகளின் மூலம் தமது அணியை வழி நடத்தியமை அவரிடமுள்ள அபரிமிதமான தலைமைத்துவப் பணியை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது.

இலங்கை அணியினர் டெஸ்ட் பந்தயங்களைப் பொறுத்தவரை போதியளவு அனுபவமில்லாதவர்கள் போன்றே ஆட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

ஏனெனில் பல சமயங்களில் அவசரப்பட்டு துடுப்பாட்டத்தில் ஈடுபட்டதையும், பொறுமையாக விளையாட வேண்டிய



தருணங்களில், ஒரு நாள் போட்டிகளில் போன்று விரைந்து ஆட முற்பட்டமையும், அவர்களின் டெஸ்ட் அனுபவமின்மையை வெளிக்காட்டின.

இலங்கை டெஸ்ட் பந்தயங்களில் விளையாடுகின்ற ஒரு முக்கிய நாடு என்று மார்தட்டிக் கொண்டாலும், காப்டன் அர்ஜுன ரணதுங்க, உதவிக்காப்டன் அரவிந்த டி சில்வா, மற்றும் ஏனைய ஓரிருவரைத் தவிர இலங்கை அணியினருக்கு போதியளவு டெஸ்ட் பந்தய அனுபவமும் மற்றும் வெளிநாடுகளில் விளையாடிய அனுபவமும் மிக அரிதாகவே காணப்படுகின்றது.


எனவே எதிர்காலத்தில் மேலும் கூடுதலான அளவு டெஸ்ட் பந்தயங்களை, வெளிநாடுகளில் சென்று விளையாடி, சகல விதமான சூழ்நிலைக்கும் முகங்கொடுக்கும் பக்குவத்தை இலங்கை அணி பெற வேண்டும். இதன் மூலமே ஒரு தரமான கிரிக்கெட் அணியாக சர்வதேச ரீதியில் பிரகாசிக்க முடியும்.

# பலவீனத்தால் போன் புகழ்

கவர்ச்சியான கட்டான உடல்.

ஒரு குத்துப் போதும். எதிரி நிலை குலைந்துபோவான்.

ஒவ்வொரு குத்துக்கும் ஒரு விலை இருந்தது. கோடிகள் குவிந்தன. புகழ் திக்கெட்டும் பரவியது.



பல்லாயிரம் ஆண்கள் அந்த உடல்மீது ஆர்வம் கொண்டனர். தமது உடலும் அவ்வாறு வரவேண்டும் என்று பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

பெண் ரசிகைகள் கூட்டம் அவர் செல்லுமிடமெல்லாம் மொய்த்தது. மலர்க் கூட்டத்திற்கும் ஒரு மயக்கம். அவர்தான் மைக் டைசன். குத்துச்சண்டை உலகின் ஒரு கால முடிசூடா. வேந்தன். டைசனின் பலவீனம் பெண். பலத்தைப் பலவீனம் வென்றது.

பலவீனம் இல்லாத மனிதன் அரிது. எனினும் பலவீனங்கள் பலத்தை அரிப்பதாக மாறக்கூடாது.

விளையாட்டுலகின் சாதனைவீரர்கள் சிலர் சரிந்து போனதற்கு பலவீனங்களின் வெற்றியே பிரதானம்.

மைக்டைசனின் வரலாறு வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு ஒரு பாடம். விளையாட்டுக்களில் எப்போதும் அவதானம் தேவை.

மைக் டைசனுக்கு சிறை வாழ்க்கை நிச்சயம் இனிக்காது.

டைசன் தன் விடுதலைக்குப் போட்ட மனுக்களை எல்லாம் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

இனி வெளியே வந்தாலும் முந்தைய பலம் இருக்குமா என்பது சந்தேகமே.

ஒரு சிறந்த வீரன் தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டிருப்பதுதான் கொடுமை.

நாம் குறையாத தங்க-வைர நகைகள்.
மிளிரூட்டும் எடுப்பான தயாரிப்புகள்.
குறித்த நேரத்தில் ஓடரை முடித்துத் தருவதே
எங்கள் தனிச்சிறப்பு.



அருள்
ஜுவலர்ஸ்


இல. 5, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ.பேசி: 436331




முத்திரை
பதித்த
முத்திரைகள்




தமரா
வலம்



தமரா
வலம்

புகுந்த
வீடாம்
பூமிக்கு
இயற்கை
கொடுத்த
சீதனம்.

காட்சியும்
கவிதையும்
செ. ஆனந்தராஜா
கொழும்பு-11





இன்று உலகெங்கும் உச்சரிக்கப்படும் பெயர் யாசிர் அரபாத். இஸ்ரேல்-பலஸ்தீன ஒப்பந்தத்தைவிட அரபாத் பற்றித்தான் அதிகமாகத் தெரிகிறது. அதுவே அவர் புகழுக்குக் காரணம்.

வாரமலர்
தினமுரசு

## இன்றைய நாயகன்

இன்றைய உலகின் மகத்தான கதாநாயகன் யாசீர் அரபாத்.

தினசரிகள் தினமும் அவர் பெயரைத் தாங்கி வருகின்றன.

திசையெங்கும் செய்தி சொல்லும் தொலைக்காட்சிகளிலும் அவர் முகம், அவர் பெயர்.

உலகம் அந்த மனிதரை உற்று நோக்குகிறது.

ஒரு கையிலே பிஸ்டல் மறுகையில் சமாதானத்திற்கான ஒலிவ் இலை ஏந்தி ஆர்ப்பரித்த சிங்கம் இப்போது சமாதானத்திற்காக முன்னாள் விரோதியோடு புன்னகைத்திருக்கிறது.

பலஸ்தீனத்திலும் பல குழுக்கள், இயக்கங்கள். சமாதானம் வேண்டாம். வேட்டுக்கள் மூலமே விமோசனம் என்று பிரகடனம் செய்யும் குழுவினர் யாசீர் அரபாத்தின் படங்களை கொழுத்துகின்றனர்.

துரோகி என்று தூற்றுகின்றனர்.

சிங்கம் முன்வைத்த காலை பின் வைக்கவில்லை. எனினும் இஸ்ரேல் நியாயமாக நடந்து கொள்ளுமா என்பது சந்தேகமே. எனினும் சமாதானம் என்பது கஷ்டமானதாயினும் பெறுமதியானது. முயற்சிகள் முக்கியம். தீவிரவாதிகள் பொறுத்துப் பார்ப்பதே நல்லது.



## அளவு தான் சிறிது அதன் விலை பெரிது!

இதுவும் ஒரு பேபிபென்ஸ் மோட்டார்தான். அளவு சிறிதுதான். சதுரமாக... 12 லீட்டர் ... 1997ல் ... 18, 750 அமெரிக்க டொலராகும். நமது நாட்டுப் பெறுமதி ... 18 ஆயிரத்து 750 ரூபா. ஐய்யா!



## இதுமட்டும் போதுமா?

யாழ்ப்பாணத்தில் போர் மேகம் ... துண்டுகளைப் போடும். ... மறுபுறம் இலக்கம். போரில் வெற்றியோ வெறி. ... எங்கும் ... திருவாய்த் திருவாய் ... மேலே படத்தில் ... துாபாகி ... நினைக்கவே நெஞ்சு ... எங்களுக்கு உரிமைகளும் வேண்டும். உயிர்ப்பான உணர்வுகளும் வேண்டும். மறந்து விடாதிருங்கள்.

## பழச்சுருள் ரொட்டி

தேவையானவை:

மைதா மா - 2 கோப்பை
பால் - 1 1/2 கோப்பை
வாழை, ஆப்பிள், திராட்சைப் பழங்கள் (துண்டுகளாக) - 1 1/2 கோப்பை
கஸ்ரட் பவுடர் - 1/4 கப்
முட்டை - 2
சீனி - 3 மேசைக்கரண்டி
உருகிய பட்டர் - 1 மேசைக்கரண்டி

செய்முறை:

முட்டைகளை உடைத்து ஒரு பாத்திரத்திலிட்டு நன்றாக அடிக்கவும். மாவை கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து தொடர்ந்து அடிக்கவும். இப்பொழுது சீனி, பால் மற்றும் அரைவாசி கஸ்ரட் பவுடரையும் சேர்த்து கலவை சமமான மென்மைத் தன்மை அடையும் வரை அடித்துக் கொண்டே இருக்கவும்.

ஓர் அகன்ற சோஸ்பானை அளவான சூடு தரும் அடுப்பில் வைத்து வெண்ணெயை விடவும். கொதித்ததும் சூட்டைத்தணித்து ஆறவிட்டு அதன் மேல் கலவை முழுவதையும் சமமான அகல அளவில் பாத்திரம் முழுவதும் பரவும் வகை ஊற்றவும். மெதுவாக அடுப்பின் உஷ்ணத்தை அதிகரிக்கவும். ரொட்டி போன்ற பதத்தை அடையும்போது இதனைப் புரட்டி மறுபக்கம் போடவும். ஓரங்கள் ஓரளவு பழுப்பாகும் போது தோசைக் கரண்டியால் எடுத்து வேறோர் தட்டத்தில் வைத்து துண்டுகளாக வெட்டி கோன் வடிவத்தில் சுருட்டவும். இவற்றுக்குள் பழத் துண்டுகளையும் மீதமுள்ள கஸ்ரட் பவுடரையும் கலந்து திணித்துக் கொள்ளவும்.

குழந்தைகள் மட்டுமல்ல பெரியவர்களும் இதனைச் சுவைத்துச் சாப்பிடலாம்.

